# இலங்கை எதிரொலி

★

சி. பி. சிற்றரசு

★

தமிழ் மன்றம்

தெப்பக்குளம் திருச்சிராப்பள்ளி

முதற்பதிப்பு: டிசம்பர் 1953.

உரிமையுடையது.

விலை ரூ. 1—0—0.

# பதிப்புரை

இலங்கை எதிரொலி, என்ற இந்த நூல், இலங்கையில் உள்ள அரசியல், பொருளியல், சமூக இயல் ஆகியவைகளின் விளக்கங்களையும், திராவிட முன்னேற்றக் கழகம் அடைந்திருக்கும் செல்வாக்கையும் படம் பிடித்துக் காட்டுவதைப்போல் அமைந்திருக்கிறது இச்சிறு நூல். கலை கலைக்காகவே என்றிருந்த சிங்களத்தின் பெருவாரியான கொள்கையை மறுக்கும் வகையில், 'கலை எதற்கு' என்று வானொலியில் பதிவு செய்த பேச்சும் இதில் இடம் பெற்றிருக்கிறது. இதைப் படிப்பதன் மூலம் சிங்களத்தின் வரலாற்று நுணுக்கங்களை எல்லாரும் அறிந்துகொள்ளும் அளவுக்கு தன் சொற்பொழிவின் மூலம் படம் பிடித்துக் காட்டுகிறார் சிற்றரசு. இது எக்காலத்துக்கும் பயன்படுகிற நிலையில் ஒரு சுருக்கமான வரலாறு போல் ஆக்கித்தந்த சிற்றரசு அவர்களுக்கு எமது நன்றி சொல்லிக்கொண்டு வாசகர்கள் முன் இதை வைக்கிறோம். அன்பர்கள் ஆதரவு என்றும்போல் இன்றும் நாளையும் தேவை. வணக்கம்.

**தமிழ் மன்றம்**

# முன்னுரை

**எதற்காக ?**

இந்தியாவின் எல்லைக்குள்ளேயே தனது ஆள் காட்டி விரலை நீட்டி இங்குண்டா, அங்குண்டா உமது குரல் எனக் கேட்டவர்களுக்கு, கேட்டுக்கொண்டிருப்பவர்களுக்கு, கேட்கலாமா என்று நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு, ஏன் உலகக் கண்ணோட்டக்காரர்களுக்கு, இந்தியாவில் மட்டிலுமல்ல, அலைகடலுக் கப்பாலும் அன்பர்கள் மாத்திரமல்ல, ஆதரவாளர்கள் மாத்திரமல்ல, எமது திராவிட முன்னேற்றக் கழக முத்திரை பெற்ற இளைஞர்கள் ஏராளமானவர்கள் உண்டு.

கொழும்பு கோட்டைக்கெதிரில் கம்பீரமாகப் பறக்கும் எமது கருப்பைக் காலத்தோடு மறைக்கும் சீறி மேலேறும் செந்நிறக் கொடியைப் பாரீர் என்று காட்ட சிங்களம் செல்ல நினைத்தோம். நிர்மாண வேலைகளைத் தொடங்கினோம். வலிமையை வாயளவில் பெற்ற நமது சர்க்கார், 'ஐயோ நீங்களா அங்கு செல்கிறீர்' என வாயைப் பிளந்தது ஒருதரம்.

விட்டோமா, மறுமுறை மீண்டும் நமது நோக்கம் டெல்லி பாராளுமன்றம் ஏறி கொக்கரித்தது. சரி, என்றனர் சலிப்பாக. அவர்கள் கதை அந்தத் தீவிலே

அம்பலப்படுத்தப்பட்டுவிடுமோ என்ற அச்சத்தால், நம்மை ஆவலோடு எதிர்கொண்டழைக்க ஏற்பாடு செய்திருந்த நமது இலங்கைத் தோழர்கள் ஏமாற்றத்திற்குப் பிறகு இயற்கையாக ஏற்படும் வீர உணர்ச்சிக்கிடாக எம்மவர் இங்குவர எவ்வளவு தொகைவேண்டும் என்று அதட்டிக்கேட்டனர்

இருநூறு வெண் பொற்காசுகள் தரவேண்டும் என்றனர் அச்சாரமாக. அதே நாளில் கட்டி செய்தியை ஆகாயமூலம் அறிவித்தனர்.

ஒருவாறு முடிந்தது. இனி இருக்கும் வேலை, நமது இயக்கப் பொதுச் செயலாளரான அறிஞர் அண்ணாவைக் காணவேண்டியதுதான் என 5—4—53ல் சென்னை சென்றேன் முன் அறிவிப்போடு. இயக்க வேலையாக வெளிநாடு செல்பவர்கள் இயக்கத் தலைவரைக் காண்பதும், உரிமை பெறுவதும் சட்டமா சம்பிரதாயமா என்ற ஐயமே எனக்கெழவில்லை. காரணம் இதற்குமுன் யாரும் சொல்லாததால்.

எப்படியிருந்தாலும் ஒரு அரசியல் நெருக்கடியில் இருக்கும் வேற்று நாட்டுக்குச் செல்லும் இயக்கத்தாருக்குள்ள பணியைப்பற்றி அலசி ஆராய்ந்து பார்த்துக் கொண்ட பிறகே செல்வது சாலச் சிறந்ததென எண்ணினேன். அதன்படியே அண்ணாவை அணுகினேன். தனியாக அமர்ந்து பலவற்றை பரிசீலித்தோம், அவருடைய அரிய யோசனைதான் எல்லா கட்சித் தலைவர்களையும், இந்தியத் தூதுவரைக் கண்டதும், பிரதமரைக் காண ஏற்பாடு செய்ததும்.

அதன்படியே பணிகளை வகுத்துக்கொண்டு காலம் தவறாமல் கடமையைச் செய்து முடித்தோம். போகும் போது 25 கழகங்களாக இருந்து 25 நாட்களுக்குப் பிறகு திரும்பும்போது 75 கழகங்களாக வளர்ந்ததே நாம் செய்த பணிக்குத் தகுந்த ஆறுதல் என்ற களிப்போடு இந்த கரையைச் சேர்ந்தோம். என்னோடு துணை சேர்ந்தவர் நண்பர் தங்கப்பழம். அவர் ஆற்றிய சொற்பொழிவையும் இதில் சேர்க்க எண்ணியிருந்தேன். அவரும் குறிப்பெடுத்து வைத்திருந்தார். எதிர்பாராதவிதமாக அவர் சிறையிலே வாடவேண்டிய அவலநிலை ஏற்பட்டதால் இதில் அவர் சொற்பொழிவு இடம்பெற முடியவில்லை.

நாங்கள் அங்கு தங்கியிருந்தவரை இரவு 4, 5 மணி நேரங்கள்போக மற்ற நேரங்களெல்லாம் ஒரு பொதுக் குழுவைப் போலவே இருந்தது. யார் எங்களை வந்து பார்க்கத் தவறினலும் பொதுவுடமைத் தோழர்கள் தவறுவதில்லை. அவ்வளவு நாட்கள் விவாதித்தும், அவர்கள் எங்களையோ நாங்கள் அவர்களையோ சரிப் படுத்த முடியவில்லை. அந்த எண்ணத்தால் விவாதம் தொடங்கவுமில்லை. மாலை நேரங்களில் ஒரு பொழுது போக்குபோல் முடிந்தது அந்த விவாதம்.

இதில், பற்பல தலைப்புகளில் பேசப்பட்ட கருத்துகளை வெளியிடுவதின்மூலம் அந்த நாட்டு அரசியலைப் பற்றியும், அந்த நாட்டில் உள்ள நம் மக்களின் நிலையைப் பற்றியும் தெரிந்துக்கொள்ள பொதுமக்களுக்கும், குறிப்பாக நமதியக்கத் தோழர்களுக்கும், சிறப்பாக நமது

சொற்பொழிவாளர்களுக்கும் வசதியாக இருக்கும் என்ற நோக்கத்தோடு இதை வெளியிடுகிறோம். அன்பர்கள் ஆதரவுக்கு என் நன்றி.

உங்களன்புள்ள,

சி. பி. சிற்றரசு.

# இலங்கை எதிரொலி.

**18—4—53ல் கொழும்பு நகர இரத்தின பூங்காவில் இலங்கை மத்திய திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளர் மணி அவர்கள் தலைமையில் அளித்த வரவேற்புக்கு அளித்த நன்றியுரை.**

தலைவர் அவர்களே! தோழர்களே! உங்களனைவர்க்கும் தென்னாட்டின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வணக்கம். நான் நேற்று இரட்மலானுவிமான நிலையத்தில் வந்திறங்கியபோது, பல நிருபர்கள் என்னை சந்தித்து தாங்கள் இரண்டு மணி நேரத்தில் திருச்சியிலிருந்து வந்துவிட்டீர்கள் அல்லவா, உங்கள் நாட்டில் ஜனநாயகம் எப்படி நடந்துகொண்டிருக்கிறது என்று கேட்டனர். நான் இங்கே வந்து சேர்ந்ததாகத் தாங்கள் கருதிக்கொண்டிருக்கும் இரண்டு மணி நேரத்திற்கும், எங்கள் நாட்டில் இன்று இயங்கிக்கொண்டிருக்கும் ஜனநாயகத்திற்கும் மிக்க தொடர்புஉண்டு என்றேன்; கொஞ்சம் விளக்கமாகச் சொல்லவேண்டுமென நிருபர்கள் கேட்டனர். விளக்கத்தையல்லவா கேட்கின்றீர் கேளுங்கள்! நான் இரண்டு மணி நேரத்தில் வந்துவிட்டதாக முன்னே குறிப்பிட்டிருந்தீர்கள். ஓரளவுக்கு அது உண்மைதான் என்றாலும் எங்கள் நாட்டு ஜனநாயக முறைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நான் இரண்டு மணி நேரத்தில் இங்கே வரவில்லை. 14 மாதங்களாக பிரயாணம் செய்திருக்கின்றேன். அதாவது 1952 பிப்ரவரி திங்கள் பாஸ்போர்ட் வாங்கினேன். விஸா ஒருதரம் மறுக்கப்பட்டது.

அதுதான் எங்கள் கழகத்தார் மாநாடு ஏற்பாடு செய்து ஏமாற்றமடைந்துபொதுமக்கள் மனப்புண்ணுக்குஆளான நேரம். இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தாரே இப்படி ஏதோ திராவிடத்திலிருந்து வருகிருர்கள் என்று வீண் புரளி செய்கின்ருர்கள் என்று இன்று வரை நினைத்துக்கொண்டிருந்த சந்தேகத்தை இன்ருேடு விட்டுவிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றேன். மாநாட்டுக்கு நாங்கள் புறப்படுவதற்காகஅவரவர்கள் ஊரிலிருந்து புறப்பட்டுப்போய் எல்லாரும் சென்னையிலே கூடியிருந்தோம். இங்கிருந்தும் விமானப் பிரயாண சீட்டுகள் வாங்கியும் அனுப்பியிருந்தார்கள். மறுநாள் காலை விமானத்தில் புறப்படுவதுஎன்று எல்லா ஏற்பாடுகளும் செய்தானபிறகு,திடீர் என்று முந்திய நாள் பிற்பகல் இரண்டு மணிக்கு எங்கள் விஸா மறுப்பு தாக்கீது கைக்குக் கிடைத்தது. திடுக்கிட்டோம். நிலைமையை டெலிபோனில் விளக்கிளுேம். அதற்கு குற்றவாளிகள் இலங்கை திராவிட முன்னேற்றக் கழத்தாரல்ல. எங்கள் அரசாங்கமும் தன்மேல் பழியை போட்டுக்கொள்ளாமல், உங்கள் இலங்கை அரசாங்கத்தின்மேல் பழியை சுமத்தி, இலங்கையில் அப்போது தேர்தல் நடந்துகொண்டிருப்பதால், குடியேற்ற வெளியேற்ற அதிகாரி, நீங்கள் இலங்கை வருவதைத் விரும்பவில்லை என்று சொல்லி தப்பிக்கொண்டது.

பிறகு இதே பிரச்சினையை டெல்லி பார்லிமெண்டில் வைத்தோம். நேரு அவர்கள் வழக்கமாக சொல்வதைப் போல் எனக்கொன்றும் தெரியாது என்று சொல்லியிருந்தாலும் கொஞ்சம் தப்பித்துக்கொண்டிருப்பார். திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் யாரும் இலங்கைக்குச் செல்ல அனுமதி கேட்கவில்லை, நாங்கள் மறுக்கவுமில்லை. என்று சர்வாதிகாரத் தொனியில் சொல்லிவிட்டார். பிறகு நாங்கள் அனுமதி கேட்டதையும், சர்க்கார் தந்த

பதிலையும் படம் பிடித்து பத்திரிகையில் போட்டு மீண்டும் டெல்லி சட்டசபையில் நேரு அவர்களுக்கு இவைகளைக் காட்டியபிறகு, மன்னிக்கவேண்டும், எனக்குத் தெரியாது" என்று அவர் சொல்லியதையும் இறுதியாக வர அனுமதி கிடைத்ததையும் நீங்கள் அறிவீர்கள். இதை ஏன் நான் இவ்வளவு விளக்கமாகச் சொல்லுகிறேன் என்றால் நான் இரண்டு மணி நேரத்தில் சுலபமாக வந்துவிட்டேன் என்று கருதிக்கொண்டிருந்த நிருபர்களுக்கு எங்கள் நாட்டு ஜனநாயகம் எவ்வளவு ஆமை வேகத்தில் நடக்கிறது என்பதை நீங்களறியவேண்டும் என்பதற்காகவே இதைச் சொல்லவேண்டியவனாய்விட்டேன். மற்றபடி இதை எங்கள் சர்க்காரை இந்த 500 மைல்களுக்கப்பால் குறைகூற வந்திருக்கிறோம் என்று தவறாக நினைத்துக் கொள்ளக்கூடாது. ஒரு சர்க்காரை குறை கூறுவது எங்கள் தி. மு. கழகத்தின் வேலையல்ல. கொடிய செயலை எதிர்த்து சிறை செல்ல வேண்டிய வேலை எங்களுடையது. சிறை செல்வதின் மூலம் வரும் நன்மைகளை மக்களுக்குப் பொதுவாக்கி, கிடைக்கும் துன்பத்தை மாத்திரம் ஒவ்வொரு திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டனே தனியாக அனுபவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றான் என்பதும் அத்தகு வீரமும், ஆற்றலும் உடைய மலரையே திராவிட முன்னேற்றக் கழகம் இதுவரை கண்டிருக்கிறது. கோழைகளுக்கும், குள்ளமதிப்பினருக்கும், சுயநலமிகளுக்கும் சோம்பேறி விளம்பரப் பிரியர்களுக்கும் கொஞ்சங்கூட இடமில்லாமலாக்கி பணத்தால் கட்சியில் இடந்தேடுபவர், படாடுபத்தால் கட்சியில் முன்னணியில் நின்று பின்னால் நிற்கும் உண்மையான தொண்டர்களின் நிழல் கூட பொதுமக்களுக்குத் தெரிய ஒட்டாமல் தடுத்துக் கொண்டிருந்தவர்களை வழியனுப்பி தூயத்தொண்டுள்ளம் கொண்டுழைக்கும் நல்ல வாலிபர்களைக் கொண்டிருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம்.

இலங்கையிலாகிலும் வயதானவர்கள் யாராவது தி. மு. க.வில் இருக்கின்ருர்களா என்று எனக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்ட அனைவரையுமே பார்க்கும்போது எல்லாருமே இளைஞர்கள், மனம் பூரித்தேன். வயோதிகத்துக்கு நான் விரோதியல்ல—நாம் விரும்பிளுலும் விரும்பா விட்டாலும் வயோதிகம் நம்மைவிடப் போவதில்லை. ஆனல் வாலிப பருவத்தில் வயோதிக உள்ளம் படைத்தவர்களே எனக்குப் பிடிக்காது. வாழ்க்கை பூவிரித்த மஞ்சமல்ல, சேவை பம்பரம், என்கிருன் ஒரு அறிஞன். அதேபோல் நாம் கடந்து செல்லவேண்டிய எவ்வளவோ தொலைவான பாதையை தைரியமாகக் கடந்து செல்ல வாலிபர்கள் மிகமிகத் தேவை என்று கணிக்கும் போது, இலங்கையில் கண்ட இளைஞர்கள் அனைவருமே நமது பணிக்கு ஆக்கங்கொடுக்கக்கூடிய ஆற்றல்மிக்கவர்களாயிருந்ததைக்கண்டு மேலும் எங்கள் பூரிப்பு எண் மடங்காயிற்று. திராவிடத்திலே இருந்து இங்கு யாரும் தி. மு. காவின் சார்பில் வராமலே இவ்வளவு திறமையோடு இயக்கம் வளர்ந்திருப்பதற்குக் காரணம், இங்குள்ளோர் தீவிர முயற்சியும், அங்கிருந்து எழுத்துக் குவியல்களை எண்ண உருவில் ஏந்திவந்த ஏடுகளும் எண்ணற்ற கருத்தமைந்த நூல்களும், உங்கள் அனைவர் உள்ளத்திலும் குடிகொண்டிருக்கின்ற அண்ணுவின் அறிய சேவைகளுமே என்பதை இந்த அடைமழையிலும் ஆயிரக்கணக்காக கூடியிருக்கும் உங்கள் ஆர்வம் காட்டுகிறது. நாங்கள் நனைந்துவிடக்கூடாது என்று பல தோழர்கள் குடைகளை விரித்து பிடித்தார்கள். இவர்கள் அன்புக்கு என் நன்றி. ஆனல் கூட்டத்தில் இருக்கின்ற உங்களைப் பார்க்கும்போது திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் வாசிகளையே இங்கு மீண்டும் பார்ப்பதைப் போலிருக்கிறது. ஆனல். திராவிடத்தில் நெடுநாட்கள் பார்க்காத ஒன்றை இங்கே பார்க்கின்ருேம். அதுதான் மழை. அதையும் நாங்

கள் பார்க்காமல் அன்பு பெருக்கால் உங்கள் கொடை களின் மூலம் மறைக்காதீர்கள் என்று உங்களை தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். மழையை நீங்கள் பார்த்துப் பார்த்து பழகிவிட்டவர்கள். நாங்கள் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பார்த்து பரவசமடைபவர்கள். ராஜாஜி வந்தபிறகு மழை பெய்யவில்லையா என்று ஒரு தோழர் கேட்கிருர்! உண்மைதான். அவர் வந்த பிறகு மழை மாத்திரம் பெய்யவில்லை, பெரும்புயலும் அடித்து மரங்கள், வீடுகள் ஒன்றுமே இல்லாமல் கதிர்காமம் போய் வந்தவன் தலைபோலிருக்கிறது. மழை பெய்த பெருமையை தோழர், ஆச்சாரியாருக்கு அளிக்கவேண்டிய கவலையில் ஆழ்ந்திவிட்டார். அதை வேண்டாமென்று சொல்லும் அவ்வளவு சுயநலக்காரர்கள் அல்ல நாங்கள், கடல் போன்ற ஒரு பெரிய திராவிட சமுதாயமே விரும்பத் தகாத பல பெருமைகளை ஆச்சாரியாரின் வர்க்கத்துக்குக் கண்மூடித்தனமாக அளித்து அந்த மீளாத உளைச் சேற்றி விருந்து தப்பித்துக்கொள்ள மார்க்கமில்லாமல் திண்டாடி தெருவில் நிற்கும் பல கோடி திராவிட மக்களை மீட்பதற் காகவே தி. மு. க. சமுதாயத் துறையில் பாடுபட்டுக் கொண்டுவரும்போது ஒரு மழையின் பெருமையை ஆச்சா ரியாருக்களிப்பதிலே எங்களுக்கு எவ்வித வேற்றுமையு மில்லை. இது எந்தவித பொருளாதார அடிப்படையிலும் ஏற்படாத புகழ் மாற்ற வியாபாரம் ஆகையால் கேள்விப் பட்ட தோழர் ஆச்சாரியாருக்கு புகழைத் தேடிக் கொடுப் பதில் எந்தவிதமான கமிஷனையும் எதிர்பார்க்கக் கூடாது என்று மட்டிலும் தோழருக்குச் சொல்லிக் கொள்கின் றேன்.

அடுத்தபடியாக நாங்கள் இங்கே வருவதற்கு முன்னே, "இந்தியாவிலிருந்து இரண்டு நாத்தீகர்கள் வரு கிருர்கள், வருகிருர்கள் எச்சரிக்கை" என்று அறிவிக்கப்பட்

டிருந்தது. இப்படி சொல்லுகிற தோழர்கள் வாழும் இந்த சிங்களம் சுத்தோதனன் மகன் சித்தார்த்தனுடைய (புத்தன்) சிறந்த கொள்கையுடைய நாடென்பதையும், புத்த விகாரங்களுக்கே முதலிடம் தந்திருக்கிற நாடென்பதையும் யாரும் மறந்துவிடக்கூடாது. புத்தன் நாத்திகனு ஆத்திகனு என்ற சந்தேகத்துக்கு இடம் வைக்காமல், ஆண்டவனைப்பற்றிக் கவலைப்படாதே என்று ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குமுன் சொல்லிமுடித்து விட்டார். எனினும் அப்பேரறிஞனை யாரும் ஒதுக்கித் தள்ளி விடவில்லை. அவன்பால் பர்மிய அரசாங்கம் கொண்ட அன்பின் காரணத்தால் தேங்காய் அளவுள்ள வைரம் ஒன்றை இலங்கைக்கு அனுப்பித் தந்ததையும், அதை அனுராஜபுரத்திலிருக்கிற புத்த கோபுரத்தின்மேல் வைத்திருப்பதையும் நீங்கள் அறிவீர்கள். ஆண்டவனை இல்லை என்று சொல்பவனைத்தான் நாத்தீர்கள் என்று சொல்லுவதாக நீங்கள் கருதுகிறீர்கள். உண்மைக்கு அது நேர் விரோதமானது. ஆண்டவனை இல்லையென்று சொல் பவன்தான் நாத்திகன் என்று இந்தியப் புராணங்கள் எதி லும் காணப்படவில்லை. எவன் ஆண்டவனைப்பற்றி சந்தே கப்படுகின்ருனே, எவன் ஆண்டவனல் சொல்லப்பட்ட தென்ற சுருதிகளையும், எவன் அவனடியார்களால் சொல் லப்பட்டதாக இருக்கும் சிறு மிதிகளையும் அறிவோடு ஆராய்ந்து பார்க்கின்ருனே அவனே நாத்திகன் என்று சொல்லப்படுகிறது. ஆண்டவனல் படைக்கப்பட்டது இவ் வுலகம். ஆண்டவனல் படைக்கப்பட்டனர் மக்கள். ஆண்டவனல் படைக்கப்பட்டன பல்வேறு பொருள்கள். வாதத்துக்காக உண்மையென்று வைத்துக்கொண்டால் நாங்கள் இலங்கைக்கு வரவும், இலங்கைத் தோழர்கள் இந்தியா வரவும் அனுமதி தேவையில்லை. யாரும் எங்கே யும் எப்போதும் போகலாம். காரணம், இந்த உலகம், உலகத்தில் தோன்றுகிற அணு எல்லாம் ஆண்டவனல்

படைக்கப்பட்டவைதானே. அப்படியிருக்க ஏன் ஒருவன் ஒரு நாட்டிலிருந்து மற்ருேர் நாட்டுக்குப் போகத் தடை என்பதையும் நீங்கள் தீர ஆலோசிக்கவேண்டும். ஆகவே மனித வர்க்கம் செம்மையாக வாழ வேண்டுமாஞல், ஆண் டவஞல் இடப்பட்ட கட்டளைகள் என்று மனப்பாடம் செய்திருக்கிற உங்கள் உள்ளக்கிடக்கையைக் கடந்து நாம் அனைவரும் வெகுதூரம் செல்லவேண்டியவர்களாய் விடுகிருேம்என்பதையும் நம்மில் யாரும் மறுப்பதற்கில்லை.

ஆண்டவன் சொல்லியதாகச் சொல்லும் எதையும் நாம் கடைப்பிடிப்பதில்லை. அன்பாயிரு என்ருர் கடவுள் என்று வைத்துக்கொள்வோம். இந்த தத்துவம் திருட னுக்கும் போலீஸ்காரருக்கும் இடையிலே நிலைநிற்குமா. திருடனிடம் போலீஸ்காரர் அன்பாயிருந்தால் பொருள் நஷ்டம் யாருக்கு. கொடியவனிடத்திலும் கொலைகாரனி டத்திலும் அன்பு காட்டுவதாயிருந்தால் மக்கள் அமைதி யான வாழ்க்கையை நடத்தமுடியாதே. ஆகையாலே தான், ஆண்டவன் கட்டளைக்கு அப்பாற்பட்டதான பல வற்றை சமுதாயம் செய்யவேண்டி வந்ததால், எல்லாம் ஆண்டவன் செயல் என்று சொல்லிவிட்டோம். இதை யாவது கடைசிவரையில் கடைபிடிக்கின்ருர்களா என்ருல் அதுவும் இல்லை. ஏனெனில் எல்லாம் ஆண்டவன் செயல்தான் என்ருல் நாங்கள் இப்படி பேசுவதும் ஆண்ட வன் செயல்தானே, அதை மாத்திரம் நீங்கள் ஏன் ஒப்புக் கொள்வதில்லை. ஆகவே இந்த பிரச்சினைகள் இன்னும் உலக மக்களால் தீர்க்கப்படாத பிரச்சினை. இன்னும் எத்தனை நூற்ருண்டுகள் நாம் முயன்ருலும் தீர்க்க முடியாத பிரச்சினை. இந்த சந்தேகம் தீர்க்கப்பட்டால்தான் உலகம் இரண்டாவது அடி எடுத்துவைக்கும் என்பது தேவைப்படாத பிரச்சினை. இந்த பிரச்சினை தீர்க்கப்பட்ட பின்புதான் நாங்கள் எங்கள் தொழில்களை கவனிப்போம்

என்று யாரும் கைகட்டிக்கொண்டுவாளாயிருப்பதில்லை, இருக்கவுமில்லை. ஆண்டவன், நம்மை வட்டி வாங்கச் சொல்லவில்லை. பொருள்களுக்கு லாபம் சம்பாதிக்கச் சொல்லவில்லை. வழக்குத் தொடரச்சொல்லவில்லை. வம்பு பேசித் திரியச்சொல்லவில்லை. இது அவ்வளவை யுமே அன்றாடம் செய்துகொண்டிருக்கிறோம். ஏன் நம் முடைய வளர்ச்சிக்கு இவைகள் நீக்கமுடியாத தேவைக ளாய்விட்டன. இனி அவைகளை நீக்கி மகா புனிதத்தன் மையோடு மனிதன்வாழ்வதென்பது ஒருக்காலும் முடியாத காரியம். ஆண்டவன் கட்டளைக்கப்பால் போய் நாம் கண்ட அந்த ருசிகள் எளிதிலும், எப்போதும் விடமுடி யாதவை. ஆகவே இந்த மாதிரியான சிலந்திக்கூண்டில் அகப்பட்டுக்கொண்டிருக்கிற நாம், தீர்க்கப்படாததும், தீர்க்க முடியாததும், தீர்க்கத் தேவையில்லாததுமான அருவசியமான பிரச்சினையில் குதித்து அன்பைப் போக்கிக் கொள்வதால் யாருக்கும் பயனில்லைஎன்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நோக்கமாகும். அரசியல் துறையிலே திராவிடம் தனியாக பிரியவேண்டுமென்பது நீங்கள் அனைவரும் அறிந்ததே. திராவிடநாட்டுப் பிரிவி னைக்கு இலங்கைவாழ் திராவிடர்கள் எந்தவகையில் உதவி செய்யலாம் என்பதை மட்டிலும் அறிந்துவரும்படி அண்ணா எங்களை அனுப்பி வைக்கவில்லை. எந்த நேரத்தி லும் கப்பல் ஏறவேண்டிய நிலையில் இங்கே சட்டத்தின் முன்னே குற்றவாளிகளாக நிறுத்தப்பட்டிருக்கிற ஏழு லட்சம் திராவிடத் தோழர்களுக்கு திராவிட முன்னேற் றக் கழகம் எந்த வகையில் உதவி செய்யலாம் என்பதை யும் அறிந்துகொண்டு வரும்படி தி. மு. கழகத்தின் பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் சட்ட ரீதியாக எங்களை அனுப்பிவைத்திருக்கின்றார்கள். ஆகவே இங்கே நாங்கள் இருபது நாட்கள் தங்கி மலைநாடுகளைச் சுற்றி

அங்கே இருக்கும் தோட்டத் தொழிலாளிகளின் நிலைமையை நேரில் உணர்ந்து, ஆங்காங்கே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்ற இருபது கூட்டங்களில் கலந்துகொண்டு, இங்கே இருக்கும் பல்வேறு கட்சித் தலைவர்களையும், இந்தியத் தூதுவரையும், பிரதமரையும் சந்தித்துப் பேச ஏற்பாடு செய்து தரும்படி இலங்கை தி. மு. க. பொதுச்செயலாளரைக் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். எங்கள் சுற்றுப்பிரயாணமும் முடிந்து இறுதியில் விடைபெற்றுக்கொள்வதற்காக காலிபேசில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் பொதுக் கூட்டத்தில் எங்களுடைய முழுக் கருத்தையும், இலங்கையின் நிலமையும் விரிவாகச் சொல்லுகின்றோம் என்று உறுதிகூறி, எங்களை வரவேற்பதற்காக இந்த அடைமழையிலும் ஆயிரமாயிரமாகக் கூடியிருக்கும் உங்கள் பேரபிமானத்துக்கு எங்கள் அன்பை ஈடாக்கி, நாங்கள் இங்கே வருவதற்காக பெருந் தொல்லைபட்டு கடைசியில் நீங்கள் தந்த பேராதரவால் முழு வெற்றியடைந்து மேலும் மேலும் நமக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளித்த இலங்கை தி. மு. கழக நிர்வாகிகளுக்கு என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

## 19—4—53

**இலங்கை கிராண்ட் பாஸ் திராவிட முன்னேற்றக் கழகத்தார் நகர மண்டபம் வரையிலும் சுமார் நான்கு மைல் தூரம் பெரியதொரு ஊர்வலம் நடத்தி நகர மண்டபத்தில் தோழர் T. M. பீர்முகம்மது அவர்கள் தலைமையில் நடத்திய சொற்பொழிவின் சுருக்கம்!**

குறிப்பு:—(இதுவரை இந்த மண்டபத்தில் இவ்வளவு கூட்டம் எப்போதுமே நடந்ததில்லையென்று, இலங்கையில்

**நடக்கும் வார இதழான 'சுதந்திரன்' பத்திரிக்கையின் ஆசிரியர் சிவநாயகம் அவர்களால் போற்றப்பட்ட கூட்டம் இது. மண்டபம் வழிந்து வெளிவராண்டாவிலும், புல்தரையிலேயும் ஆயிரக்கணக்கானவர்கள் கூடியிருந்தனர். இந்த கூட்டத்தையும், ஊர்வலத்தையும் பார்த்து திகைத்துப்போன ஒரு தினசரி, இதுவரை நமது கழகச் செய்திகளை இருட்டடிப்புச் செய்திருந்தது இன்று முதல் செய்திகளை ஒழுங்காகப் போடத் தொடங்கியது ஒன்றே ஊரில் பரபரப்பை உண்டாக்கி விட்டது. பத்திரிக்கையை பார்த்து வியப்படையும் அளவுக்கு நமது கழகத்தின் செல்வாக்கு இலங்கையில் வளர்ந்திருக்கிறதா என்ற நிலையை பொதுமக்கள் அடைந்த பிறகு அனைவருடைய கண்ணோட்டமும் நமது கூட்டங்களின்மேல் விழத் தொடங்கியது என்றால் மிகையாகாது.]**

தலைவர் அவர்களே! தாய்மார்களே! தோழர்களே! வணக்கம். இந்தியாவில் இருந்துவந்தவர்கள் என்ன சொல்லப்போகின்றார்கள் என்பதையறிய அதிக ஆவலோடு, மலர்ச்சி கொண்ட முகத்தோடு வீற்றிக்கின்றீர்கள். சுமார் நான்கு மைல்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்ட உங்களில் யாருக்கும் சலிப்புத்தட்டியதாகத் தெரியவில்லை. பல இன்னல்களுக்கு இடையே எதிரியை வீழ்த்திய வீரன் துண்டிக்கப்பட்ட தன் காலையும், சேதமடைந்த தன் கையையும், குருதி கொட்டிக் கொண்டிருக்கும் தன் உடலையும் பார்த்து கவலைப்படுவதில்லை. எதிரியை வீழ்த்திய ஒன்றை நினைத்தே அவன் களிப்பு கொள்கின்றான். தோள்கள் விம்மி மனம் பூரிக்கின்றான். தன் எதிரில் குவிக்கப்பட்டிருக்கும் பிணங்களைக் கண்டு அவன் கண்கலங்குவதில்லை. ஆனந்தக் கண்ணீர் சொரிகின்றான். இரத்தந் தோய்ந்த வாளை முத்தமிடுகின்றான். நொண்டிக் கொண்டு சென்றாகிலும் தன் வெற்றியை தளகர்த்தனுக்குச் சொல்கின்றான். அதேபோல் ஊர்வலம் வந்துகொண்

டிருந்தபோது கொஞ்சதூரம் வெய்யிலாக இருந்தது வேர்த்துவிட்டோம். மீண்டும் மழை பெய்தது நனைந் தோம்; வர வர ஜனத்திரள் அதிகமாயிற்று கூட்டத்தில் நசுங்கினீர். "திராவிட நாடு திராவிடருக்கே" என்ற பேரொலி, வங்கத்திலிருந்து எண்ணூறு பேர்களோடு இங்கு வந்த விஜயன் எழுப்பிய சங்கொலியையும் தோற் கடித்துவிட்டது. அதற்குப் பிறகு தென்னகத்திலிருந்து வந்து படையெடுத்த ஏலாலன், அவனுக்குப் பிறகு வந்த கரிகாற் சோழன், ஆகியோர் எழுப்பிய இரண பேரிகையின் முழக்கத்தையும் மங்கவைத்துவிட்டது.

'யாரோ ஒரு கழகத்தாராம். என்னமோ ஊர்வலம் ஒன்று நடத்தப் போகிறார்களாம். அதற்கு கூட்டம் எங்கே சேரப் போகிறது' என்று அனுவசியமாக போலீஸ் அதிகாரிகள் நினைத்ததின் காரணமாக முதன்முதலில் இரண்டு போலீஸ்காரர்களே வந்தார்கள். ஒரு மைல் ஊர்வலம் வருவதற்குள் பெருகிய ஜனத்திரளைக் கண்டு கொழும்பின் பல்வேறு பகுதிகளில் வேலை பார்க்கும் போலீஸ் உயர்தர அதிகாரிகள் அனைவருமே ஊர்வலத் தைக் கண்காணிக்க வேண்டிய நிலையை நிர்ப்பந்தமாக ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாய்விட்டார்கள். ஏன் நம்மைப் பிடிக்காத தோழர்களேகூட உணர்ச்சி வசப் பட்டு பராசக்தி பட்சே ஜெயவே வா! சிங்களம். (பராசக்தி கட்சி வாழ்க') என்றனர். உணர்ச்சி ஒரு தொத்து நோ யைப் போன்றது. நம்முடைய கருத்துகள் படிக்காத வர்கள்கூட சில நேரத்தில் தங்களையும் அறியாமல் கை தட்டி விடுவார்கள். இது இயற்கை. அவர்களுக்கும் என் நன்றி. நாங்கள் இந்தியாவிலிருந்து கொண்டுவந்திருக் கின்ற செய்திகள் இரண்டு ஒன்று:—வடவரின் ஆதிக்கம்! மற்றொன்று-தென்னாட்டார் தேம்பல். இந்த இரண்டு செய்திகளின் அடிப்படையிலே எழும்பியதுதான் திரா

விட நாட்டுப் பிரிவினைக் கோரிக்கை, தென்னகத்திலே வடவர் சுரண்டுகிருர்கள் என்று சொல்லும்போதே. இலங்கையில் தமிழர்கள் சுரண்டவில்லையா என்று ஒரு தோழர் கேட்டிருக்கின்ருர். உண்மைதான் பணத்தை சுரண்டுபவர்களை தாராளமாக விரட்டட்டும். ஆனல் யால் சுரண்டுபவனை விரட்டாதே என்கிறேன். சுரண்டுதல் என்ற வார்த்தை வந்தவுடனே அதற்குப் பொதுவாக கொள்ளையடிப்பது என்ற கருத்துத்தான் அகராதியில் இருப்பதாக தோழர் தவருக நினைத்துக்கொண்டிருக்கின்ருர். அவர் அகராதியைப் பார்க்காமல் இருந்திருக்கலாம். ஆனல் அவர் தன் அறிவையாகிலும் கேட்டிருக்க வேண்டுமே. கொழும்புவின் மிகப் பெரிய மூலதனத்தோடு நடத்தப்படும் விலையுயர்ந்த வியாபாரங்கள் முப்பத்தி ஐந்து மார்வாரிகளிடம் அடங்கியிருக்கின்றதென்று தோழருக்கு தெரியாதென்று நினைக்கின்றேன். இன்று ஞாயிற்றுக்கிழமை வியாபாரத்துக்கு ஓய்வே தவிர வெளியே தொங்குகிற விளம்பரப் பலகைகளுக்கு ஓய்வில்லை. இந்த கூட்டம் முடிந்ததும் தோழர் கடைத் தெருவை ஒரு சுற்று சுற்றி வந்து பார்க்கட்டும், யாருடைய பெயர்கள் இருக்கின்றன என்பதை. சில முஸ்லீம்கள் பெயரும், நம்மவர்கள் பெயரும் இல்லாமலில்லை. ஆனல் இங்கே வியாபாரத்தின் மூலம் பணம் சுரண்டுகின்ருர்கள் என்பதற்கும் இந்தியாவில் தென்நாட்டை வடநாட்டு மார்வாடிகளும் முல்தானிகளும் சுரண்டுகிருர்கள் என்பதற்கும் அதிக வித்தியாசமுண்டு. இங்கே இருக்கும் வியாபாரிகள் திறமையின் காரணத்தால் என்று வைத்துக்கொண்டால், தென்னுட்டிலே இருக்கும் வியாயாரிகள் மத்திய சர்க்காரின் சலுகையால் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். இந்தியாவில் நடக்கும் சர்க்கார் நம்மினத்தாரால் நடத்தப்படுவது என்ற நம்பிக்கை அவர்களுக்கிருப்ப

தைப் போலவே சிங்கள சர்க்காரின் அபிமானத்தைப் பேற வேண்டுமென்பதற்காக, இங்கே மக்கள் குடி உரிமை பெற வேண்டுமென்பதற்காக நடத்திய போராட்டத்தில் மக்களுக்கு ஊக்கமளிப்பதற்குப் பதிலாக சர்க்காருக்கு ஊக்கமளித்தார்கள். அந்த 35 மார்வாடிகளின் உயர்வுக்கே ஒரு ஆங்கிலப் பத்திரிக்கை இலங்கைக்கு வந்து கொண்டிருக்கின்றது. அவர்களுக்கு ஏதாவது துன்பம் நேர்ந்தால் நேரு அவர்கள் இவ்வளவு ஆமை வேகத்தில் நடக்கமாட்டார். காஷ்மீர் பிரச்சினையை தீர்த்துவைக்க எத்தனைதரம் சென்றிருக்கின்றார். ஏன்? தான் பிறந்த நாடு. தன் இனத்தார் வாழும் களம். அந்த களத்தில் குருதிச் சிந்தக் கூடாதே என்பதற்காக பலமுறை அங்கே ஓடுகின்றார். இங்கே இலங்கை இந்தியர் காங்கிரசைத் தொடங்கி வைக்க 1939ல் ஒருமுறை வந்திருக்கின்றார். அதன் பிறகு அவர் இங்கே வரவில்லை. எந்த நேருவால் இலங்கை இந்தியர் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டதோ, அதே இலங்கை இந்தியர் காங்கிரஸ் சத்தியாகிரகத்தைத் தொடங்கி இரத்தம் சிந்திக்கொண்டிருந்தபோது நேரு கேட்டும் கவலை கொள்ளவில்லை. காரணம்: தடியடிப் பட்டவர்கள் காணாத தூரத்தில் காரில் கொண்டுபோய் விடப்பட்டவர்கள், காலை முதல் மாலை வரையில் சிறையில் அடைபட்டு குடிக்கத் தண்ணீர் கேட்டும் பெற முடியாமல் தத்தளித்தவர்கள் நேருவின் சந்ததியாரல்ல. ஆகவே அவருக்கு அவர்களைப்பற்றி கவலை பிறக்கவில்லை என்று பகிரங்கமாக குற்றஞ்சாட்டுகிறோம். அதை வகுப்பு வாதம் என்கிறார்கள். முழுமனதோடு ஏற்றுக்கொள்கிறோம். வகுப்புகள் இருக்கும்வரை வாதம் இருந்து கொண்டுதான் இருக்கும். வகுப்புகள் ஒழிந்தால் வாதம் நிச்சயமாக ஒழிந்துவிடும். அதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம். நீதி மன்றத்தில் ஒரு வழக்கு எதுவரையில்

நடத்துகொண்டிருக்கும் வழக்கு ஒரு முடிவுக்கு வரும் வரையிலும், நீதிபதியிடம் அந்த வழக்கு ஒரு தீர்ப்பைப் பெற்றுவிட்டால் பிறகு இந்த வழக்கைப்பற்றிய வாதப் பிரதிவாதங்கள் எழாது. எழக் காரணமுமில்லை. அதே போல் வகுப்புப் பூசல்கள் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கும்வரையில் அதைப்பற்றிய வாதங்கள் கிளம்பிக்கொண்டேதானிருக்கும். உள்ள நோயையறியாமல் வேறோர் மருந்தைக் கொடுத்து நோயாளியையும் சாகடித்து தன் மருத்துவத்தொழிலுக்கும் கெட்டபெயரைத் தேடிக் கொள்வதைப் போன்றவர்கள் அல்ல திராவிட முன்னேற்றக் கழகத்தார். ஆகவேதான் மற்றக் கட்சிகள் பேசப்படுகிற ஒன்றை நாம் எடுத்துப் பேசுகின்றோம். வகுப்புகளைப் பற்றி பேசினால் எங்கே கட்சி சீர்குலைந்துவிடுமோ என்று பயந்துகொண்டு நாளுக்கு நாள் அருகிற்போய்க்கொண்டிருக்கும் ஒரு கட்சியின் கண்முன்பாலேயே வகுப்புகள் ஒழியவேண்டுமென்று பேசிப் பேசி வளர்ந்துகொண்டிருக்கிறோம்! இந்த இரண சிகிச்சையை செய்ய அவர்களுக்கு பயமாயிருந்தால் எங்களிடம் பழகிக்கொள்ளலாம். பழகிக்கொள்ள இஷ்டமில்லையானல் சும்மாயிருந்துவிடலாம். அவர்கள் இதை எல்லாம் செய்வதை விட்டுவிட்டு எங்களிடம் குறை காண்பதிலேயே அவர்கள் கட்சியை வளர்த்துவிடலாம் என்பது பெரிய மரத்தின் நிழலிலே பயிரினங்களை வளர்க்க நினைப்பதைப் போன்றதாகும். மர நிழலில் பயிரினங்கள் வளர்வதில்லை என்ற தாவர நுட்பத்தை யறியாதவர்கள்தான் நமது போக்கைக் கண்டிக்க முன்வந்திருக்கின்றனர். அவர்களை அவர்களுடைய தவருன போக்கிலேயே விட்டு நாம் நம் பணியினை மேலால் நடத்திச் செல்வோம். கட்சிகளை வளர்ப்பது என்ற கவலையைவிட இங்கே கஷ்டப்படும் மக்களுக்கு எப்படி நிவாரணம் தேடித்தரலாம் என்பதில் பலகட்சிகளுடைய ஏகோ

பித்த எண்ணத்தை செலுத்திஞல் இலங்கையை பொருத்த வரையிலும் நிச்சயமாக இலங்கைவாழ் திராவிடர்க்கு விடுதலை உண்டு என்பதிலே எனக்கு நம்பிக்கைத் தளர வில்லை. இனி ஒன்றுபட்ட மக்கள் சக்தியைத்தான் திரட்டிக் காட்டவேண்டியிருக்கிறது. பல கட்சிகளின் கூட்டுக் குரலை எழுப்பவேண்டியிருக்கின்றது. அந்த நிலை அடையுமா என்பதே சந்தேகத்துக்கிடமாயிருக்கின்றது. அந்த தொல்லையில் அகப்பட்டுக்கொண்டு அல்லல்படுவோர் அநேகமாக தமிழர்களாயிருப்பதால் இந்திய பிரதமருக்கும் கவலை இல்லை. இலங்கைப்பிரதமருக்கும் கவலையைக் காணும். தென்னகத்தில் தீராத தொல்லைபட்டு இங்கேயாகிலும் வா லாம் என்று இரண்டு மூன்று தலைமுறைகளுக்கு முன்ஞல் வந்தவர்களுக்கு இங்கே குடி உரிமை மறுக்கப்படுகிறது. சுதந்திரம் பெற்ற இந்தியாவின் பிரதமரே இந்த சிக்கலைத் தீர்க்க மனமில்லாமல் இருக்கின்ருரே என்று நாங்கள் கவலைப்படவில்லை. அவர் அப்படித்தான் இருப்பார். இந்நேரம் திராவிட நாடு பிரிந்திருந்தால் ஆளுக்கொரு விமான டிக்கட்டை வாங்கிக்கொடுத்து நான் என் தாயகம் அழைத்துச் செல்வேன். திராவிடர்கள் மானமில்லாதவர்கள் அல்ல. எலாலன் படையெடுத்திருக்கிருன். கரிகாலன் படையெடுத்திருக்கின்ருன். அந்த சந்ததியார்தான் அட்டைகளால் கடிக்க அரசியல் கடிவாளத்தில் பூட்டப்பட்டு முன்னுக்கும் போகமுடியாமல் பின்னுக்கும் வரமுடியாமல் செத்த சவ வாழ்வு வாழ்ந்துகொண்டிருக்கின்ருர்கள். உண்மையாகவே அவர்களை வெளியேற்ற சர்க்கார்,வெளியேற்றஎண்ணுகிறதா இல்லை. குடி உரிமை வழங்குகிறதா, இல்லை. வெளிநாட்டிலிருந்து தொழிலாளிகள் உள்நாட்டுக்கு வர அனுமதிக்கிறதா இல்லை. இந்த மூன்றும் ஒன்றுக்கொன்று விரோதமான நோக்கங்கள்தான்! வெளியேற்றவும் எண்ணவில்லை,

குடி உரிமையும் வழங்க மறுக்கிறது. தொழில் மேலும் செழிக்கவேண்டுமானல் வெளிநாட்டாரை அனுமதிக்க லாம், அதையும் செய்வதில்லை. ஏன் இந்த மூன்று நிலமை களை ஒன்ருக்கிப் பார்த்தால் சர்க்காரின் பரிபூரணமான வஞ்சனைவடிவம் பளிங்குபோல் தெரிகின்றது. இங்கிருந்து எட்டு லட்சம் தமிழர்களை வெளியேற்றினல் ரப்பர் பாலை யும், தேயிலைக் கொழுந்தையும் எடுக்கமுடியாது. அதன் பேரால் சர்க்காருக்கு இன்று ஆண்டுதோறும் கிடைத்துக் கொண்டிருக்கும் 65 சத விகிதம் வருமானம் கிடைக்காது. ஆகவே இவர்களைவெளியேற்ற முடியாது. சரி, இங்கேயே இவர்களுக்குக் குடி உரிமை வழங்கினல் என்ன என்று நினைக்கின்றது சர்க்கார் அடுத்தபடியாக—குடி உரிமை வழங்கினல் ஓட்டுரிமை வழங்கவேண்டும். அப்படிச் செய் வோமானல் அவர்களுக்கென்று பல பிரதிநிதிகளை சட்ட சபைக்கு அனுப்பி அவர்க்குச் சாதகமான சட்டங்களைச் செய்துகொண்டால் என்ன செய்வதென்று பயப்படுகி றது. வெளிநாட்டிலிருந்து வருகின்றவர்களை ஏன் தடுக்கி றது. இப்போதே இலங்கையில் இருக்கும் 85 இலட்சம் ஜனத்தொகையில் 25இலட்சம் பேர்கள் இந்தியர், திராவி டர், யாழ்ப்பாண தமிழர்கள். ஆண்டுதோறும் வெளி யாரை இங்கே குடியேற்றினல் இங்கே சிங்களவர்களல் லாதவர்கள் 45 இலட்சத்துக்கு மேலாய்விட்டால் மெஜா ரிட்டி மைனுரிட்டி கேள்வி பிறந்தால் என்ன செய்வது என்ற அச்சமும் உடனே பிறந்துவிடுகின்றது. இந்த திரி சூலத்தின் தாக்குதலால் திண்டாடிக்கொண்டிருக்கின்றது என்ற குற்றச்சாட்டை பகிரங்கமாக சுமத்துகிருேம். சர்க் காரே இதற்கு நேரடியான பதில் சொல்லமுடியாவிட்டால் சர்க்காரை ஆதரித்து நிற்கும் U. N. P. கட்சி (ஐக்கிய தேசீய கட்சி) பதில் சொல்லுமா?

அடுத்தது நாங்கள் மதங்களைப்பற்றி என்ன நினைக்கிறோம் என்பதைத் தெரிந்துகொள்ளாமலே மண்டபத்தின் ஒரு மூலையில் யாரோ ஒரு முஸ்லீம் தோழர் குர்ஆனைப்பற்றிப் பேசாதே என்று கூச்சல் எழுப்புகிறார். குர்ஆனைப்பற்றி நான் ஆதரித்துப்பேசக்கூட விடமாட்டார்போலிருக்கிறது தோழர். அவ்வளவு மதப்பித்தேறிய தோழர் மத சம்மந்தமான ஆராய்ச்சிகள் நடக்கும் இடத்துக்கு வந்திருக்கக்கூடாது. அக்பருக்கு உதவிசெய்து அலுத்துப்போன பைராம்கானைப்போல மெக்காவுக்குச் சென்றிருக்கலாம். ஏனெனில் அங்கேதான் பலமத மக்கள் இல்லை. மத ஆராய்ச்சிகள் நடப்பதில்லை. கண்டிப்பாக நம்புவது தவிர வேறு மார்க்கமில்லாத இடம். தோழர் எங்களிடத்திலே அதை எதிர்பார்க்கக் கூடாது. இதுவரை இந்து கோயில்களைப்பற்றியும் சிலை வணக்கத்தைப்பற்றியும் பேசிக்கொண்டிருக்கும்போது வஹ்ஹாவா பகுத் அச்சாஹே, என்று தலையையாட்டிக் கொண்டிருந்தவர் இன்று நாங்கள் கு என்ற எழுத்தை உச்சரிப்பதற்குமுன்னே குர்ஆன்என்று நினைத்துக்கொண்டு குதிக்கிறார். தோழரே, குர்ஆன் ஆண்டவனால் ஆகாயத்திலிருந்து இறக்கப்பட்டதென்கிறாய். ஆயிரத்திநானூறு ஆண்டுகள் அதன் வயதென்கிறாய். இதுவரை யாராலும் அழிக்கமுடியவில்லை என்கிறாய். அப்பேற்பட்ட வல்லமை வாய்ந்ததாக நீர்நம்பும் குர்ஆனை நான் ஒருவன் தாக்குவதினால் பொடிப்பொடியாய்விடும் என்று நீர் நினைத்தால் உம்மைப்போன்ற கோழையை முஸ்லீம் இனத்திலேயே பார்க்கமுடியாது. இவைகள் பனங்காட்டு நரிகள், இந்த சலசலப்புக்கு அஞ்சாது என்பதை நீர் மனதில்வைக்க வேண்டும். உங்கள் மீலாது சீரத்துகளிலும், பாகிஸ்தான் பிரிவினையிலும் பெருவாரியாக கலந்துகொண்ட எங்களிடமே இந்த கைவரிசையைக் காட்டவேண்டாமென

தோழரை எச்சரிக்கை செய்கின்றேன். இங்கே இவ்வளவு நாட்களாக இயங்கிக்கொண்டிருந்த திராவிட முன்னேற்ற கழகத்தைப்பற்றி எங்களுக்குக்கிடைத்த செய்தியும் சொற்பம். நாங்கள் நினைத்துக்கொண்டிருந்ததும் கொஞ்சம். இங்கே வந்து பார்த்தபிறகு நாங்களே திடுக் கிடும்படியான நிலையில் இயக்க வளர்ச்சியையும் உங்கள் பேராதரவையும் காணும்போது இருதோள் பூரிக்கிறோம். இதைப்போன்ற பெரிய நகரத்தில்மாத்திரம்தான் இந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறதா, அல்லது மலை நாடுகளி லும் இதைப்போலவே வளர்ந்திருக்கிறதா என்பதை அறியவே பத்து பனிரெண்டு கூட்டங்களை தோட்டத் தொழிலாளர்கள் பகுதியிலே ஏற்பாடு செய்திருக்கின்றோம். அந்த சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு மீண்டும் உங்களைக்காணும்போது மற்றவைகளைப்பற்றிப் பேசிக் கொள்ளலாம் என்று சொல்லிக்கொண்டு என் சிற் றுரையை முடித்துக்கொள்ளுகின்றேன், வணக்கம்.

**22—4—53-ல் நீர் கொழும்பில் கம்யூனிஸ்டு தோழர் கள் பணிமனையில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகத் திறப்புவிழாவில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.**

தலைவர் அவர்களே! 'தோழர்களே வணக்கம். சுமார் ஓராண்டுகாலமாக நிகோம்போ என்ற இந்த நீர்க்கொழும் பில் நமது இயக்கம் தனித்தனி நபர்களிடம் இயங்கிக் கொண்டிருந்ததை ஒன்றுகத்திரட்டி இன்று இந்த மண்ட பத்தில் திறப்புவிழாவாற்றியிருக்கிறோம். நாங்கள் இங்கே வருவதற்கு முன்பாக, நீங்கள் கூட்டம்போடுவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்ற இடம், கம்யூனிஸ்டு நண்பர்களுடையது. நேற்றுவரையிலும், எங்களைக் கோபித்துக்கொண்டிருந்தார்கள். ஏனெனில் எங்கள்

தீப்பொறி பத்திரிகையிலே தோழர் ஜீவாவுக்குப்பதில் சொல்லும் முகத்தான், 'ஜீவாவின் தாவா' என்று எழுத கட்டுரையைப்படித்துவிட்டு ஆத்திரம் அடைந்திருந்தார் கள். அப்பேறப்பட்டவர்கள் இன்று அவர்கள் இடத்தை உங்களுக்கு அளித்திருக்கின்றார்கள் என்றால், இதில் ஏதோ சூதோ சதியோ கலந்திருக்கவேண்டும் என்று சிலரும், உங்களை அவர்களிடத்திலே பேசச்செய்து கேள்விகள் கேட்கலாம் என்று ஏற்பாடுசெய்து வைத் திருக்கின்றார்கள் என்று சிலரும், இல்லை, இல்லை. அங்கே இருக்கின்ற கம்யூனிஸ்டு நண்பர்களிலே சிலர் பொறுப் பானவர்கள். ஆகையால் இடம் தந்தார்கள் என்று சிலர் சொன்னார்கள். இந்த மூன்று தரப்பார் சொல்லிய மூன்று விதக் கருத்துக்களைக்கேட்ட நான் தைரியமாக ஒரு முடி வுக்கே வந்துவிட்டேன். முதல் தரப்பார் சொன்ன சதியோ சூதோ செய்ய அழைக்கின்றார்கள் என்றபோது ஆயிரக் கணக்கான ஆண்டுகள் ஆரியர் செய்த சதியிலேயும் சூதி லேயும் திராவிட சமூகம் சாகாமல் வளர்ந்திருக்கிறது. அப்பேர்பட்ட வைரம்பாய்ந்த திராவிட மக்கள் நீர்க் கொழும்பில் இருக்கின்ற சில கம்யூனிஸ்டு தோழர்கள் சதியாலும் சூதாலும் வீழ்ந்துவிடமுடியாது. அவ்வளவு பலவீனமானதல்ல திராவிட முன்னேற்றக்கழகம் என்ற முடிவுக்கு வந்தேன். ஏனெனில் நாம் வளர்த்த இயக்கத் தின் சக்தியை நாமே உணரவில்லையானால் இயக்கத்தில் நாம் முக்கியமான பங்கெடுத்தும் பயனில்லை என்ற கோட்பாடுடையவர்கள் நாம். ஒருவன் தன் சக்தியிலே அவநம்பிக்கைக்கொள்வானானால் அவன் பிற தீய சக்தி களை அழிப்பதொழிப்ப தெங்ஙனம் முடியும். ஆகவே கம்யூனிஸ்டு தோழர்கள் தங்கள் சக்தியின் தராதரத்தை எண்ணி பிறசக்திகளை அழிக்கலாம் என நினைப்பதைப் போலவே, நாமும் நம்மை அழிக்கவரும் தீய சக்தி எது

வானுலும் தடுத்து நிறுத்தலாம் என்ற நம்பிக்கையில் எப்போதும் திராவிட முன்னேற்றக் கழகம் தளர்ந்து விட்டதில்லை. பிறகட்சிகளை அழித்தால் தான் நம் கட்சி வளரும் என்ற கோட்பாடுடையதுமல்ல. பக்கத்து வீட்டை இடித்துத்தள்ளி அதில் கிடைக்கும் உடைந்த செங்கல்லையும் உளுத்துப்போன மரங்களையும் கொண்டே ஒரு வீடுகட்டுவதென்பது அவ்வளவு சிறந்ததென்று தி. மு. கழகம் நினைக்கவில்லை. ஆகவேதான் அது தன க்குவேண்டிய எல்லா சாமான்களையும் புதியதாக சேகரித் திருக்கிறது. ஆகையாலேதான் இந்த மரத்தை எங்கே வாங்கினீர்கள். இந்த மரத்தைப்பற்றி சிலப்பதி காரத்தில் சொல்லவில்லையே என்று சிலரும், இந்த செங்கல்லை எப்படி செய்து எங்கே சூளை போட்டீர்கள், இதைப்பற்றி ஜீவக சிந்தாமணியில் ஒன்றும் சொல்லப்பட வில்லையே என்று சிலரும், உங்கள் கட்டிடத்தின் படமே புதியதாக இருக்கின்றதே, இது மார்க்கசீய சிந்தாத் தத்தில் காணப்படவில்லையே என்று சிலரும் வியப்படை கிருர்கள். ஏதாவதொன்றில் ஆதாரத்தைத்தேடி அதோடு இன்றைய நமது இலட்சியத்தை ஒட்டவைத்துவிட வேண்டுமென்று நினைப்பது பெரியவர்கள் சம்பாதித்து வைத்த சொத்தில் நாம் வாழவேண்டும் என்று நினைப்பதற் கொப்பாகும். அதனுல் தி. மு. க. தனது, திராவிடநாட்டு பிரிவினை கோரிக்கைக்கு மனுநீதியில், மாஸ்கோவில் மீமாம்சத்தில் ஆதாரம்தேடி அலையவில்லை.

இரண்டாவது தரப்பினர்கள் சொன்னுர்கள், உங்களைக் கேள்விகள் கேட்கப்போகின்ருர்கள் என்று, மிக மகிழ்ச் சிக்குறியது. நமது கழகமே கேள்விக்குறிதான். மனதில் ஏற்படுகிற சந்தேகங்கள் அனைத்துக்கும் என்ன விடை என்று இன்னும் கேள்விகேட்டவண்ணமே இருக்கின்றது.

அப்படியே கேள்விகேட்பதானால் என்ன கேள்வி கேட்டு விடப்போகின்றார்கள். ஜீவாவைப்பற்றி ஏன் இப்படி எழுதினீர்கள் என்று கேட்கப்போகின்றார்கள். ஏன் எழுதக்கூடாது. கம்யூனிஸ்டு தோழர்கள் ஜீவாவை அறிமுகம் செய்துகொள்வதற்கு முன்பு நம் கூடாரத்திலே இருந்தவர். அந்த சொந்தத்தைப் பாராட்டிமாத்திரம் எழுதவில்லை. இந்திய அரசாங்க நடவடிக்கைகளுக்கு பயந்துகொண்டு அவர் ஓராண்டு இதே இலங்கையில் தலைமறைவாய் திரிந்தபோது எந்த கம்யூனிஸ்டு தோழரும் அவரை ஆதரிக்கவில்லை. அவர் அறிமுகம் இல்லாத காரணத்தால் திராவிட இயக்கத்தவர்கள்தான் ஆதரித்தார்கள். ஏன் இன்னமும் கொஞ்சம் வெள்ளையாகச்சொல்லவேண்டுமானால், நான் அதை இங்கே சொல்லக்கூடாது. ஆனாலும் இப்போது அதை சொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருப்பதால் சொல்லவேண்டி வந்திருக்கின்றது. அதற்காக தயவுசெய்து யாரும் வருந்தவேண்டாம். தோழர் ஜீவா அவர்கள் தமது அஞ்ஞாதவாசத்தை முடித்துவிட்டுப் போகும்போது அளித்த ஆயிரம் ரூபாய் நன்கொடை திராவிட இயக்கத்தார் அளித்தது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அந்த உரிமையைப்பாராட்டியும் நான் எழுதவில்லை. இன்னும் அவர் எங்களோடு நட்புமுறையிலே இருக்கின்றார் என்பதற்காகவும் நான் எழுதவில்லை. அவர் எழுதியதற்கு பதில் எழுதவேண்டியது என் கடமை என்றெழுதினேன். அதற்கும் பதில் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற தர்க்க நோக்கத்தோடு எழுதினேன், இன்னமும் அந்த பதிலுக்காக காத்துக்கொண்டிருக்கின்றேன். வாதப் பிரதிவாதங்கள் எழுகிறபோது வரன்முறைகளையும் சொந்தத்தையும், சிநேகிதத்தையும் பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது. ‘நீதி வேண்டுமானால் நட்புக்கு விடை கொடுத்

தனுப்பு, நட்புவேண்டுமானல் நீதியைப்பற்றி நினைக்காதே,' இதுதான் கிரேக்க ஞானி சாக்ரடீஸ் உலகுக்கு அளித்த சிறந்த தத்துவம். சாக்ரடீஸ் சொன்னன் என்பதற்காக மட்டிலுமல்ல, இன்றளவும் அந்த வார்த்தைகள் நாட்டின் நடைமுறையிலே இருக்கின்றன. ஆகையாலே தான் தோழர் ஜீவாவின் கட்டுரைக்கு பதில் அளிக்கவேண்டும் என்று நினைத்து பேனவை கையில் எடுத்தபோது நட்பை மறந்துவிட்டோம். அதுதான் நீதியும்கூட. மேலும் தர்க்கம் தி. மு. க. யாராரிடம் புரிந்திருக்கிறது என்பதையும் தோழர்கள் சிந்திக்கவேண்டும். கவியிற் பெரியவனும் தமிழ்கம்பன் என்று வைதீக உலகத்தால் போற்றப்பட்ட இராமன் முன்னேடியான கம்பனை நீதி மன்றத்தில் தலை குனியவைத்து நீதிமானை மயக்கமுறச்செய்தவர்கள் பரம்பரையார்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தார் என்பதை கம்யூனிஸ்டு தோழர்கள் மறந்துவிடக்கூடாது.

ஆனல், கம்யூனிஸ்டு தோழர்களைப்பற்றி இவ்வளவு பேர்கள் சொன்ன தவருன கருத்துக்களுக்கு நான் அப்பாற்பட்டவன் என்பதுதான் உண்மை. ஏனெனில், உலகச் சொத்துக்களையே பொது உடமையாக்கவேண்டுமென்று ஓயாதுழைக்கும் கம்யூனிஸ்டு நண்பர்கள் தங்களுக்குச் சொந்தமான இந்த மண்டபத்தை சிறிதுநேரம் தன் தோழமைக் கழகத்துக்கு இந்த இடத்தை அளிக்காவிட்டால், கம்யூனிஸ்டு கொள்கையிலேயே மக்களுக்கு அவநம்பிக்கை வந்துவிட்டால்என்னசெய்வது என்ற பரந்த நோக்கத்தால்தான் இதையளிக்க பல உண்மையான கம்யூனிஸ்டு தோழர்கள் இங்கே இருக்கிருர்கள் என்பது தான் உண்மை. அந்த நல்ல மனமும் பொது நோக்கமும்கொண்ட உண்மையான பொது உடமைத் தோழர்களுக்கு என் நன்றி.

இப்போது இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்கவிழாவை ஆற்றியிருக்கின்ருேம். என்ருல் இந்தியாவின் தென்பகுதியில் சற்றேறப்ப ஆறு கோடி மக்களின் நல்வாழ்வுக்காக தனியாட்சிவேண்டும், என்று இடைவிடாது போராடிக்கொண்டிருக்கும் திராவிட முன்னேற்றக்கழகத்தின் முடிவான கொள்கையை நாங்கள் ஆதரிக்கிருேம் என்பதுமாத்திரமல்ல. அதன் வளர்ச்சிக்கு எங்களாலான உதவியை நாங்கள் இங்கிருந்தபடியே தருவோம் என்பதும், தலைமை நிலையம் அவ்வப்போது இடுங்கட்டளைகளை ஏற்று அதன்வழி நடப்போம் என்ற உறுதியை எடுத்துக்கொள்ளும் அறிகுறியாகவே இந்த முயற்சியில் நாம் அனைவருமே ஈடுபட்டிருக்கின்ருேம்.

இதில், இந்தியாவிலிருந்து ஒருபகுதியைத் தனியாக பிரிப்பது நல்லதா என்ற சந்தேகமும், பலம்பொருந்திய மத்திய சர்க்காரை பகைத்துக்கொள்வது நல்லதா என்ற சந்தேகமும், இந்தியமக்கள் என்ற ஒரே பட்டியலில் அடங்கிவிட்டமக்கள் கூட்டத்திலிருந்து ஒரு பகுதியினரைத் தனியாகப்பிரித்து அவர்களை திராவிடர்கள் என்றழைப்பது சரியா என்பதும், ஆரியமும் திராவிடமும் இன்னுமா ஒன்ருகக்கலந்துவிடாமல் தனித்தனியாக இருக்கின்றது என்ற சந்தேகமும், திராவிடம் தனியாகப் பிரிவதின்மூலம் தனக்குத்தானே தனியாட்சி நடத்தப் போதிய அளவுக்கு அதனிடம் பொருளாதாரத்திட்டம் இருக்கின்றதா என்ற ஐயமும் கலாசாரத்துறையில் நாட்டுப்பிரிவினை விரும்பத்தகுந்ததா என்ற வினவும் ஆங்காங்கே எழுப்பப்படுகின்றது. இந்த ஐயப்பாடுகள் ஒவ்வொரு பகுதியும் தனியாக பிரிந்துசெல்லவேண்டும் என்ற போது எழும்பிய பிரச்சினைகள் தாம்.

நம்மைப்பார்த்து உங்கள் திராவிட நாட்டுக்கு எல்லை எது என்று கேட்கின்றவர்களைப்பார்த்து நானும் ஒரு

கேள்வியைக்கேட்கின்றேன். இந்த என் கேள்விக்கு அவர்கள் அளிக்கும்பதிலிலேயே திராவிடத்தின் எல்லைக் கோடும் அடங்கியிருக்கின்றது என்ற தெளிவான முடிவுக்கு அவர்கள் வந்தே தீருவார்கள். பர்மா பிரியாத போதும் பர்மா உள்ளடங்க இருந்த நிலப்பரப்புக்குப் பெயர் இந்தியாதான் பர்மா பிரிந்தபிறகும் இந்தியாதான் பாகிஸ்தான் பிரியாததற்குமுன்பு பாகிஸ்தான் பகுதிகள் உள்ளடங்கியபோதும் இந்தியாதான். பாகிஸ்தான் பிரிந்தபிறகும் இந்தியாதான், காஷ்மீரம் அசோக சக்கரம் ஏந்தியிருந்தபோதும் அந்த பகுதிகள் உள்ளடங்க இந்தியாதான். இப்போது காஷ்மீரம் தனிக்கொடியேற்றி சட்டங்கள் அமைத்துக்கொண்டு, இந்திய யூனியனில் சேர்ந்த மக்கள் அந்த நாட்டை வேடிக்கைப்பார்க்க தற்காலீகமாக வந்துபோகலாமேயன்றி, அங்கே (காஷ்மீரத்தில்) வாணிபச்சலுகைப்பெறுவதோ, இடங்களை வாங்குவதோ, குடி உரிமைப்பெறுவதோ, காஷ்மீர சர்க்காரின் உத்திரவில்லாமல் உள்ளே வருவதோகூடாது என்று சொல்லிவிட்டபிறகு. காஷ்மீரம் தனி நாடுதானு' என்ற கேள்விக்கு பிரதமர் நேரு பதிலளிக்கவேண்டுமென்று சட்ட சபையில் கேட்கப்பட்ட கேள்விக்கு நேரு தலை சொரிந்துகொண்டே காஷ்மீரம் தனி நாடுபோலத்தான் என்று இழுத்தவண்ணம் பதிலளித்திருக்கின்றார். இந்த நிலையில் காஷ்மீரப்பகுதிகள் துண்டாக தனியாக்கப்பட்ட பிறகும் இந்தியாதான். ஆக இந்த மூன்று பகுதிகளும் பிரிந்தபிறகும் எஞ்சியிருக்கும் பகுதிகளை இன்னும் இந்தியாதான் என்று சொல்லிக்கொண்டு வருகின்றார்கள். இனி திராவிடம் பிரிந்தபிறகும் இந்தியா என்றுதான் சொல்வார்கள். இன்னும் பல்வேறு பகுதிகள் பிரிந்து நேருவின் மாளிகை ஒன்றுமட்டிலும் தனியாக நின்றாலும் அந்த ஒரே மாளிகை இருக்கும் இடத்தைமட்டிலும்

இந்தியா என்றுதான் சொல்லிக்கொண்டிருப்பார்கள். அன்றாடம் தேய்ந்துவரும் இந்திய எல்லையையே நிர்ண யிக்கமுடியாதிருக்கும்போது, திராவிடத்தின் எல்லையைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்ற அவசரந்தான் நமக் கெதற்கு என்று தோழர்கள் கொஞ்சம் பொறுமையாக இருக்கவேண்டும். ஒரு நாடு பிரிவதற்குமுன்னல் அதன் எல்லையை நிர்ணயிக்க எல்லேக்கமிஷன் ஒன்றையனுப்பி அதைத் தீர்மானிப்பார்கள். அப்படி அவர்கள் வந்து திட்டம் தீட்டுகிறபோது ஒரு பத்து மைல் கூடின லென்ன, குறைந்தாலென்ன. பிரிந்த எல்லேக்கோட்டுக் கப்பாலுள்ள மக்கள் திராவிடத்தோடு இணைந்திருந்தால் தான் நல்லது என்று அவர்கள் நினைத்தால் அவர்களாகவே போராடி எல்லேக்கோட்டைத் தங்கள் ஊர்களோடு சேர்த்து இழுத்துவிடுகின்றார்கள். சாதாரணமாக இந்தியா விலிருந்து ஏன் இங்கேவந்தார்கள். அங்கே ஜன நெருக் கடியில், வேலையில்லாத்திண்டாட்டத்தில் கஷ்டப்படு வதைவிட, கடல் கடந்து சென்றாயினும் காலத்தை கழிக் கலாம் என்று பல லட்சம்பேர்கள் இங்கே குடியேறி யிருக்கவில்லையா, அதேபோல் எந்தநாடு சுபீட்சமாக இருக்கின்றதென்று மக்கள் உணர்கிறார்களோ அந்த நாட்டைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக்கொள்ளவே நினைப்பார்கள்.

இங்கேவந்தவர்களாகிலும் தன்னம்பிக்கையையும் பலத்தையும் நம்பி இங்கேவந்து காலேமுதல் மாலேவரை கஷ்டப்பட்டு வாழ்கிறார்கள். இந்தியா செழிப்பான நாடு என்றறிந்தவுடன் ஆரியர்கள் தங்கள் ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு இந்தியாவுக்கு வந்து குடியேறி பிச்சையெடுத்து வாழ்ந்து இன்று அதிமேதைகளென தம் பட்டம் அடித்துக்கொண்டு அரசியல் லகானேக் கையில் பிடித்துக்கொண்டு மற்றவர்களேயடக்கியாளவில்லையா.

அதேபோல் திராவிட மக்கள் தங்களுக்குச் சொந்தமாயில்லாத நாட்டை அக்ரமமாக ஆக்ரமிக்க எண்ணவில்லை. தங்கள் மூதாதையர்கள் பிறந்த நாட்டை, தங்கள் முன்னோர்கள் ஆண்ட நாட்டை, உலகப் படத்தில் 'திராவிடம்' என்று பெயர் பெற்றிருக்கும் நாட்டை, உலகத்திலேயே தலைசிறந்து விளங்கிய ஐந்தாறு இனங்களில் ஒன்ருன திராவிட இனம் வாழ்ந்த நாட்டைத் தனியாகக் கேட்கின்றது. இது பொருமையின் விளைவால் உதித்த எண்ணம் என்று யாரும் பழிசுமத்திவிட முடியாது. அப்படிச் செய்ய நினைப்பவர்கள் யாரோ அவர்களே பொருமையின் சேய்கள், பொல்லாங்கின் தலைவர்கள். அவர்களைப் பற்றியோ, அவர்களின் செயல்களைப் பற்றியோ என்றும் திராவிட முன்னேற்றக் கழகம் கவலைப்பட்டதில்லை. அதற்கு நேரமும் இல்லை. ஆகவே அதற்கு எதிர்ப்புகளைப் பற்றி யாரும் கவலைப்படவேண்டாம் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன். ஒரு இயக்கம் வளர்ச்சியடைகிறது என்பதற்குள்ள நலல அறிகுறி பல பாகங்களிலிருந்து எதிர்ப்பு கிளம்புவதுதான். அந்த ஒரு அளவு கோலை கொண்டுதான் நாம் நமது இயக்க வளர்ச்சியைக் காண முடியும். போர் வீரன் தன் மேல் பட்ட காயத்தில் சொட்டும் குருதியைக் கண்டு கலங்கமாட்டான். எதிரியின் குருதியைக்கண்டும் அவன் மயக்கமடித்துச் சாய்வதில்லை, தோல்வியே கண்டு அவன் மாள்வதானுலும் ரணகளத்திலேயேமாள்கிருேம் என்ற ஆறுதலின் பேரிலேயே புன்னகையோடு சாவைத் தாவுகிருன். அதே போல் திராவிடம் பிரிய நாம் மாள்வதானுலும் நம் மண்ணிலேயே மாண்டோம் என்ற ஆறுதலோடு இருப்போம், வேறு நாட்டின் மண்ணைசைகொண்டு அன்னியர்மேல் படையெடுத்துஆக்ரமிப்பாளன் என்ற அநீதியான பெயரைத் தாங்கி அனுதைப் பிணமாவதல்ல நமது நோக்கம். எந்த மண்ணில்

பிறந்தோமோ, எந்த மண்ணில் நமது மூதாதையர் மன்னர் பரம்பரையென வாழ்ந்தனரோ, எந்த மண்ணின் மணிகள் யௌவன மன்னர்கள் முடியில் ஜொலிக்கக் காரணமாயிற்றோ, எந்த மண் வாழவந்தவனுக்கு வழி விட்டு ஒதுங்கி ஓரத்தில் நிற்கும் பிச்சைக்காரன் நிலையில் நம்மினத்தைக் கொண்டுவந்து நம்மை நிறுத்தியிருக்கிறதோ, எந்த மண் மனித வாழ்வுக்கு வேண்டிய எல்லாம் தன்னகத்தில் கொண்டிருக்கின்றதோ, எந்த மண் நம்மை ஈன்றெடுத்து வளர்த்ததோ எந்த மண்ணின் மொழி ஐந்து மொழிகளின் தாயென விளங்கியதோ, எந்த தமிழ் மற்ற எந்த மொழின் படையெடுப்பாலும் இதுநாள்வரை அழியாதிருக்கின்றதோ, எந்த மண் கையில் திருவோடேந்தி வந்தவரை வேந்தராக்கி நம்மை அவர்களின் மாந்தராக்கி வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்கிறதோ அந்த மண்ணை நாம் பெற்றாகவேண்டும். அதை நாமே ஆண்டு தீரவேண்டும். அது நம் சொல்வழி நடக்கவேண்டும். அதன்மேல் படர்ந்திருக்கும் பழமையெனும் தூசைத் துடைக்க வேண்டும். அந்த வேட்கையின் வேகத்தால் விருப்பத்தின் மோகத்தால், தேவையின் தாகத்தால், நம்மைத் தாக்க வரும் எந்த சக்தியையும் நாம் தாக்கித் தகர்த்தெறியக் கடமைப்பட்டிருக்கின்றோம். திராவிட நாட்டுப் பிரிவினைப் போரரங்கம், பிளாசிப் போரா, பாணிப்பட் போரா, புது ஆயுதங்களைக் கொண்டா, புரட்சி வேகம்கொண்டா என்ற விளக்கம் தேவையில்லை. நமது குரல் வான் முட்டிக் கொண்டிருக்கின்றது. ஒரு கிளர்ச்சியை சர்க்கார் சட்டைச் செய்யாமல் இருப்பதும், பிறகு செவிசாய்ப்பதும், சிந்திப்பதும், சிந்துபாடுவதும், தூது விடுவதும், துன்பம் கொடுப்பதும், துப்பாக்கியை நீட்டுவதும், தூக்கில் மாட்டுவதும் அவ்வளவையும் மீறினால் சமாதானம் பேசுவதும், தூதுவர்களை அனுப்புவதும் எல்லைகளை நிர்ணயிப்பதும் நாம்

அறியாததல்ல. இவ்வளவுக்கும் காரணம் இயக்கத்தின் வளர்ச்சிதான். ஒரு இயக்கம் வளருவதற்கும் அழிவதற்கும் இரண்டே இரண்டு காரணங்கள்தான் உண்டு. ஒன்று அது போராட்ட சக்தியைப் பெருமல் போவது. மற்றொன்று அதன் கோரிக்கைகள் நியாயமற்றதாகி விடுவது. இந்த முறையில் பார்த்தால் நமது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு போராடும் சக்தியும் உண்டு, கோரிக்கையும் நியாயமானது. ஆகவே இந்த இரண்டுமே நமது கழகத்திற்கு அசைக்கமுடியாத அஸ்திவாரங்களாய்விடுகின்றன. இந்த உண்மையான காரணங்களை சாதாரண மக்கள் முதல் மாணவர்கள் வரையிலும் சரியாக புரிந்துகொண்டதின் காரணத்தினுல்தான் நம் இயக்கத்தில் ஆயிரமாயிரமாகச் சேர்ந்தவண்ணம் உள்ளனர். இந்த சூட்சமத்தையறியாதவர்கள்தான் நம் இயக்கம் இவ்வளவு வேகமாக வளரக் காரணமென்ன என்று ஆச்சரியப்படுகின்ருர்கள்.

இந்த இலங்கையிலேயே ஒரு கட்சியின் தலைவர் என்னைத் தனியாக சந்திக்க வேண்டுமென்று விரும்பினுர். நானும் அதற்கு சம்மதித்தேன். அதுவும் இரவு 10-மணிக்கு என்ருர். சரி என்றேன். அவர் பங்களாவிலேயே சந்திக்கவேண்டுமென்ருர், சரி என்றேன். நான் அந்த சந்திப்பில் சந்தேகப்படவில்லை. ஏனெனில் அந்த சந்திப்பை ஏற்பாடுசெய்தவர்கள் நம்முடைய இயக்கத் தலைவரல்லவாயினும் என்னுடைய நெருங்கிய நண்பர்கள். ஆகையால் நான் சந்தேகப்படவேண்டியதில்லாமல் போய்விட்டது. அவர் யார் என்று இங்கே நான் குறிப்பிடாமலிருப்பதற்காக மன்னிக்கவேண்டும். நீங்களும் தெரிந்துகொள்ள விரும்பாதீர்கள். அவர் விருப்பப்படியே சந்திக்கச் சென்றிருந்தேன். ஆனல் அவர் மாத்திரம் தனியாக இல்லாமல் ஐந்தாறு பேர்களை தன்னோடு

உட்காரவைத்துக்கொண்டு பேச்சைத் தொடங்கினர். நான் பேச மறுத்துவிட்டேன். ஏனென்றுர், 'என்னைமட்டிலும் தனியாக வரச் சொன்னீர்கள், தனியாகப்பேசவேண்டுமென்று கேட்டிருந்தீர்கள். நாம் இருவரும் பேசுவது வெளியில் தெரியாமல் இருக்கவேண்டும் என்பதுதானே உங்கள் நோக்கம். அப்படியானல் இவர்களைமாத்திரம் ஏன் சேர்த்துக்கொண்டிருக்கின்றீர்கள் என்று கேட்டேன். நாம் பேசுகிற எதையும் இவர்கள் வெளியே சொல்லமாட்டார்கள் என்றுர். அப்படியானல், என்னேடு வருகின்றவர்கள் மாத்திரம் நமது பேச்சை வெளியே சொல்லிவிடுகின்ற அளவுக்கு ஐயோக்கியர்கள் என்று தீர்மானித்துவிட்டீர்களா என்றேன். அவரால் ஒன்றுமே பதில் சொல்ல முடியவில்லை. பிறகு ஒரு அறையில் தனியாக உட்கார்ந்து பேசினேம். திராவிடநாட்டுப் பிரிவினைத் தொடர்பாக அவர் கேட்கக்கூடும் என்று நினைத்தேன். ஆனல் அவர் முதல் முதல் கேட்டது. மூணறை யாண்டுகளில் இவ்வளவு வேகமாக வளர்த்திருக்கின்றீர்களே, இதை எப்படி செய்துமுடித்தீர்கள். ஒரு கழகம் வளர என்னென்ன முறைகளைக் கையாளவேண்டும். அதைச் சொல்வீர்களானல் நாங்களும் எங்கள் கட்சியை, உங்கள் அளவுக்கு வளர்க்க முடியாவிட்டாலும், ஒரு பாதி அளவாவது வளர்க்க வசதியாக இருக்கும் என்றுர். பிறகு ஒரு கட்சி வளருவதற்குள்ள எல்லா முறைகளையும் சொன்னேன். அப்படி நான் சொல்லியவற்றில் இரண்டோர் முறைகள் அவரால் அல்லது அவருடைய கட்சிக்காரர்களால் எப்போதுமே பின்பற்றமுடியாது. எப்படியாகிலும் முயன்று வளர்த்துவிடுவேன் என்று தன்னைத்தானே உறுதிப்படுத்திக் கொண்டார். இதை ஏன் இங்கே குறிப்பிடவேண்டி வந்ததென்றுல் ஒரு இயக்கத்தின் வளர்ச்சிக்கு பணமும் பத்திரிக்கையுமே போதுமென்ற தோழர்கள்-பணம் பத்திரிக்கை

ஆகிய இரண்டு வசதிகளும் இல்லாமலே நமது கழகம் வளர்ந்திருக்கின்ற வேகத்தைப் பார்த்து இலங்கையில் பண பலமும் பத்திரிக்கை பலமும் இருந்தும் வளராத கட்சி ஆச்சரியப்படுவதில் வியப்பில்லை. ஆகவே நமது கழகம் வளர்ந்ததற்கான காரணம், விருப்பம் நல்லது. விறுவிறுப்பாக எழுதும் எழுத்தாளர்கள், வேடிக்கை, விவாதம் வரலாற்று நுணுக்கம். நிலநூல், அரசியல் சமூக இயல், ஆகியவைகளை நிறைய படித்துப் படித்து பயிற்சி பெற்றிருக்கின்ற திறமைவாய்ந்த நல்ல பேச்சாளிகள். வல்லமையும் ஒற்றுமையும் மிகுந்த தொண்டர்கள், சட்ட திட்டங்கள், அமைப்புமுறை, ஜனநாயக நடை ஆகியவைகளைக்கொண்டு இயங்கிக்கொண்டு வருகின்றது. மேற் சொன்னவைகளில் எதுவும் பழுதுபடாமல் பார்த்துக் கொள்ளுகின்றவர் பேராற்றல் மிக்க நமது அண்ணா. ஆகவே நமதியக்கத்தின் குறிக்கோளான திராவிட நாடு திராவிடர்க்காகும் வரை நாம் ஓய்ந்திருக்கமாட்டோம், நீங்கள் ஓய்ந்திருப்பீர்கள் என்றும் காணவில்லை. ஆகவே உங்கள் தணியாத வேட்கையை நான் மிக மிகப் பாராட்டி என்னை இங்கே பேசச்செய்த நீர்க்கொழும்பு திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுக்கும் ஏனைய தோழர்களுக்கும் குறிப்பாக கம்யூனிஸ்டு தோழர்களுக்கும் என் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கின்றேன், வணக்கம்.

★

**24-4-53 இலங்கையின் இரண்டாவது பெரிய நகரமான கண்டி உந்துவண்டித் திடலில் நடந்த மாபெரிய பொதுக்கூட்டத்தின் பேச்சுச் சுருக்கம்:-**

**குறிப்பு—சுமார் பத்தாயிரம் பேர்கள் ஜோ வென்று கொட்டும் மழையில் குடைகளைப் பிடித்துக்கொண்டு வியப்**

**போடு கேட்டுக்கொண்டிருந்தார்கள். கேள்வித்தாள் ஒன்று கொடுத்து, மறுபடியும் அதைத் திருப்பி வாங்கிக்கொண்டு போய்விட்டார்கள். காரணம், நாம் அந்த கேள்விக்குப் பதில் சொல்வதின்மூலம் அவர்கள் குட்டு வெளிப்படும் என்ற பயத்தால் இப்படிச் செய்தார்கள் என்று பின்னால் விளங்கியது.]**

தலைவர் அவர்களே! தோழர்களே! வணக்கம். மழையிலே நின்றுகொண்டிருக்கிறோம். மழை எப்போதும் வரும், வெய்யல் எப்பொதும் வரும் என்று நிச்சயமாக சொல்லமுடியாத அளவுக்குகடல்மட்டத்திலிருந்து2500 அடிகள் உயர்ந்த ஊர். சிங்கள மன்னர்களின் தலைநகரம். கடைசி மன்னராகிய விக்ரம ராஜா சிங்காவோடு முடியாட்சியை முடித்துவிட்ட நகரம். அவருடைய பேரன் திரு. யோகாநந்த ராஜா சிங்கா என்பவர்கூட இங்கே இல்லாமல் இந்தியாவுக்குச் சென்று அங்கேயே ஒரு அம்மையைத் திருமணம்செய்துகொண்டு தக்காண பீட பூமியில் மங்கிராபாத் என்ற ஊரில் குடியிருக்கின்றார் என்று வரலாறு சொல்லுகிறது. உலகத்திலேயே எங்குமில்லாத அதிசயப் பூந்தோட்டமான பேராதனியா பூந்தோட்டத்தின் அருமையான காற்று வீசியவண்ணம் இருக்கின்றது. மேலும் சிவனடிப்பாதத்தில் தோன்றி திருகோணமலையில் முடியும் மகாவலி கெங்காவும் இந்த அழகு நகரை ஒரு சுற்றுசுற்றி ஓடிக்கொண்டிருக்கின்றதென்றால், இவ்வளவு இயற்கை அழகும் எழிலும் நிறைந்த நாட்டில் வாழும் நீங்கள் இவ்வளவு கொடிய மழையிலும் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வமும் அரசியல் நுணுக்கமும் வந்தது இயற்கைதான். இந்த இடத்தில் எள்ளளவும் சிந்தனையில்லாதவனுக்கும் சிந்தனைத் தோன்றும் என நம்புகிறேன்:

மனிதனுடைய'த் தொடக்கச் சிந்தனைக்கும் இன்று வளர்ந்திருக்கும் அவன் சிந்தனைக்கும் இடையிலே எவ்வளவு அற்புதமான மாறுதலைச் செய்திருக்கிறான் என்பதைப் பார்க்கும்போது உலகம் வியப்பின் விளிம்பிலே நின்று கொண்டிருக்கின்றது.

தனக்கென்று ஒரு குறிப்பிட்ட இடமில்லாமல் காட்டில் கண்ட கண்ட இடங்களில் திரிந்து, உண்பதற்கு இன்ன வேளை, உண்பது இன்னதுதான் என்ற முடிவில்லாமல், கிடைத்த நேரத்தில் கிடைத்ததை சாப்பிட்டுக் காலம் கழித்துக்கொண்டு வந்தான். பிறகு வந்தவன். நாம் எங்கே சுற்றினாலும் தங்குவதற்கு ஒரு இடம் என்றிருந்தால்தான் நாம் உண்ட மிகுதியான இறைச்சியை, காய்கனிகளை வைத்துக்கொள்ளலாம் எனக்கருதி ஒரு இடத்தைத் தனக்கென்று ஏற்படுத்திக்கொண்டான். மழையிலும் வெய்யலிலும் தொல்லைப்படாமலிருக்க சுற்றிலும் இலைகள், மேலே கிளைகளால் மூடப்பட்ட ஒரு கூடாரமாக்கிக்கொண்டான். இரண்டு நாள் மூன்று நாட்களுக்கு முந்தியே கொண்டுவரப்பட்ட இறைச்சி அழுகி நாற்றமெடுக்கவே, எப்படியோ யூகத்தால் நெருப்பிலே பொசுக்கிவைத்துக் கொண்டான். பொசுக்கியதை அவன் தன்னுடைய இரண்டு மூன்று நாள் ஆகாரமாக வைத்துக்கொண்டான். காடுகளில் சுற்றியலைவது அவனுக்குக் கொஞ்சம் கடினமாகத் தெரியவே என்ன செய்யலாம் என்று யோசித்தான். அதே நேரத்தில் ஒரு கிளை மானின்மேல் காகம் ஒன்று உட்கார்ந்திருப்பதைக் கண்டான். ஒகோ. பலமுள்ள ஒன்றன்மேல் பலமில்லாத ஒன்று சவாரி செய்யலாம்போலிருக்கின்றது என்று நினைத்தபிறகுதான். தன்னைக்கொல்லாத தன் சொல்வழி நடக்கும் பிராணிகளைப் பிடித்து கொஞ்சம் கொஞ்சம்

ஆக பழக்கினுன். அந்தவகையில் அவன் தேர்ந்தெடுத்தது மூன்று பிராணிகள். எருமை, மாடு, குதிரை இவைகளின் மேல்தான் ஏறிச்சென்ருன். இதற்கிடையில் அவன் ஏற்படுத்திக்கொண்டிருந்த பெண் தொடர்பால் வளர்ச்சியடைந்த குடும்பம் ஆகியவற்றை அழைத்துச் செல்ல நினைத்தான். அதன்பயனுக ஒரு வண்டியைச் செய்து அதன் கழுத்தில் சுமத்தி தானும் தன் மனைவி மக்களுமாகச் சென்ருன். இந்த சவாரியோடு வெறும் மனப்புரட்சி மறைகிறது. பிறகு அந்த மனப்புரட்சி நீராவிப் புரட்சியோடு நட்புகொள்கிறது. நீராவியின் வேகத்தை இன்னும் அதிகமாக்க வேண்டுமென்று கருதிய விஞ்ஞானிகள் மின்சார இயக்கத்தைக் கண்டார்கள். அதன் பலனை இன்று நேரடியாக அனுபவித்து வசதியையும் பயனையும் பெறுகிருேம். ஆகவே மனிதன் தனக்கிருந்த அறிவு சக்தியால் எந்த அளவுக்கு உயர்ந்து இருக்கின்ருன் என்பதை நாம் மறந்துவிடாவண்ணம் பழைய இரட்டைமாட்டு வண்டிகள் ஒருபுறமும் ஆகாய விமானங்கள் மற்ருேர் புறமும் வேலை செய்துக்கொண்டிருக்கின்றன. ஆனுல் இரண்டின் பயன் வெவ்வேருக இருக்கின்றது. காலம்மாற மாற மனிதன் தேவைகள் அதிகரித்தபடியுள்ளது. ஒரு காலத்தில் மன்னனை ஆண்டவன் என மக்கள் சமுதாயம், ஒப்புக்கொண்டது. பிறகு மன்னன் ஆண்டவனல்ல, ஆண்டவனுடைய பிரதிநிதி என்று வேண்டுமானுல் வைத்துக்கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்தது. பிறகு கொஞ்சம் விழிப்புற்ற மக்கள் மன்னன் ஆண்டவனுமல்ல ஆண்டவனுடைய பிரதிநிதியுமல்ல, நாட்டின் தலைவன் என்ற அளவோடு நிருத்திவிட்டது. இறுதியில் மன்னனுக்கு இருந்த அரசியல் விவேகத்தையும் ஆட்சிமுறையையும் பல பேனு வீரர்கள் மக்களுக்கு எழுதி காட்டிய

தால், மன்னனை ஒழித்து மக்களாகவே ஆளத்தொடங்கினார்கள். இன்று பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாட்டில் தவிர வேறெங்கேயும் மன்னராட்சியில்லை. பிரிட்டனில் மகாராணியார் ஆட்சி என்று பெயரளவுக்கு இருக்கின்றதேயன்றி நடைபெறுவதெல்லாம் முழுக்கமுழுக்க மக்களாட்சிதான் என்று சொல்லிவிடலாம்.

ஆங்கில நாட்டில் மன்னர் கைக்கு விலங்கிட்டு மக்களுக்கு சுதந்திரமளித்திருக்கின்றார்கள் என்று பிரஞ்சு நாட்டுவரை கோல்வேந்தன் வால்டேர் சொல்வதைபோல் பெயரளவுக்கு வைத்திருக்கின்றார்கள். அதுவும் இந்த எலிஜபெத் மகாராணியாரோடு தேம்ஸ் நதிக்கறையில் முடியாட்சி முடிந்துவிடும் என்று பல அரசியல் தலைவர்கள் இப்போதே விமர்சனம் செய்யத் தொடங்கியிருக்கின்றார்கள். ஆனல், மன்னராட்சியிலே தான் கொடுமைகள் நிறைந்திருந்தன. இப்போது நடக்கும் மக்கள் ஆட்சியில் யாருக்குமே எந்தவிதமான தொல்லையும் இல்லை என்று சொல்விடமுடியாது. மன்னர்கள் இருந்தபோது செய்த கொடுமைகளைவிட, மக்கள் ஆட்சி என்று சொல்லிக்கொண்டு மறைமுகமாக பல கொடுமைகளைச் செய்துக்கொண்டிருக்கின்றனர் இப்போதிருக்கும் தலைவர்கள். அரசியல் அதிகாரமெனும் வேலால் குத்தி விலாவைக் கொத்துகின்றார்கள். இதன் பொறுப்பு ஒரு தனிப்பட்ட மன்னன்மேல் சுமத்தமுடியாமல். பெருவாரியான மக்களின் பிரதிநிதிகளால் செய்யப்பட்ட சட்டங்கள். அதுவும் இது ஜனநாயகம். ஆகவே அனைவரும் கீழ்ப்படிந்தே தீரவேண்டும் என்று குழப்பி குற்றவாளிகள் நேரடியாக அகப்பட்டுக்கொள்ளாமல், மக்கள் அறியாமையால் அளித்த வாக்குச் சீட்டுப்பெட்டியில் மறைந்துக்கொள்கின்றார்கள். மன்னராட்சியாயிருந்தாலும், மக்கள் ஆட்சி பொதுவாகக் கிடைக்கவேண்டிய உரிமைகள் வசதிகள்

நிராகரிக்கப்படும்போது ஆட்சியை மாற்றியமைக்க அல்லது அந்த கொடுங்கோலாட்சியிலிருந்து விலக, தங்களுக்குத் தேவையான ஆட்சியை யமைத்துக்கொள்ள உரிமையுண்டு என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. மறுக்க முடியாமல் சட்டங்கள் தடுக்கலாம், ஆனால் அவ்வித சட்டங்களைச் செய்தவர்களும் மனிதர்கள்தாம்.

தன் முன்னேரால், அல்லது தன்னுலேயேதான் வாழ்வதற்காக கட்டப்பட்ட கட்டடத்தை, கட்டியவனே இடித்து வேரோர் கட்டிடத்தை புதுப்பிக்கக் கூடாதென்று மறுப்பது கயமைத்தனம். சட்டங்களை ஒப்புக்கொண்ட பின் எதிர்ப்பதுகூடாது என்று ஆங்காங்கே பேசப்படுகிறது. சட்டங்கள் படிக்கும்போது நன்ருக இருந்து அவை நடைமுறைக்கு வரும்போது கொடுமையாயிருந்தால் மாற்ருமல் என்ன செய்யமுடியும். எதிர்ப்பாராதவிதமாக நமக்கு பல நண்பர்கள் தோன்றுகிருர்கள். அவர்களில் யார் நல்லவர்கள் யார் கெட்டவர்கள் என்று தெரிந்துக் கொள்ள சில நாட்களாய்விடுகின்றன. தெரிந்துக் கொண்டபின் தீய நண்பர்களை ஒதுக்குவோமானுல், முதலில்என்னிடம் நட்புகொண்டு, பிறகு ஏன் நிராகரிக்கிருய் என்ரு அவன் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரமுடியும். விளையும் என்ற நம்பிக்கையால் விதைவிதைக்கிருேம். விளையயவில்லை. அதற்காக நிலத்தின்மீதோ அல்லது மழை பெய்யாத காரணத்தால் வானத்தின்மீதோ மான நஷ்டவழக்குத் தொடரமுடியுமா. அதே போலத்தான் சட்டங்கள் அனைவரையும் சமமாக நடத்தும் என்று முதலில் எதிர்ப்பார்க்கிருேம். பிறகு அவைகள் ஓரவஞ்சனையாக நடக்குமானுல் அதன் எல்லையைவிட்டு வெளியே வருவது தவிர வேறு வழியில்லை. அந்த அடிப்படையில் ஏற்பட்டதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் திராவிடநாட்டுப் பிரிவினை. இது இந்தியா சுதந்திரம்

அடைந்த பிறகு நாங்கள் கேட்ட கேள்வியல்ல. அதற்கு முன்பிருந்தே கேட்டுக் கொண்டிருக்கின்றோம். ஏனெனில் வெள்ளையன் ஆட்சியிலேயும் நாம் கொடுமை படுத்தப்பட்டோம். வெள்ளையருக்கேகூட வடவர் மேல் அன்பும் தென்னவர்மேல் வெறுப்பும் இருக்கத்தான் செய்தது என்பதை பல நிகழ்ச்சிகளின்மூலம் தெரிந்துக் கொண்டிருந்தோம். அவன் ஆட்சி ஒரே தன்மையில் நடக்கவில்லை. மேலும் அன்றும் வடநாட்டு பண முதலைகள் தென்னாட்டை வேண்டியமட்டும் சுரண்டிக் கொண்டிருந்தனர். ஆகவே அன்று ஏற்பட்ட வெறுப்பின் காரணமாக நாட்டுப் பிரிவினை வேண்டுமென்றோம். நாடு சுதந்திரமடைந்த பிறகு இவர்கள் விவேகிகளாக இருந்திருந்தால் என்ன செய்திருக்கவேண்டும். வளர்ந்து வரும் நாட்டுப்பிரிவினைத் திட்டத்தைக் கைவிடவேண்டிய அளவுக்கு சமாதான முறையிலே குறைகளைக் களைந்திருக்க வேண்டும். களைந்தெறிவதற்கான முயற்சிகளையாகிலும் எடுத்துக்கொண்டிருக்கவேண்டும். நாடு சுதந்திரமடைந்த ஒரு ஐந்தாறு ஆண்டுகளுக்குள்ளாவது ஒரே நாடு என்ற தன்மையும் நம்பிக்கையும் ஏற்படுகின்ற முறையில் வடநாட்டுத் தலைவர்கள் நடந்துகொள்ள வேண்டும். அதற்கான அறிகுறிகள் ஒன்றுமே இந்த ஏழு ஆண்டுகளாகக் காணவில்லை. இன்னும் சொல்லப் போனால், மூட்டை முடுச்சுகளோடு கப்பலேறிச் சென்ற வெள்ளைக்காரனே மீண்டும் வந்துவிடக்கூடாதா என்ற எண்ணம் பல கிராமங்களிலே பரத வருகின்றது. ஏனெனில், ஐந்தாறு இட்லர்களும் ஐம்பத்தாறு முசோலினிகளும், ஐயாயிரம் லூயி மன்னர்களும், ஐம்பதினாயிரம் சார்லஸ் மன்னர்களும் ஒன்றாக உருவெடுத்து ஆட்சியை நடத்தியதைப்போல் ஆட்சி இருக்குமானால், அந்த ஆட்சியை ஒழிக்காமல் வேறென்ன செய்யமுடியும்

இந்த முறையிலேதான் இன்றைய இந்திய சுதந்திர ஆட்சி நடந்துகொண்டிருக்கின்றது. இந்த கொடுமையை சகிக்காத திராவிட மக்கள்தான் கொடுமைகளை புள்ளி விபரங்களோடு காட்டிக்காட்டி பிரிவினையை வேண்டுகிறது. முன்னைய ஆட்சிக்கும் இன்றைய ஆட்சிக்கும் உள்ள வேறுபாட்டை கணக்கு விபரங்களோடு காட்டியிருக்கிறது. பிரிவினை வேண்டாமென்று சொல்ல அவர்களுக்கு ஆள்பலமும் சட்டபலமும் இருக்கலாம். ஆனால் நீதி பலமில்லை. அந்த காரணத்தால்தான், திராவிட நாட்டுப் பிரிவினைக்கோரும் எங்களைப்பார்த்து, வகுப்பு வாதிகள், நாத்தீகர்கள் குறுகிய மனப்பான்மையுடையவர்கள், அரசியல் கண்ணோட்டம் இல்லாதவர்கள் என்றெல்லாம் பழிசுமத்துகிறார்கள். இவை யெல்லாம் தகுந்த காரணங்களாகவோ, சரிக்கக்கூடிய மருந்தாகவோ இருக்கமுடியாது. நாங்கள் நாத்தீகர்களானால் கோபித்துக்கொள்ள வேண்டியவர் கடவுள்! இவர்களல்ல. நாங்கள் வகுப்புவாதிகள் என்றால் கோபித்துக்கொள்ள வேண்டியவர்கள் வகுப்பின் உச்சியிலே உட்கார்ந்துகொண்டு ஊஞ்சலாடிக் கொண்டிருக்கும் உயர் ஜாதிக்காரர்கள் டெல்லி பாராளுமன்றமல்ல, குறுகிய மனப்பான்மையுள்ளவர்கள் என்றால் விரிந்த மனப்பான்மையாக்க நீங்கள் எடுத்துக்கொண்ட முயற்சி என்ன, அல்லது உங்களுக்கிருக்கும் தாராள மனப்பான்மை எந்த அளவு. என்பதை கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கும் காலத்தில், ஒரு கொடுமையைப் போக்க சமுதாய முன்னேற்றத்தில் கவலை கொண்டவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி என்ன. இந்த குற்றங்களை நாம் மாத்திரம் கண்டிக்கவில்லை. இங்கே வந்து சென்ற பல அறிஞர்கள். இங்கேயே தங்கள் ஆதிக்கத்தை வாணிபத்தில் தொடங்கி செங்கோலில் முடித்த சீமையர்கள். அமெரிக்காவிலிருந்து வந்துபோன மேயோ இன்

னும் பலர் இந்திய சமுதாயக் கொடுமைகளை வண்மையாகக் கண்டித்திருக்கின்றனர். அவர்கள் ஆதிக்கபுரியினர் ஆத்திரம்கொண்டனர். நோயைக் கண்டுபிடித்து சொன்ன டாக்டருக்கு நன்றி சொல்லி – நோயைக் குணப்படுத்தும் வழிவகைகளைக் காணுமல், நோயைக் கண்டுபிடித்துச் சொன்ன டாக்டர் மேல் கோபித்துக்கொள்வது எவ்வளவு பைத்தியக்காரத்தனமோ அதைவிட மிக பைத்தியக்காரத்தனமாகும். நமது ஊழலை எடுத்துச் சொன்னவர்களைக் கண்டிக்க முற்படுவது. ஆகையாலேதான் இதுவரை இந்தியாவில் தோன்றிய எந்தக்கட்சியும் செய்யாத சீர்திருத்தப் பணியை நாங்கள் மேற்கொண்டிருக்கின்றோம். அதற்காக நாடு எங்களை பாராட்டியிருக்கவேண்டும். பகுத்தறிவு இல்லாத காரணத்தால் பகைக்காட்டுகிறது. நல்ல கொள்கையில் தொடக்கத்தில் இப்படித்தான் தொல்லைக்குள்ளாகும் என்ற உலக உண்மைக்கண்ணுடியில் பார்த்து ஆருதல்பெற்ற நாங்கள் அயராமல் இந்த பணியைத் தொடர்ந்து செய்துக்கொண்டு வருகிறோம். வருங்கால நன்மைக்கு உகந்தான பணியை மேற்கொண்டு நீங்களனைவரும் ஒத்துழைப்பீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே சமூகத்துறையில் இந்தக் கொள்கையும் அரசியல் துறையிலே நாட்டுப் பிரிவினைத் திட்டமும் வைத்துக்கொண்டிருக்கின்றோம். நாடு பிரிந்த பிறகு சமுதாய சீர்திருத்தத்தை சட்டத்தின்மூலம் செய்துவிடக்கூடியதா என்று பலர் கேட்கின்றனர். அவர்கள் அப்படி நினைப்பதில் வியப்பில்லை. ஆனுல் பல ஆயிரம் ஆண்டுகளாக ரத்தத்தோடு கலந்துவிட்டிருக்கும் மூடப்பழக்கங்களை திடீரென சட்டத்தின்மூலம் முறியடிப்பதைவிட கொஞ்ச கொஞ்சமாக மக்கள் மனதிலே இருந்து அகற்றிவிட்டால், பிறகு சட்டம் செய்கிறபோது மக்கள் அதிர்ச்சிகொள்ளமாட்டார்கள். ஏனெனில் நாம் யார்என்

பதும் நம்மிடம் ஆட்சிவந்தால் என்ன நடக்கும் என்ப தும் அவர்கள் நன்ருக உணர வாய்ப்பையும் தந்துவிடுகி ரேம். இதனுல் நமக்கு இரண்டுவித நன்மைகள் ஏற்படு கின்றது. ஒன்று:—ஒரு கருத்தைப் பலமுறை கேட்டுக் கேட்டு சிந்திப்பது. மற்ருென்று, பிற்காலத்தில் நாம் சட் டத்தின்மூலம் செய்யப்போகும் சீர்திருத்தத்தைக்கண்டு சீரிவிழாமல் இருப்பது ஆகவே இரண்டு விதகுறிக்கோளைக் கொண்டுதான் இந்த முறையைக் கையாளவேண்டியவர் களாேம். இன்னமும் சொல்லுவோனுல் இன்னமும் ஒரு கருத்து அடங்கியிருக்கின்றது. மதக் கோட்பாடுகளை யும் மூட பழக்கவழக்கங்களையும் ஒரே நாளில் இத்தனை கோடி மக்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு நாட்டில் தோன்றிய மதத்தை அந்த நாட்டில் வாழ்ந்த மக்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளவில்லை. எதிர்மறையான இரு வித மதக்கோட்பாடுகளை ஒரே வீட்டில் ஒரு தாய்க்குப் பிறந்த அண்ணன் தம்பிகள் இருவரும் இருவித மதங் களை ஏற்றுக்கொண்டார்கள். இந்த உலகத்தின் ஆசையிருந்தவர்களுக்கு இந்த உலகத்திலேயே மேலான பதவிகள் என்று கருதப்பட்ட குருக்கள், ஞானி கள், இருடிகள், தருமகர்த்தாக்கள் என்ற பட்டம் அளிக்கப்பட்டது. அந்த உலக ஆசையிருந்தவர்களை இந்த உலக ஆசையை நீக்கி அந்த உலகத்துக்குப் போவதான மார்க்கத்தைத் தேடச்செய்தது, இந்த முறை யில் ஏற்பட்ட மதக்கோட்பாடுகள் அபினிப் போதைப் போல், மதுபான வெறிபோல் மக்கள் சமுதாயத்தையே சூழ்ந்துக்கொண்டது. இதனுல் ஒரு சிலருக்குத் தவிர யாருக்கு என்ன நன்மை ஏற்பட்டது என்பதை யோசித் துப் பாருங்கள். கையிலிருந்த காசை கடவுள் தரகருக் குக் காணிக்கையாகச் செலுத்தி, வாழமுடியாமல் திண் டாடி தெருவில் நின்று, இறுதியில் பிச்சைக்காரனுய்,

கொள்ளைக்காரனாய், கொடியவனாய், திருடனாய், சிலர் போனது தவிர வேறு நன்மை யொன்றும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. மத்தியதர வகுப்பாரும், பணக்காரர்களும் ஆண்டவன் பேரைச் சொல்லி அண்டை அயலாரை சுரண்டிக்கொடுக்க உதவியதேயன்றி வேறு என்ன நன்மை செய்திருக்கின்றது என்பதை நாம் சிந்தித்தாக வேண்டும். ஆகவேதான் எந்த கோட்பாடுகள் மக்கள் நல்வழிபடுத்துவதற்குப் பதிலாக தீய வழியில் அழைத்துச் சென்றிருக்கின்றதோ, அதை மக்களுக்கு எடுத்துக் காட்டி திருந்தச் செய்வதே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சமுதாய சீர்திருத்த வேலைகள் என்றும், தனி நாடு பிரிவதே அதன் அரசியல் கொள்கை யென்பதும், அதற்கு இதுவரை தந்த விளக்கங்களின்மூலம் நீங்களனைவரும் ஓரளவுக்காவது புரிந்துக்கொண்டிருப்பீர்கள் என்று திடமாக நம்பி, புரிந்த ஒன்றை புறக்கணிக்காமல் இந்த நன்னோக்கங்கள் மேலும் மேலும் வளர உங்கள் பேராதரவைத்தாருங்கள் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கின்றேன். வணக்கம்.

28—4—53 பண்டாரவளை என்ற ஊரில் நடந்த பொதுக்கூட்டத்தில் ஆற்றிய சொற்பொழிவு.

தலைவர் அவர்களே! தாய்மார்களே! தோழர்களே. இங்கே ஒரு தமிழ் பேராசிரியர் தலைமை தாங்கியிருக்கின்றார். அவர் எங்களை இங்கே பேச அழைத்ததைவிட வேறு இடங்களுக்கு தனியாகப் பேச அழைத்திருக்கலாம் ஏனெனில் நாங்கள் இருவம் தனியாக சந்தித்து எது வேண்டுமானாலும் பேசியிருக்கலாம். இங்கே எங்களை அழைத்தது அதுவும் நாங்கள் எந்த கொள்கையுடைய கட்சிக்காரர்கள் என்று நன்றாக புரிந்துகொண்டு அரசியல் சமூக இயல் மதயியல் ஆகிய மூன்றைப்பற்றியும்

பேசக்கூடாதென்ற கட்டளையிட்டிக்ருகின்ருர். நான் அடைந்திருக்கும் ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டுவ தாஞல் அவரிட்ட கட்டளைக்கு இணங்கமுடியாதவனயி ருக்கின்றேன்! ஆனல் ஒரு பொதுக் கூட்டத்தின் சம்பிர தாயங்களை யொட்டிப் பார்க்கும்போது தலைவர் விருப்பத் திற்கு புறம்பாக பேசுவது அவ்வளவு நாகரீமுமகல்ல. மேடையில் நிருத்திய பிறகு கடிவாளம் போடுவதைவிட இந்த பொருளைப்பற்றித்தான் பேசவேண்டுமென்ருவது பணித்திருக்கலாம். நீங்கள் இந்த பாதையில்தான் சென்று தீரவேண்டுமென்று அவர் கைக்காட்டியிருந்தால், நாங் கள் இந்த பாதையைவிட்டு விலகி வேரோர் பாதையும் கண்டுபிடிக்கவும் முடியாமல் மீண்டும் தலைவரையே ஒரு பாதைக் காட்டும்படி கேட்கக்கூடிய அளவுக்கு அவ்வ ளவு சூனியமான அறிவு படைத்தவர்களுமல்ல. ஆகவே தலைவர் அவர்கள் எதைப்பற்றிப் பேசச்சொல்கிருர் என் பது முதலில் எனக்குத் தெரியவேண்டும். வேம்பு உட லுக்கு நல்லதென்பதும், வெல்லம் கெடுதி என்பதும் யாவருமறிந்ததே. ஆனல் மக்கள் வெல்லத்தை விரும் பும் அளவுக்கு வேம்பை விரும்பி உண்பதில்லை. அதே போல் தலைவருக்கு நாங்கள் சொல்லப்போகும் கருத்துக் கள் வேம்பாயிருக்கலாம். அவர் இதை உட்கொண்டால் உடம்புக்கு நல்லது. ஆனல் விரும்புவது வேம்பல்ல வெல்லத்தை விரும்பிக் கேட்கிருர். அதை அவருக்கு அவர் விரும்பிய அளவு தந்து அவர் உடலைக் கெடுக்க நாங்கள் தயாராயில்லை. வேண்டுமாஞல் வேம்பின் கசப்பு அவர் நாவை நேரடியாக தாக்காமல் கொஞ்சம் வெல் லத்தை தடவிவேண்டுமாஞல் கொடுக்கிருேம். அந்த அளவுக்கு எங்களால் செய்யமுடியும். தலைவர் எதை விரும்புகிருர் என்பதை மீண்டும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

தலைவர் எழுந்து நான் சொன்னதற்காக தோழர்கள் வருந்தக்கூடாது. என்னை தலைமைவகிக்கக் கேட்டபோது நான் இதையே வற்புறுத்தினேன். என்னிடம் வந்த நண்பர்கள். தமிழன் மேன்மை என்பதைப்பற்றிப் பேசும்படிக் கேட்டுக்கொள்ளலாம் என்றனர். சரி என்றேன். ஏனெனில் நான் ஒரு உயர்தர பள்ளித் தமிழாசிரியன் என் வேலைக்கு ஆபத்து வந்துவிடக்கூடாதே என்பதற்காக ஆகவேதான் நான் இப்படி சொல்ல நேர்ந்தது. ஆகவே தோழர்கள் மன்னித்து, என்பொருட்டு, தமிழன் மேன்மை என்பதைப்பற்றிப்பேசி என்னையும் இங்குக் கூடியிருக்கும் தோழர்களையும் பெருமைபடுத்துவார்கள் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். என்று சொல்லி அமர்ந்தார்.

**தொடர்ந்து சிற்றரசு.**

தலைவரும் தோழர்களும் இவ்வளவு சுற்றி வளைந்து வந்திருக்க வேண்டிய வேலையே இல்லாமல், விளம்பரம் செய்கிறபோதே இன்னின்னர் இன்னின்ன பொருள்களைப் பற்றிப் பேசுவார்கள் என்று விளம்பரப்படுத்தி அந்த துண்டு அறிக்கை ஒன்றை எங்கள் கையில் கொடுத்திருந்தால் போதும்.

ஏதோ சுட்டிக் காட்டமுடியாத காரணத்தால் தமிழன் மேன்மை என்ற பொருள்பற்றிப் பேசும்படி கேட்டுக் கொள்ளாமல், தமிழன் மேன்மை என்ற பொருள்பற்றிப் பேசச் செய்திருப்பது சுற்றிலும் தேயிலைத் தோட்டங்களைக் கொண்டுள்ள இந்த பண்டாரவளைக்கு மிகப் பொருத்தமானதாகும். ஏனெனில் இங்கே தமிழின் மேன்மை இருக்கும் அளவுக்கு தமிழன் மேன்மையில்லை. தேயிலைக் கிள்ளும் தமிழ்ப் பெண், அதற்கு பாதை வகுத்துக் கொடுக்கும் தமிழன், எடுபிடி வேலைகளைச் செய்யும் தமிழ்ச் சிறுவன் ஆகியோருக்கு தமிழின் மேன்மை எந்த அளவுக்கு

விளங்கும் என்பதை இன்று காலை நானும் தோழர் தங்கப் பழமும் ஒரு தோட்டத்தைச் சுற்றிப் பார்த்த போதே அறிந்துகொண்டோம்.

நூறு பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர். நூறு ஆடுகளை மேய்க்கக்கூட ஒரு இடையன் போதாது. ஆனால் ஆடுகளைவிட மக்கள் அறிவுடையவர்கள் என்ற காரணத்தால் அதட்டியவுடனே பயப்பட, கைகாட்டிய பக்கம் உட்காரச் செய்வதற்கு ஒரு ஆசிரியர் போதாதா என்று தோட்ட முதலாளிகள் நினைந்திருக்கக்கூடும். இந்த நிலையில் அவர்கள் கல்வியின் பொதுவான உயர்வையறிந்து, அதற்குமேல் தங்கள் தாய்மொழியான தமிழின் உயர்வை எங்ஙணம் காணமுடியும். தமிழ் மொழியின் பெருமை உலகமதிப்பீட்டில் பங்கு பெற்ற அளவு தமிழன் எங்ஙே உயர்வடைந்திருககிருன்! மற்ற எந்த மொழிக்கும் இல்லாத சங்கங்கள் தலைச்சங்கம் இடைச்சங்கம் கடைச் சங்கம் அமைத்து அதில் வளர்க்கப்பட்டதுதான் தமிழ் **Tamil will flourish itself without the aid of any other Languages,** மற்ற எந்த மொழியின் உதவியுமில்லாமல் தனித்தியங்கும் ஆற்றலுடையது தமிழ்' என்று கால்டுவெல் போன்ற பேரறிஞர்களால் போற்றப்பட்டதுதான் தமிழ். இலக்கண இலக்கியச் சுவையில் மிகக் கீர்த்தி வாய்ந்ததுதான் தமிழ். நினைத்ததை நினைத்தவாறே சொல்லும் ஆற்றலும் அழகும்படைத்ததுதான் தமிழ். எழுவாய் பயனிலை, செயப்படு பொருள்களை முன்னுக்குப் பின் மாற்றிச் சொல்லவேண்டிய வேலையில்லாமல் அதை அதை அவ்வதற்குறியதான இடத்திலே அமைத்து அழகுபட பேசும் ஆற்றலுடையதுதான் தமிழ். தமிழ் எப்போது தோன்றியது, யாரால் தோற்றுவிககப்பட்டது. அதன் வயதென்ன என்று இன்றுவரை பல தமிழ்ப் பேரறிஞர்

களுடைய ஆராய்ச்சியில் அடங்காமலே இருக்கின்றது. அதனுடைய பொலிவையும் திறனையும், திருவையும் பார்த்து சிலர், சிவனுர் அருளினுர் என்னும், சிலர் குடமுனியருளிப் போந்தார் என்றும் உரிமை கொண்டாடுகின்றனர். அதனுல் நமக்கு பொருமையில்லை. மாருக அச்சம் வளர்கிறது. ஏனெனில் ஆண்டவனுல் கொடுக்கப்பட்டதாகச் சொன்ன மொழி உலகத்திலேயே அதுவும் இந்தியாவிலேயே ஒரே ஒரு மொழிதான். அது வடமொழி என்று நம்மால் அழைக்கப்படும் சமஸ்கிருதம். அது இப்போது வழக்கிலில்லை. செத்த மொழியாய்விட்டது. பேசுவாரில்லை. சில வரிகள் பாடலில் படிப்பார் தவிர இலக்கண இலக்கியமில்லை. அதனுலேதான் இந்தியைக் கடன் வாங்கியாவது உயர்பிழைக்கலாமா என்று துணிந்திருக்கிறது. உயிர்போகும் நிலையில் அது அப்படிச் செய்வது தவிர வேறு வழியில்லை. ஆனுல் அதிலிருந்து நாம் பெறும்பாடமென்ன. ஆண்டவன் கொடுத்தமொழி. அதுவும் எந்த இடத்திலே கொடுத்தான். பாண்டவர்களும், கௌரவர்களும் குருதிக் கொட்டிக்கொண்டிருந்த குரு க்ஷேத்திரத்தில் கடவுள் கண்ணனுக வந்து காண்டீபனுக்குச் சொன்ன கீதைமொழி என்றல்லவா சொல்லப்படுகிறது. இந்த கீதைமொழியா இப்படி சீதையின் நிலை அடையவேண்டும் என்பதை சிந்திக்கவேண்டும். ஆகவேதான் ஆண்டவனுல் கொடுக்கப்பட்ட மொழிக்கு இவ்வளவு ஆபத்து இருக்கின்றதென்று தமிழாசிரியர்களுக்கு, அதுவும் குறிப்பாக சைவச்சீலர்களுக்கு அவ்வழி செல்லாதீர் என்று தெரிவித்துக் கொள்கின்ருேம். தமிழ் பிற மொழி கலவாமல் பேசலாம். ஆனுல் கலவாமல் இல்லை. ஏன் பல்வேறு மொழிகளைப் பேசும் மக்களோடு பழகுகின்ருேம். அதன்காரணமாக பலமொழிச் சொற்கள் நம் மொழியோடு கலந்துவிடுகின்றன. பல சொற்கள் பிற்கால

விஞ்ஞானக் கண்டுபிடிப்பின் காரணத்தால் சேர்த்துக் கொள்ள வேண்டியநிலை ஏற்படுகிறது. தமிழன் கடுமையைப் போக்க எளிய வேறு சொற்களை கையாளவேண்டி வந்துவிடுகின்றது. இலங்கைத் தலைநகர் கொழும்பில் உள்ள பெரிய புகைவண்டி நிலயத்துக்கு, 'கோட்டை புகை இரதஸ்தானம் என்று விளம்பரம் போட்டிருக்கின்றார்கள். இதில் நிலயம், அல்லது இடம் என்பதற்குப் பதில் ஸ்தானம் என்று எப்படி புகுந்தது. அதேபோல், சிவிறி என்ற தமிழ்ச்சொல், விசிறி என்று மாறியிருக்கிறது. திருமண அழைப்பிதழ் என்ற அழகான தமிழ்ச் சொற்கள் இருக்க விவாக சுபமுகூர்த்த பத்திரிக்கை என்று எப்படி வந்தது. திருமணம் என்ற சொல் கலியாணமாக மாறியதேன், சில சொற்கள் மாறுவதால் அபாயம் அதிகமில்லை. ஆனால் சில சொற்கள் மாறுவதால் கருத்தும் மாறி அபாயத்தையும் தந்துவிடுகிறது. மேற்கோளாக:-திருமணம், என்பது கலியாணம் என்று மாறியிருக்கிறது, இல்லை. மாற்றப்பட்டிருக்கிறது. கலியாணம் என்ற சொல்லின் பொருள் என்ன. கலி—சனி, ஆணம்—பிடிக்கிறது என்பது பொருள். புதியதாக வாழ்க்கையின் இன்பத்தை நுகரவேண்டுமென்று ஆடை அணிகலன்களோடு வீற்றிருக்கும் மணமக்களைப் பார்த்து, உங்களுக்கு சனி பிடிக்கிறது என்று சொன்னால் அவர்கள் நிலை என்னாகும் என்பதை நீங்களே முடிவு கட்டுங்கள். இப்படி சொற்கள் மாறுவதாலே சில நேரங்களில் அபாயமும் அச்சமும் தோன்றிவிடுவதுமுண்டு. ஏன்? உனக்கு சனி பிடித்திருக்கிறது என்று ஒருவனைப் பார்த்துச் சொல்லும்போது, எந்த விதமான பயமுமில்லாமல் சுயேச்சையாக இருந்த அவனுடைய எண்ணத்தில், நமக்கு சனிபிடித்திருக்கிறதாமே. சனிபிடித்தால் இன்னின்ன கேடுகள் நிகழும் என்று ஜோசியர்கள் சொல்லுகிறார்களே என்றெல்லாம் அவன்

நினைக்கத்தொடங்கி அன்று முதல் அவன் செய்கை எவற்றிலுமே தெளிவில்லாமல், எதைக் கண்டாலும் பயப்பட்டுக் கொண்டு தன்னிலையிலிருந்துதானே வீழ்ந்துவிடுகிறான். இதைத்தான் ஆங்கிலத்தில் sycological effect. என்கிறார்கள். ஆகவே தனித்தமிழில் பேச சில பொருள்கள் இடந்தருவதில்லை. புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்ட விஞ்ஞான பொருள்களின் பெயரை தமிழாக்க தலைவரைப் போன்ற பேராசிரியர்கள் முயல்வார்கள் என்பது என் வேண்டுகோள். முன்பு பல தமிழ் அறிஞர்கள் சேர்ந்து ஒவ்வொரு ஆண்டும், சொல்லாக்கல் மாநாடுகளை கூட்டி ஆராய்ச்சி செய்து வந்தார்கள். பிறகு அந்த மாநாடுகள் கைவிடப்பட்டன. அந்த முயற்சி மாத்திரமன்ரியில் பழைய தமிழ் இலக்கியங்களை எளிதாக்கி இன்றைய தமிழ் உலகம் எளிதாக தெரிந்துகொள்கிற நிலையை தமிழாசிரியர்கள் செய்துதர வேண்டும். ஏனெனில் இன்னும் எவ்வளவோ தமிழ் படித்தவர்களுக்கு, பற்றுள்ளவர்களுக்கு இலக்கியத்தைப் படித்துத் தெரிந்துக்கொள்ளுகிற அளவுக்குக்கூட அவைகளைத் தெரிந்துகொள்ள முடியாமல் பலர் திண்டாடுவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம் மேற்கோளாக. அக நானூற்றில் ஒரு செய்யுள். யாயும் யாயும் யாராகியரோ, எந்தையும் நுந்தையும் எம் முறைகேளீர்.என்று பேசிக்கொள்கிறார்கள்.இதன் பொருள் என்ன. என் தாய் யாரோ—உன் தந்தையும் எந்தவகையில் சுற்றத்தாரே தெரியாது, என்று சொல்லிவிட்டு அதற்குப் பின்வரும் இரண்டடிகளால், செம்மண்ணில் கலந்த மழை நீர்ப்போல நாம் இருவரும் கலந்துவிட்டோம் என்று மணமக்கள் முடிக்கின்றார்கள். இது ஒரு ஆசிரியருடைய உதவியில்லாமல் தெரிந்துக்கொள்வது மிகக் கடினமாகும். ஆகவே இதைப் போன்றவைகளை எளிய வருங்கால தமிழகத்துக்கு நல்குவது வரவேற்கத்தக்கதும், வருங்கால தமிழிளஞர்களுக்கு அவர்கள் அளித்த நற்

பரிசாகும். இந்த கருத்து தமிழ்ப் பேராசிரியர்களுக்குத் தெரியாது என்று சொல்லுவதற்கில்லை. தெரிந்தும் ஏன் செய்ய முன்வருவதில்லை.

கடினமான தமிழை எளிதாக்குவதன் மூலம் தமிழின் தரம் குறைந்துவிடும் என்று பயப்படுகின்றார்கள். ஒரு கட்டடச் சுவற்றில் சுண்ணாம்பு அடிப்பதனாலே உள்ளே இருக்கும் செங்கல் மறைந்துவிடுமே என்று பயப்படு வதைப் போன்றதாகும். தமிழை எளிதாக்குவதால் மூல நூலின் கண்ணியம் குறைந்துவிட முடியுமா? இப்போது எவ்வளவோ மூல நூல்களுக்கு எவ்வளவோ பேர்கள் அவரவர்கள் கருததுப்படி உரை எழுதுகின்றார்கள் அதனால் மூலத்தின் உண்மை மறைந்து விடுவதில்லை ஆகவே பல நூல்களுக்கு பலர் உரை எழுதிக்கொண்டி ருப்பதைவிட இந்த வேலையில் முயன்றால் வருங்காலம் அவர்களை உண்மையாக வணங்கியே தீரும்

அடுத்தது அரசியலைப்பற்றி பேசககூடாதென்று தலைவர் கட்டளையிட்டது. தலைவருக்கும் உங்களுக்கும் எனக்கும் நன்றாக நினைவிருக்கின்றது. அவர் விருப்பப் படியே நான் அரசியலைத்தொட எண்ணவில்லை. நீங்களும் விரும்பாதீர்கள். தலைவரும் விரும்பவில்லை. ஆனால் அரசியல் நம்மையறியாமலே, நாம் குழந்தைகளாகப் பிறந்த இரண்டு திங்களுக்குள்ளாகவே தொட்டுவிட்டது. நாம் பிறந்த சிறிது நாட்கள்வரை நம்மைப்பற்றி நமது பெற்றோர்கள் அரசாங்கத்திற்கு சொல்ல மறந்து விட்டார் கள். பொறுத்துப் பார்த்தது அரசாங்கம்! தகவல் கிடைக்கவில்லை. இறுதியாக ஒரு அதிகாரியை அனுப்பியது. அதிகாரியும் நம் வீட்டுக்கு வந்தார். உங்கள் வீட்டில் இரண்டு திங்களுக்கு முன்பு குழந்தை ஒன்று பிறந்ததா? என்றார். ஆம் என்றனர் பெற்றோர்கள். ஒத்தைக் குழந்

தையா, இரட்டைக் குழந்தைகளா, என்று அடுத்த வினவை போட்டார். ஒத்தைக் குழத்தை என்று விடையளித்தனர். ஆணு, பெண்ணு என்று அதிகாரி கேட்டார் ஆண் என்ருர் தந்தை. இவ்வளவும் குறித்துக்கொண்டு, காலாகாலத்தில் இந்த செய்தியை நீங்கள் அரசாங்க பிறப்பு வளர்ப்புப் பதிவு அதிகாரிக்கு அறிவிக்காததால் குற்றவாளியாகின்றீர்கள். ஆகவே இரண்டு ரூபாய்களை அபராதம் செலுத்த வேண்டிவரும், என்று சொல்லி விட்டுப் போய்விட்டார். நாம் குழந்தைகளாக இருந்த போதே நம்மை அரசியலார் தமது ஆளுகையின் ஒரு அங்கம் ஆக்கிவிட்டனர். இப்போது அரசியலைப் பற்றி நாம் கவலைப்படாமலிருக்கலாம். ஆனுல் ஒவ்வொரு நாளும் நாம் என்ன செய்து கொண்டிருக்கிரும் என்பதைப்பற்றி அரசாங்கம் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறது. ஏன்? நான் கொழும்பில் வந்திறங்கியது முதல் இன்று வரை' இனி நான் என் தாயகம் திரும்பும் வரை ஒரு சர்க்கார் நண்பர் என்னைத் தொடர்ந்து நடந்துக் கொண்டிருக்கின்ருர். அவருக்கும் எனக்கும் நேரடியான நட்போ பகைமையோ எதுவுமில்லை. ஆனுல் நான் இந்த நாட்டு அரசியலின் விருந்தாளி என்ற முறையில், ஆங்காங்கே விருந்தை உண்கிறேனு, அல்லது நானே விருந்தையளிக்கின்றேனு, அந்த விருந்தில் விஷத்தைக் கலந்து விடுகின்றேனு என்று கண்காணிப்பதற்கர்க பல தொல்லைகளுக்கிடையே வந்து கொண்டிருக்கின்ருர். அவரடையும் தொல்லையை பார்த்து எங்கள் வழியில் சிறிது பங்கிட்டு அளிக்கலாமா என்று நினைத்தால், அவர் தன் கடமையுணர்ச்சியின் காரணத்தாலும், அவர் எங்களோடுசேர்ந்து வருவதன் மூலம் சர்க்கார் தவருகக்கருதுமென்ற காரணத்தாலும் மறுத்து விடுகிருர். அவருடைய தலை சாயாத கடமைக்காக நன்றி செலுத்துகிறேன். ஆகவே குழந்தையாக இருந்தபோது தொடர்ந்த அரசியல் சுடலைக்குப்

போகும் வரையில் நம்மை விடப்போவதில்லை. ஒரு குறிப்பிட்ட கட்சியிலே இருப்பவன்தான் அரசியல்வாதி என்பதில்லை. வரி செலுத்துபவனும், சட்டங்களை கற்றுணர்ந்து வழக்குகளுக்கு வாதாடும் வழக்கறிஞர்களும், நீதிதரும் அதிபதிகளும், சர்க்கார் தரப்பில் சாட்சி சொல்லும் ஒரு சாதாரண மனிதனும், ஏன், இங்கே தேயிலையைக் கிள்ளும் ஒவ்வொரு தொழிலாளியும் அரசியல்வாதிதான். வேண்டுமானால், நாம் அரசியல்வாதிகளா இல்லையா என்பது அவர்களுக்குத் தெரியாமலிருக்கலாம். அவர்களுக்குப் பதிலாக நாமே சிந்தித்துப் பார்ப்போம். தேயிலைக் கொழுந்தை ஏன் கிள்ளுகிறார்கள். வெளிநாட்டுக்கனுப்ப, வெளிநாட்டுக்கு அனுப்பினால் முதலாளிக்கு அதன் விலைவரும். அதனால் சர்க்காருக்கு ஏற்றுமதி வரி வரும். அதனால் சர்க்கார் சக்கரம் சுழலும். இப்படியேதான் ஒருவனுக்கு ஏற்படுகிற வயிற்றுவலி வயிற்றுப் போக்குக்கூட சர்க்காருக்கு சம்மந்தப்பட்டு வருகிறது, 'இங்கே மலஜலம் கழிக்காதே' என்ற அறிவிப்பு இருக்கும். அந்த இடத்தில் அவன் உட்கார்ந்துவிடுகிறான், மேலும் இரண்டடிகள் போக முடியாத வயற்றுக் கோளாறின் காரணத்தால், உடனே கைது செய்யப்பட்டு விடுகிறான். அபராதம், அல்லது தண்டனையடைகிறான். இது அவன் அறியாமல் செய்த குற்றமென்றோ, அறிந்தும் தாள முடியாமல் செய்த குற்றமென்றோ நாம் சிந்திக்கத் தேவையில்லை என்றாலும், எப்படியோ அவன் செய்கை அரசியலுக்கு சம்மந்தப்பட்டுவருகிறது. நீக்ரோக்களும், எஸ்கிமோக்களுங்கூட காடுகளில் திரிந்துகொண்டிருந்த காலம் வரையில்தான் அரசியலைப்பற்றி சிந்திக்காமல், அதைப்பற்றி பேசாமல் இருந்தார்கள். இன்று அவர்

களும் அகில உலக அரசியல் அரங்கில் ஒரு இடத்தைப் பெற்றுவிட்டார்கள். ஒரு காலத்தில் அரசியலைப் பேசாமல் காடுகளிலே திரிந்துகொண்டிருந்த நீக்ரோ அரசியல் பேசிய பிறகு நீதிபதியாக வீற்றிருக்கின்றான் அமெரிக்காவில். அங்கே அரசியலைப்பற்றிப் பேசுவது நன்மை. இங்கே அரசியலைப்பற்றிப் பேசுவது தொல்லை என்கிறார் தலைவர். இது நாட்டின் குற்றமேயன்றி வேறில்லை. 'அரசியலைப்பற்றிப் பேசாதே' என்பதற்குப் பதில் அரசியலில் இன்னன்ன பொருள்பற்றிப் பேசு என்று எல்லை வகுத்திருக்கலாம். ஜனநாயகமும் சர்வாதிகாரமும், முடியாட்சியும் குடியாட்சியும், மக்கள் சர்வாதிகார ஆட்சியும், நாட்டு நிலையும், சர்க்காரும் சட்டங்களும், 'சர்க்கார் குரலும்', தனி மனித சுதந்திரமும் என்பன போன்ற பொருள்களில் ஏதாவதொன்றைப் பேசும்படி பணித்திருக்கலாம். அப்படி ஒன்றையுமே செய்யாமல் பேச்சாளிகளை சோதனைக்குள்ளாக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். வணக்கம்.

**நாவலபிடியாவில், தமிழர் மறுமலர்ச்சி மன்றத்தின் சார்பாக தோழர் கதிரேசன் B. A. அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு.**

*குறிப்பு:* இராமாயண பிரியர்களும், சைவச்சமயத் தோழர்களும், கல்லூரி மாணவர்களும், கற்றறிந்தோரும் அதிகமாக கூடியிருந்த கூட்டம் இது. இதில் பேசப்பட்ட பொருள் இராமாயணத்தைப்பற்றியதாகும்.

அருமைத் தலைவர் அவர்களே! அன்புள்ள தோழர்களே! மதிப்புக்குரிய தாய்மார்களே! வணக்கம்.

சங்க காலத்தின் அமைப்பு இப்படித்தான் இருந்திருக்க வேண்டும் என்று மனதிலே கற்பனை செய்து பார்த்தால் அது தலைச்சங்கமாயினும் இடைச்சங்கமாயினும் கடைச் சங்கமாயினும் இப்படித்தான் இருந்திருக்க வேண்டும் என்று சொல்லுமளவுக்கு பேராசிரியர்களையும், மதத் தலைவர்களையும், சைவப் பெருமக்களையும், கல்லூரி மாணவர்களையுமே அதிகமாகக் காண்கின்றேன். களிப் பெய்துகின்றேன். இவ்வளவு சிறந்த சிந்தனைவாதிகள் இடையே இன்று நாட்டிலே பலர் நாவில் நடமாடிக் கொண்டிருக்கும் இராமாயணத்தைப்பற்றியும், எம் மதமும் இம்மதத்துக்கு ஈடாகாதெனும் சைவச் சீலர்கள் தழுவிவரும் சிவ மதத்தைப்பற்றியும் தர்க்க நோக்கத் தோடு ஆராய்வதற்கொப்பான நல்ல இடம் இதுதான் என்று நான் நினைப்பது மாத்திரமல்ல, எனது அருமை நண்பரும், கண்டி கல்லூரி தலைவரும், இக்கூட்டத்தின் தலைவரும், உங்கள் உள்ளம் நிறைந்த அன்புக்கு அருகதையானவருமான தோழர் கதிரேசன் அவர்கள் சொன்னதும் அது தான்.

ஆகவே அந்த இரண்டு பொருள்களைப்பற்றி நான் பேசத் தொடங்குமுன் உங்களை நீங்கள் ஏதோ ஒரு சட்டசபையில் நீண்ட விவாதத்தில் ஈடுபட்டிருப்பதாக நினைத்துக்கொள்ளவேண்டும். ஆனால் சட்டசபையை விட இதைக் கொஞ்சம் அமைதியாகவும் அருமையாக வும் நடத்தலாம். ஏனெனில் சட்டசபையில் புகாத பிரச்சனைகளே இல்லை. ஆனால் இங்கே கண்ட கண்ட பிரச்சனைகளுக்கு இடமில்லை. நாம் நம்பும் ஒன்றைப் பற்றிப் பிறரைப் பேசச் செய்து செவி குளிர கேட்டுப் போவதுதான், உலகத்தின் எந்த கோடியிலும் உள்ள

மனிதனின் இயற்கைக் குணமாயிருக்கிறது. ஆனால் நீங்கள் அதற்கு முற்றிலும் மாருக, நீங்களே அன்ருடம் தொழுது, ஓய்ந்த நேரத்தில் பழுது பார்த்துக்கொண்டு இருக்கும் ஒன்றைப்பற்றி எழும் தர்க்கவாதத்தைத் தாராளமாக அனுமதித்திருக்கின்றீர்கள். இது எல்லா இடத்திலும் எளிதாக நடக்கக் கூடியதல்ல, ஆகவே எனது இலங்கை சுற்றுச்செலவில் மறக்க முடியாத ஊர் 'நாவலபிடியா' என்பதை மகிழ்ச்சியோடு உங்களுக்கு சொல்லிக்கொள்ளுகின்றேன்.

முதலில் இராமாயணத்தைப்பற்றி எடுத்துக்கொள்வோம். இராம—அயனம் என்ற இரு சொற்புணர்வின் அடிப்படையிலே எழும்பிய வார்த்தை, இராம—இராமனுடைய, அயனம்—கதை, இராமனுடைய கதை என்பது தான் இதற்கு நேரடியான பொருள். கதைகள் பெரும்பாலும் கற்பனை என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டியவர்களாகிருேம். இல்லையானுல் இராம சரிதம் அல்லது வரலாறு என்றிருக்க வேண்டும். இராம வரலாறு என்பதைத்தான் இராம கதை என்று சொல்லுகிருர்கள் என்று உங்களில் யாராவது சொல்ல முன் வந்தால், அப்படிச் சொல்ல நினைக்கின்றவர்களையே வரலாற்றுக் கண்ணுடியை அணிந்துகொண்டு இந்த இலங்கையைச் சுற்றி வரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இராமாயணத்தின் பிற்பகுதி முழுதிலும் இலங்கை என்ற பெயரே அடிபடுகிறது. ஆனுல் இலங்கையில் இராவணன் மாளிகை இருந்த இடம், போர்க்களம், அவன் உலவிய தங்க மாளிகை, ஆகிய எதற்கும் எந்த ஆதாரமும், சின்னங்களுமில்லை. சீதையின் கண்ணீர், இராமனின் செங்கண், வானரங்களின்

அறுபட்ட வால்கள், ஆகிய எவற்றிற்குமே ஆதாரங்கள் இல்லை. எங்கேயோ ஒரு இடத்தில் சீதையின் காலடி இருப்பதாகச் சொல்லப்படுகிறது, அதுவும் ஒரு கற் பாறையின் மேலே. கற்பாறையின் மேலே கால் வைத்தால், காலடிகள் படருமா? அப்படி படரும் அளவுக்கு இருந்ததென்றால் சீதை செம்பலான உருவமா, இரும்பாலான உருவமா, எஃகுவாலான உருவமா, இந்த உலோகங்களால் சிலை செய்து கற்பாறையின் மேல் வைத்தாலும் இன்றளவும் தெரியுமளவுக்கு காலடிகள் படர முடியுமா? அப்படியே படர்ந்திருந்தாலும், கம்பன் எப்படி இவ்வளவு கடினமான உருவத்தை மனமுவந்து மெல்லியலாள் என்று வர்ணித்திருப்பான் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். இராமாயணத்தை மக்கள் பாராயணம் செய்தால் உடன்பிறந்த வாஞ்சை வளரும் என்று சொல்லப்படுகிறது. உண்மை தானா? பரதனுக்கே பட்டமளிப்பதாக வாக்களித்திருந்தான் தசரதன் தன் மூன்றாவது மனைவியாகிய கைகேயிக்கு. கேகய நாட்டு மன்னன் தசரதனுக்கு தன் பெண்ணைக் கொடுக்கும் போதே இந்த வாக்குறுதியைப் பெற்றுக்கொண்டு தான் கொடுத்தான். பெண்ணும், ஆணும் யுக்த வயதா இல்லாத பல திருமண ஏற்பாடுகளிலே இந்த மாதிரி ஏ தா வ தொரு நிபந்தனையின் பேரில்தான் பெண் கொடுக்க வேண்டும் என்ற நிலைக்கு பெற்றோர்கள் வந்துவிடுகின்றார்கள். கேகயக் கோனுக்கு தசரதன் மருமகன் ஆவது மட்டில்லா மகிழ்ச்சிதான். எனினும் மருமகன் வயோதிகன். இறப்பின் சமீபத்திலே நிற்கின்றான். அவனுக்குப் பெண்ணைக் கொடுத்தால் பிள்ளைகள் பிறக்குமா என்றுகூட அவன் நினைக்கவில்லை. அறுபதினாயிரம் மனைவிகளைக் கட்டிக்கொண்ட தசரதனுக்கு இவ்

வளவு பேர்களிடம் பிள்ளை பிறக்காமல் கைகேயினிடத்தில் மட்டுமா பிள்ளை பிறக்கும் என்று அவன் எண்ணியிருக்க வேண்டும். எப்படியும் நாம் ஒரு பாதுகாப்பான விவகாரத்தில் இருப்பது நல்லது என்ற எண்ணத்தால் கேகய நாட்டரசன் கேட்டுவிட்டான். இப்படி இவன் கேட்பதற்கு ஒப்புக்கொண்டால் தன் மக்களிடையே (பிறந்தால்) சகோதர வாஞ்சை வளர முடியுமா என்பதை தசரதன் அறியாதவனல்ல. அந்த இடத்தில் அவன் தன் குடும்பத்தில் சகோதர உணர்ச்சியை வளர்ப்பதைவிட தான் கைகேயியைத் திருமணம் செய்துக்கொள்ள வேண்டுமென்ற உணர்ச்சியே மிகுந்தவனாக காணப்பட்டான். உடன்பிறந்த ஒற்றுமை குலைவதற்கு முதல் முதல் உலை வைத்தவன் தசரதன் என்று நான் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டுகிறேன்.

இரண்டாவதாக:—'ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ தெரியினம்மா' ஆயிரம் இராமர்கள் சேர்ந்தாலும் உன் ஒருவனுக்கு இணையாக மாட்டார்கள், என்று பரதனை வர்ணித்து இராமனை இகழ்ந்ததின் மூலம், உடன் பிறந்த ஒற்றுமைக்கு இரண்டாவதாக உலை வைத்தவன் குகன்.

## வாலி வதை

மூன்றாவதாக:—அரக்கரோர் அழிவு செய்துக் கழிவரேல் அதற்கு வேறோர் குரகினத்தாரைக் கொல்ல மனு நெறி கூறிற்றுண்டோ, இறக்கம் எங்கு குதித்தாய், என்பா லெப்பிழை கண்டாயப்பா, பறக்கழி இது நீ பூண்டால் புகழை யார் பறிக்கர் பாலார், என்று தன் மரணத்தருவாயில் வழிந்தோடிய ரத்தத்தைத் துடைத்துக்கொண்டே கேட்டான் வாலி, பதில்

சொல்ல முடியாமல் திண்டாடுகின்றன் இராமன், அருகிருந்த இலக்குவன் அண்ணனை வெகுண்டான். ஆரியனாகிய நீ பிறந்த பிறகு நமது ஆரிய குல சந்ததிக்கே இழுக்கையுண்டாக்கிறாய் என்று சினக்கிறான். "சூரியன் மரபுக்குமோர் தொன்மரு ஆரியன் பிறந்தாக்கினையாமரோ" என்கிறான் இலக்குவன்.

நான்காவதாக:—இவ்வளவு சகோதர வாஞ்சையை வளர்க்கிற நல்லவர்கள் என்று கம்பனால் வர்ணிக்கப்படுகிற இவர்கள் நாணயமும் யோக்கிய பொறுப்பும் இருந்திருந்தால், அண்ணனைக் காட்டிக்கொடுக்க தன்னிடம் தஞ்சமடைந்த விபீஷணனுக்கு என்ன சொல்லியிருக்கவேண்டும். விபீஷணா 'நீ உன் உடன் பிறந்தானுக்கு துரோகம் செய்யாதே. நீ அங்கேயே போ' என்று அவனுக்கு நற்புத்தி புகட்டி அனுப்பியிருக்கலாம். இந்த இடத்தில் இராமாயணத்தைப் பக்தி பரவசத்தோடு கொண்டாடுகிற உங்களில் சிலர் முகம் சுளிப்பதைக் காண்கிறேன். ஏன், இந்த இடத்தில் நீங்கள் ஒரு கேள்வி கேட்கலாமா என்று எண்ணுகிறீர்கள். நான் உங்களுக்கு அந்த வேலையைக் கொடுக்காமல், நானே அந்த கேள்வியை எழுப்பி விடையைக் கண்டு பிடிப்போம். இராவணன் அக்ரமமாக சீதையைத் தூக்கிச் சென்றதால் அவன் தண்டனைக்குள்ளாக வேண்டியவன் என்பதும், அவ்வளவு கொடுமையானவனை தன் அண்ணன் என்று சொல்ல மனமில்லாமல் இராமனிடம் தஞ்சமடைந்தான் விபீஷணன் என்று கேட்கலாமா என்றுதான் நீங்கள் நினைக்கின்றீர்கள். ஆனால் இதே முறையை இராமன் குடும்பத்துக்கு வைத்துப் பேசுவோம். சூர்ப்பனகையை இராமன்

சுட்டிக்காட்ட முடியாத சில பாகங்களை துண்டித்த போது அந்த செய்கை மகாக்கொடியதென இலக்குமணனுக்குபட்டு, உடனே இராவணனிடம் ஓடி சரணாகதி யடையவில்லை. இங்கேதான் ஆரிய இன உணர்ச்சி எப்படி இருந்திருக்கிறது என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

ஐந்தாவதாக :—அப்படி ஓடிவந்த விபீடணனைக் கேட்கின்றான் இராமன், உன் மற்றோர் அண்ணன் கும்பகர்னனைக் கொன்று விடலாமா என்று கேட்கிறான். எவ்வளவு நெஞ்சுத் துணிவிருந்தால் அண்ணனைக் கொல்ல தம்பியிடமே யோசனை கேட்டிருப்பான் என்பதைக் கொஞ்சம் விருப்பு வெறுப்பில்லாமல் சிந்தித்துப் பாருங்கள். அப்படிக் கேட்ட இராமனுக்கு, அண்ணனைக் கொல்லுவதில் பயனில்லை. கூடுமானால் அவனை (கும்பகர்னனை) யும் நம்மோடு சேர்த்துக்கொண்டு இராவணனைத் தொலைத்துவிடலாம். என்ற யோசனையைப் பின்வரும் அடிகளால் விளக்குகின்றான் கம்பன். 'கொன்றொரு பயனுமில்லை கூடுமேற் கூட்டிக்கொண்டு நின்றதுபுதிரி என்றனன் நிருதர்கோன்' நிருதர்க்கோனாகிய விபீடணன், அண்ணனைக் கொல்வதால் ஒரு பயனுமில்லை. கூடுமானால் நம்மோடு சேர்த்துக்கொண்டு மற்ற காரியங்களைச் செய்வோம், என்கிறான்.

ஆறாவதாக :—இப்படி யோசனைசொன்ன விபீடணனையே இந்த தரகு வேலைக்கு அனுப்பி வைக்கின்றான். அண்ணனைத் தன் பகைவனிடம் சேர்க்கத் தம்பியே தூது செல்கிறான். இது அரசன் மகன் இராமன் மக்களுக்கு கற்றுக்கொடுத்த சகோதர வாஞ்சைதானா என்பதையும் நீங்கள் தயவுசெய்து சிந்திக்கவேண்டும்.

ஏழாவதாக:—இவ்வளவு துணிவோடு சென்ற விபீடணன் முகத்திலறைந்ததைப்போல் பதில் சொல்லி யனுப்புகின்றான் கும்பகர்ணன். 'இராமனிடம் நான் சரணாகதி யடைந்ததைப்போல் நீயும் அடைந்து விட்டால் இலங்கையை உனக்கே அளிப்பதாகச் சொல்கிறான். ஈரேழு உலகங்களிலுள்ள பகை தீரும் என்கிறான். தேவர்கள் நண்பர்களாவார்கள் என்கின்றான்.

செம்பிட்டுச் செய்த விஞ்சித்திருநகர் செல்வம்தேரி, வம்பிட்டுத்தெரிய லெம்முனுயிர்க் கொண்ட பகையை வாழ்த்தி, கும்பிட்டு வாழ்கிலேன் யான், கூற்றையும் ஆடல் கொண்டேன். மிக நேர்த்தியான தங்கத்தாலாக்கப்பட்ட கனக மாளிகையை உடைத்தாயிருக்கிற இலங்கையை எனக்களிக்க இவன் யார். அப்படியே அவன் தருவதாயினும், எனக்கு முன் பிறந்தவனைக் கொல்ல வேண்டுமென்று முடிவுகட்டிவிட்டவனையா நான் கும்பிட்டு வாழப்போகிறேன். அதற்குமாறாக எமனிடம் போராட அழைத்திருக்கின்றேன். அந்த துரோகி நீயாகவே இரு. என்கிறான், கும்பகர்ணன். அண்ணன் இராவணன் செய்தது அக்ரமம் என்று மீண்டும் சுட்டிக் காட்டுகின்றான் விபீடணன். அதற்கும் கீழ்வருமாறு பதில் அளிக்கின்றான். 'திருத்தலாம் தீராதாயின் பொருத்தொரு பயனும் உண்டோ போர்த் தொழில் புரிவதல்லால்' அப்படியே அண்ணன் அடாது செய்திருந்தால் திருத்துவோம். திருந்தவில்லையென்றால் அவனோடு பிறந்ததற்காக போரில் இறப்பது தவிர வேறு நல்வழி எதுவுமில்லை என்றான் கும்பகர்ணன். இனி பொருத்திருந்தும் பயனில்லை. வெட்கித் தலை குனிந்து வந்தவழி நடந்தான் விபீடணன். இந்த இடத்

தில் கும்பகர்னனுக்கும் இராவணனுக்கும் ஏற்பட்ட சகோதர வாஞ்சையைப்பற்றி எண்ணுவாரில்லை. எடுத்துப் பேசுவாருமில்லை. போகட்டும் இவ்வளவு ஒற்றுமையாக இருந்த சகோதரர்களிடம் நடந்ததென்ன.

மாரீசன் மாய மானாக வந்தான். விரும்பினாள் சீதை. பின் தொடர்ந்தான் இராமன். தனியே இருந்தான் இலக்குமணன், குடிசையின் வெளியே; உள்ளே இருந்தாள் சீதை, நெடுநேரம் காணாத இராமனைத் தேடப்போ என்கிறாள் சீதை. இலக்குமணன் அங்கேயே நிற்கிறான். இலக்குமணன் பார்வையில் சந்தேகப்பட்டாள் சீதை. பச்சையாகச் சொல்லிவிட்டாள்! பதறிய இலக்குமணன் தன் முன்னோன் நடந்த வழி நடந்தான். இங்கே கெட்ட எண்ணம் இலக்குமணனுக்கு வந்ததா இல்லையா என்பதல்ல நமது ஆராய்ச்சி. ஒரே குலத்தில் பிறந்த இவர்களிடையே இந்த சந்தேகங்கள் எழும்பு கிறதே என்பதை எண்ணும்போது, இதற்குப் பெயர் சகோதர வாஞ்சையா என்பதையும் நாம் சிந்தித்தாக வேண்டும்.

அடுத்தது இராமன் ஒரு தன்னம்பிக்கையற்றவன், சந்தேகி, சுய சிந்தனையில்லாதவன். அவன் கண்களில் சாந்தம் இல்லை. சந்தேகந்தான் குடிகொண்டிருந்தது என்பது நம்முடைய குற்றச் சாட்டல்ல, கம்பனின் எழுத்தாணியின் குற்றச்சாட்டு.

இராவணனால் தூக்கிச் செல்லப்பட்ட சீதையை மீட்டுக்கொண்டு வந்தபிறகு, அவளுடைய தூய்மையை அறிய தீ குளிக்கச் சொல்கிறான். அப்படியே செய்து தன் தூய்மையை நிலை நாட்டுகிறாள். உன்னை

இராவணன் ஏதாவது செய்தானா என்று கேட்கிறான். என் உடல் என்ன ஆயிற்றோ எனக்குத் தெரியாது. என் உள்ளம் மட்டிலும் தங்களிடமே இருந்தது என்கிறாள். இவ்வளவுக்கும் பிறகு யாரோ ஒரு ஆடை வெளுக்கும் தொழிலாளி, ஏதோ சொல்லிவிட்டான் என்ற காரணத்துக்காக, முழு கர்ப்பவதியாயிருக்கும் சீதையை தண்டகாருண்யம் அனுப்பிவிடுகின்றான். இது இராமனுக்கிருந்த கருணையின் தன்மையா? இதேபோல் பல உதாரணங்களைக் காட்டலாம். ஆரியர்க்கும் நமக்கும் உள்ள நாகரீக வேறுபாடுகள் பலவிடங்களில் தொக்கி நிற்பதைக் கம்பன் காட்டுகிறான். ஆரியர்கள் காதலுக்காகவோ, இன்ப நுகர்ச்சிக்காகவோ, ஒற்றுமை பண்பாட்டுக்காகவோ திருமணம் செய்துகொள்வதில்லை. மக்கள் பேறு ஒன்றைக் கருதியே திருமணம் செய்து கொள்ளுகின்றார்கள். புத்திரர்கள் இல்லாவிட்டால் 'புத்' என்னும் நரகத்துக்குப் போய்விடுவார்களாம். ஆகையாலேதான் எப்படியும் புத்திரர்கள் பெற்று தீரவேண்டும் என்ற எண்ணத்தினால்தான் முதல் திருமணம் செய்துகொண்ட மனைவிக்கு புத்திரப்பேறு இல்லையானால் இரண்டாவது திருமணம், அவளுக்கும் குழந்தைகள் பிறக்கவில்லையானால் மூன்றாவது மனைவி, இப்படி குழந்தைகள் பிறக்கும்வரை எத்தனை மனைவிமார்களை வேண்டுமானாலும் அவர்கள் திருமணம் செய்துகொள்வார்கள். இந்தப் பட்டியலில் முதலிடம் பெறுபவன்தான் தசரதன். ஏன்? பாண்டவர்களை எடுத்துக்கொண்டாலும் அதே கெதிதான். பாண்டுவே தன் மனைவி குந்தியை அழைத்துக் கீழ்வருமாறு சொல்லுகிறான்.

"குந்தி! நமக்குப் புத்திரர்கள் இதுவரை இல்லை. ஆகையால் நான் 'புத்' என்னும் நரகத்துக்குப் போக வேண்டி வருமே என்று பயப்படுகிறேன். நானும் உன்னைத் தொடக்கூடாது, தொட்டால் என் தலை இரண்டாயிரம் சுக்கல்களாய்விடும் என்பதும் நீ அறியாததல்ல. ஆகவே நான் உன்னைத் தொடுவதற்கில்லை. ஆகவே நான் உன்னைத் தொடாமல், எப்படியாவது, எங்கு சென்றாவது, சாமர்த்தியமாகக் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று கெஞ்சுகிறான். அவன் வேண்டுகோளின்படியேதான், அவனுக்குத் தெரிந்தே சந்திரனிடமும், சூரியனிடமும், வருணனிடமும், இந்திரனிடமும் கலவி செய்து ஐவரைப் பெற்றாள். ஆறாவது ஒருவனையும் குந்தியே பெற்றெடுத்து (கண்ணனை) பெட்டியில் வைத்தனுப்பிவிட்டாள் என்று பாரதக்கதை செப்புகின்றது, மாமியாரின் பரம்பரைக் குணம் தவறாமல் மருமகளும் (திரௌபதி) ஐந்து பேர்களைத் திருமணம் செய்துகொண்டு, ஆண்டுக்கொருவரை அனுபவிக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. அதனாற்றான் தங்கள் கண்ணெதிரிலே, தங்கள் மனைவியை, மாற்றான் அவைக்களத்திலே அவமானப் படுத்துகிறபோது, எனக்கென்ன—உனக்கென்ன என்பதைப்போல, ஒருவனுக்காவது வீரம், அவமானம், கோபம் இல்லாமல், எல்லாரும் களிமண் உருண்டைகளென, பாண்டவர்கள் ஐவருமே இருந்துவிட்டனர். ஒருவன் ஐந்து மனைவிகளைக் கட்டிக்கொள்வதும், ஒருவள் ஐந்து கணவன்களைக் கட்டிக்கொள்வதும் எவ்வளவு அபாயம் என்பதை, பாரதம் சுட்டிக் காட்டுவதாயிருக்கின்றதே தவிர, ஒழுக்கம் என்பதற்கு அதிலே எங்கே இடமிருக்கிறது என்பதை தயவு செய்து சிந்தித்

துப் பாருங்கள் என்று கேட்டுக்கொண்டு, இன்று உங்க ளிடையே இதைத்தான் பேசித் தீரவேண்டும் என்று கேட்டுக்கொண்ட, நாவலபிடியா தமிழ் மறுமலர்ச்சி மன்றத்தாருக்கு என் நன்றியையும் வணக்கத்தையும் கூறிக்கொண்டு என் சொற்பொழிவை முடிக்கின்றேன். வணக்கம்.

## கல்லூரிப் பேச்சு

**8—8—53ல் கேதட்ரல் கல்லூரியில் பகல் 12 முதல் ஒரு மணி வரை, 'புது உலகம்' என்ற தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவு.**

*தலைவர் அவர்களே! மாணவ மாணவிகளே! தென்னாட்டிலே இருந்து வந்த எங்களை மனமாரப் பாராட்டி, இந்த கல்லூரியிலே எங்களைப் பேசவைக்க வேண்டும் என்று இன்றைய கூட்டத்தின் தலைவரும், ஏன்? எப்போதும் உங்கள் தலைவருமான பிரின்ஸ்பால் அவர்கள் எண்ணப்படி நாங்கள் உங்களுக்கு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறோம். அதுவும், 'புது உலகம்' என்ற பொருள்பற்றிப் பேசவும் பணிக்கப்பட்டிருக் கின்றோம். இங்கே பேச வந்திருக்கின்ற எங்கள் இருவரி லேயே நான் கொஞ்சம் பழைய உலகத்தான் போலவும், தோழர் தங்கப்பழம் அவர்கள் புது உலகத்தார்போலவும் வயதிலும் ஆடையிலும் காணப்படுகின்றோம். ஆனால் இவ்வளவு சிறிய காலமாறுதலைப் பற்றியல்ல நாம் பேச எடுத்துக்கொண்ட பொருள். மிகப் பழைய காலத்துக் கும் இன்றைய காலத்துக்கும் ஏற்பட்டிருக்கும் மாறுதல் பழைய மனிதர்களின் சிந்தனை சக்திக்கே எட்டாத ஒன்றாக இருந்தது. உலகிலேயே மனிதனின் உடல் உழைப்பிலிருந்து மீளவேண்டுமென்ற பேரவாவிலிருந்து*

ஏற்பட்டதுதான் அறிவுப் புரட்சி. அதைவிட மேலாக தன் கண் முன் நடக்கும் நிகழ்ச்சிகளை அப்படியே ஒப்புக் கொண்ட நிலையிலிருந்த மனிதன் ஒவ்வொரு நிகழ்ச்சி யின் காரண காரியங்களைக் கண்டறிய தலைப்பட்டான். ஆப்பிள் பழம் கீழே விழுந்தது. மரத்திலிருந்து பழம் ஏன் கீழே விழ வேண்டும், அப்படியே ஆகாயத்தை நோக்கி ஏன் மேலே போகக்கூடாது. பழம் மாத்திரம் தான் கீழே விழுமா, மற்ற பொருள்களும் கீழே விழுந்து விடுமா, கனமான பொருள்கள் மட்டிலும் கீழே விழுமா, இலேசான பொருள்களும் கீழே விழுமா என்பதை சிந்தித்து செயலில் பரிசோதித்துப் பார்க்கும்போது எல்லாமே கீழே விழுந்தன. அதிலிருந்துதான் நிலத் துக்கு இழுக்கும்வண்மை இருக்கின்றதென்று கண்டு பிடித்தான்.

நீராவியால் கீழே தள்ளப்பட்ட தட்டைப்பார்த்துக் கொண்டவன், ஏன் நீராவியின் மூலம் பெரிய சக்தியை நெட்டித்தள்ளக்கூடாதென்ற முடிவுக்கு வந்து நீராவி யந்திரத்தைக் கண்டுபிடித்தான். ஆகாயத்தில் பறக்கும் பறவைகளைக் கண்டான். நாம் ஏன் இதேபோல் ஏதாவ தொரு வாகனங்களைச் செய்து பறக்கக்கூடாதென்று கருதினான். அதன்படியே அவன் செய்தும் முடித்தான். காலத்தின் கணக்கை ஒரு சிறிய கெடிகாரத்தில் அடக் கினான். மழையின் அளவு, காற்றின் கனம், வெப்பத் தின் கொடுமை எல்லாவற்றையுமே தன் அறிவாற்ற லால் அளந்து பார்த்துவிட்டான். எப்போது புயல் வரும் எங்கிருந்தும் கிளம்பும், எந்த திசைநோக்கி வரும் என்பதையறிந்து முன்கூட்டியே உலகத்துக்கு அறி வித்து விட்டான். நிலத்திலும், நீர்வீழ்ச்சியிலும் மின்

சாரத்தைக் கண்டு உலகத்தையே ஜோதிமயமாக்கினான். யார் எங்கே பேசினாலும், பாடினாலும் அது எத்தனை ஆயிரம் மைல்கள் தூரமாயிருந்தாலும் தன் வீட்டு அறையிலேயே உட்கார்ந்தபடி கேட்டுக்கொள்ள வசதி செய்து தந்தான் விஞ்ஞானி. இருப்பவர் மாத்திரமல்ல, இறந்தவர் குரலை இன்னும் நாம் கேட்கும் அளவுக்கு விஞ்ஞானத்தை மேலோங்கி வைத்தார்கள் மேதைகள். அதனால்தான் மடமை உலகத்துக்கு இருளைத் தந்தது, விஞ்ஞானம் வெளிச்சத்தை தந்தது என்கிறோம். விஞ் ஞானம் மதக்கோட்பாடுகளுக்கு விரோதமாக இருக் கின்றது என்று வாதாடுகின்ற மதத் தலைவர்கூட மின் சார விளக்குகளின் முன்னால், மின்சார விசிறிகளின் கீழே நின்றுகொண்டு, வாதாடுகிறார்கள். அதிலும் பெரிய வேடிக்கை, இடையே மணியோசை டெலி போனைக் கையில் எடுத்துக்கொள்கின்றார்கள். தந்தி யடிக்கச் சொல்லுகின்றார்கள். இவ்வளவு கூத்துகளும் அவர்கள் பழமைக்குப் பெருமை தந்து பேசும்போது நடந்துகொண்டிருக்கின்றன. அதற்காக அவர்கள் வெட்கப்படுவதுமில்லை. பழமைக்கு வந்த புதிய ஆபத்து என்று வேதனைப்படுவதுமில்லை. மாறாக மகிழ்ச்சியோடு அவற்றின் பலன்களை அனுபவிக்கின்றார்கள். அதை நாம் தவறென்று சொல்லவில்லை. எங்கெந்த புதிய கண்டுபிடிப்புகள் மனிதனின் உழைப்பைக் கூடுமான வரை குறைத்து வசதியைத் தந்ததோ அதேபோல் மனிதனின் அறிவுக்கும் நாம் மதிப்புக் கொடுத்துத்தீர வேண்டும். மேற்சொன்ன அறிஞர்கள் விஞ்ஞானிகள் அனைவருமே அறிவை ஒரு குறிப்பிட்ட எல்லைக்கோட் டில் நிறுத்தாமல், ஒரு குறிப்பிட்ட கொள்கை கோட் பாடுகளிலேயே சுழன்று வராமல், இதை சிந்திப்பது

பாவம், இதைப்பற்றி வாதாடுவது நரகம் என்றெல்லாம் நினைத்து அவர்களுடைய அறிவு பெருக்கத்துக்குத் தடை விதித்திருந்தால் நாம் இவ்வளவு அதிசயப் பொருள்களைக் காணவே முடியாது. அவர்களை மதவாத உலகம் தூற்றியது. சிலரை சிறையில் தள்ளியது. ஏன்? சிலரை நடுத்தெருவில் தீயிட்டுக் கொளுத்தியது. தூக்கிலே மாட்டியது. இதைக் கண்டு புது உலகம் வருந்துகிறது. எனினும் பழைய உலகத்தின் அறியாமையை எண்ணி எண்ணி வருந்துகிறது. சமூக மேன்மைக்காக உழைத்தவர்கள் சண்டாளர்களெனத் தூற்றப்பட்டனர். எனினும் கடந்த காலத்தின் கொடுமையை மறந்து புது உலகத்தில் நடமாடுகிறோம். புது உலகத்தின் கல்வி நம்மை பழைய உலகத்துக்கு அழைத்துச் செல்வதாயிருந்தால் அந்த கல்வியை நாம் விரும்பி படிப்பதைவிட கல்லாமலே விட்டுவிடலாம். ஏனெனில் அதனால் ஏற்படுவது வீண் பொருள் நஷ்டமும் நேர நஷ்டமும் தவிர வேறொன்றுமில்லை. புது உலகம் நமக்களித்திருக்கின்ற பரிசு, உண்மையின் அடிப்படை மீதே நாம் எதையும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்பது.

இந்தப் புது உலகம் எதை எதைக் கடந்து வந்திருக்கின்றது. உலகம் முழுதும் அக்கினிப்பிழம்பாய் நட்சத்திரங்கள் சூழ்ந்த சூரியனின் வெப்பத்தால் உருகிய உலகத்தைக் கடந்து, பார்முழுதும் பாறைகளால் மூடப்பட்டிருந்ததைக் கடந்து, எல்லாம் ஆண்டவன் விட்ட வழி, நீ ஏதும் செய்யத் தகுதியற்றவன், உன்னால் என்ன செய்ய முடியும் என்றழைத்த ஏளனத்தை அறிவீட்டியால் குத்திச் சாய்த்த பிறகு, இவைகளுக்கிடையே எத்தனை இரவுகள், எத்தனை பகல்கள் கழிந்திருக்

இன்றன என்பதை நம்மால் கற்பனையும் செய்து பார்க்க முடியாது.

'இயற்கை அவசரக்காரியல்ல, காலத்தை வீணாக்கவும் முடியாது. இழக்கவும் முடியாது. எதிர்காலம் விலையுயர்ந்ததாய் காட்சியளிக்கிறது. முன்பு எப்படி இருந்ததோ அப்படியல்ல, எப்படியிருந்திருக்க வேண்டுமோ அப்படி காட்சியளிக்கின்றது. எல்லையற்ற இயற்கைக்கு இலாபமும் தெரியாது, நஷ்டமும் தெரியாது. உலகின் வரலாறு, மனித குலத்தின் வரலாறு, ஓரளவு நமக்குத் தெரியும். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக பழைய உலகிலே மனிதன் தேவைக்கும் போருக்குமிடையே, பஞ்சத்திற்கும் கொள்ளை நோய்க்குமிடையே, அறியாமைக்கும் குற்றத்திற்குமிடையே, அச்சத்திற்கும் நம்பிக்கைக்கும் இடையே போராடியுள்ளான், வாழ்ந்துள்ளான் என்பது நமக்குத் தெரியும் என்றும்'

குற்றமற்ற போப்பாண்டவர்கள், எண்ணிறந்த குருமார்கள், புரோகிதர்கள், மன்னர் மன்னர்கள், நாட்டின் நாயகர்கள் ஆகிய அத்தனை பேரும், அறிவற்ற காட்டுமிராண்டிகளின் கற்பனையை எல்லையற்ற ஈசனின் ஞானோபதேசம் என்று தவறுதலாக கருதிக்கொண்டிருந்தார்கள் என்பதும் நமக்குத் தெரியும், என்கிறார் இங்கர்சால்.

அதைப்போல் காலம் பல மடமைக் கடலைக் கடந்து இந்த அளவான புது உலகத்துக்கு வந்திருக்கின்றது. இதுவே முடிவான புது உலகம் அல்ல. இனி வரும் உலகம் எத்தன்மையதாயிருக்கும் என்பதையும் நாம் சிந்திக்கக்கூட முடியாத நிலையில் உள்ளோம். எது

எப்படியாயினும் இதுவரை சமுதாயம் பெற்ற நன்மை களின் ஆசையால் மேலும் மேலும் வரப்போகும் புதிய கருத்துக்களையும், புதிய பொருள்களையும் கண்டிப்பாக வரவேற்றே தீரும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் புதுமையை அந்த அளவுக்கு சுவைத்திருக்கிறது என் பதை நீங்களறிவீர்கள்.

மாணவர்களுக்கு ஏற்படுகிற பல அபாயங்களில் தலையானது சந்தேகத்தைக் கேட்டுத் தெரிந்துக்கொள் ளாததுதான் முதல் அபாயமாகும், ஏனெனில் ஒருவனை சாகடிக்கும் நஞ்சு முதலில் அவன் உள்ளத்தில் ஏற்படு கிற சந்தேகமும் அச்சமும்தான். பிசாசுகள் என்பது ஒரு கற்பனை வார்த்தை என்ற முடிவுக்கு வந்துவிட்டவன் இரவில் எந்த நேரத்திலும் எங்குவேண்டுமானாலும் போகிறான். பிசாசு ஒன்றிருப்பதாக உண்மையாகவே நம்பிக்கொண்டிருப்பவன் கும்பிருட்டில் போக அஞ்சு கிறான். அப்படியே போனாலும், காற்றால் மரக்கிளைகள் அசைந்தால் 'பிசாசு' என்ற சந்தேகமும் அச்சமும் கொள்கிறான், அதனால் நோய்வாய்ப்படுகிறான். அதுவே அவனுக்கு மரணமாக முடிகிறது. இது ஒரு குறிப்பிட்ட நாட்டில்தான் என்றில்லாமல் எல்லா நாட்டிலும் இருந் ததுதான். ஆனால் மேனாட்டில் அறிவு பெருகப் பெருக, ஆற்றல் உயர இந்த கோட்பாடுகள் தொலைந்து புது உலகம் காணத்தலைப்பட்டது. பொதுவாகவே அறிவுப் புரட்சி எந்த நூற்றாண்டில் தொடங்கியது என்று அறுதி யிட்டுச் சொல்ல முடியாத வகையில் நூற்றாண்டுக்கு ஒருவர் இருவராக இயேசுவுக்கு முன்பே தோன்றியிருக் கின்றார்கள். அந்த அறிஞர்கள் தோற்றுவித்த அறிவுப் புரட்சி சங்கிலித் தொடர்போல் இதுநாள் வரையிலும்

தொடர்ந்து வந்திருக்கின்றது. இனியும் நாம் எண்ணும், இன்று நமது கற்பனே இது என்று அனுவசியமாக ஒதுக்கித் தள்ளிவிடக்கூடியவைகள் நாளை உண்மையாய் விடவும்கூடும். ஆகவே பழைய உலகத்திலிருந்து புது உலகத்திற்கு வடத்தால் இழுக்கப்பட்ட நாம், அல்லது நம் பின் சந்ததிகள் எந்த இடத்துக்குப்போய்ச் சேருவோம் என்பதை முடிவுகட்ட முடியாமல், நாளுக்கொரு விநோதப் பொருளும் வினாடிக்கொரு கண்டுபிடிப்பும் நம் முன் தோன்றியவண்ணம் உள்ளன. இந்தப் புது உலகம்தான் முடிவானதென எண்ணுமல், இனி வரும் புது உலகம் நம்மை எல்லா வகையாலும் மகிழ்ச்சியடையச் செய்யும் என்பதிலும், அப்படி ஏற்படுகிற மாறுதலுக்கு மாணவர்களாகிய நீங்களே காரணமாக வேண்டுமென்ற கருத்தோடு, மறுமலர்ச்சி விரும்பிகளாய், அறிவின் பொக்கிஷங்களாய், ஆற்றலின் குன்றுகளாய்த் திகழ்ந்து, இனி வரும் அதிதீவிர விஞ்ஞான உலகத்துக்கு நீங்கள் வழிகாட்டிகளாய் விளங்கி, உங்களுக்காகப் பாடுபட்ட, உங்கள் முன்னேற்றத்துக்காகப் போதிய வசதிகளை மட்டுப்படுத்திக்கொண்டு வாழ்ந்த உங்கள் பெற்றோர்களிடம் நன்றியும் அன்பும், உங்கள் கல்வி மேம்பாட்டுக்காக உழைத்துக்கொண்டிருக்கும் ஆசிரியர்களிடம் அன்பும் மரியாதையுமாக நடந்து, சண்டை சச்சரவுகளில்லாமல், உடன் படிக்கும் மாணவர்களிடம் நேசப்பான்மையோடு வாழவேண்டும் என்று உங்களைப் பணிவாகக் கேட்டுக்கொண்டு, எனக்கு இங்கே பேச வாய்ப்பளித்த கல்லூரித் தலைவருக்கும் ஏனையோருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, என் சிற்றுரையை முடிக்கின்றேன். வணக்கம்.

## கடற்கரை

*11—5—53ல் கால்பேஸ் (கடற்கரை) பொதுக் கூட்டம். சுமார் ஒரு இலட்சம் பேர்கள் கூடியிருந்த னர். இலங்கையில் இதுவரை ஒரு அரசியல் கட்சிக் காரர்கள்கூட இவ்வளவு பெரிய கூட்டத்தைக் கூட்டிய தில்லை என்று பல பிரபல பத்திரிக்கைகள் புகழ்ந்தன. பொதுமக்கள் பாராட்டினார்கள். அரசாங்கம் அதிர்ந் தது. மற்றக் கட்சிகளின் கவனத்தைத் கௌவிய கூட்டம் இது. இதற்குப் பொதுமக்கள் மாத்திரமன்னி யில் பிரபல உத்தியோகஸ்தர்களும் பேராதரவு தந்தது குறிப்பிடத்தகுந்தது.*

இதில் சிற்றரசு ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் :—

*தலைவர் அவர்களே! தோழர்களே! வணக்கம். இங்கே தோட்டக்காடுகளில் வதியும் தமிழர்களுடைய நிலை, எங்கள் பகுதியிலே சேரியிலே வாழ்கிற மக்க ளுடைய வாழ்க்கைத்தரத்தைவிட மிகக் கேவலமாக இருக்கிறது. பார்க்கவே மிகப் பரிதாபமாகக் காட்சி யளிக்கின்றார்கள். பொருள்களின் விலையேற்றத்துக்கும் குறைவுக்கும் ஏற்ற அளவுதான் அவர்களுக்கு பஞ்சப் படி கொடுக்கப்படுகிறது. நூறு பிள்ளைகளுக்குக்கூட ஒரு ஆசிரியர் அமர்த்தப்படவில்லை. 4, 5 பேர்கள் வாழ் வதற்கென்று அவர்களுக்குக் கட்டிக்கொடுக்கப்பட் டிருக்கிற வீடுகள் குகைகளைக்காட்டிலும் மிகக் கேவல மாக இருக்கின்றன. ஓட்டுரிமையில்லை. குடியுரிமை பெற படாத பாடுபடுகிறார்கள். இங்கேயே வாழ நினைக் கும் வாலிபர்கள் சிங்களப் பெண்களைத் திருமணம்*

செய்துகொண்டால் குடியுரிமை வழங்கப்படும் என்று சொல்லப்படுகிறது. அந்தக் கலப்பு மணத்தின்மூலமாவது வாழ்வு கிடைக்காதா என்று நினைத்த பலர் அப்படியும் செய்ய முன்வந்தார்கள். அதன் பிறகும் சர்க்கார் அவர்களுக்கு உணவளித்ததாகத் தெரியவில்லை. பிறகு தமிழ் தோழர்களைத் திருமணம் செய்துகொண்ட சிங்களப் பெண்கள் சட்டசபைக்கே நேராகப் போய், எங்களுக்குமாத்திரம் அரிசி ரேஷன் வழங்கியிருக்கின்றீர்களே! ஏன் எங்கள் கணவன்மார்களுக்கு ரேஷன் இல்லை என்று கேட்டபிறகு, ஆண்களுக்கு ரேஷன் வழங்கப்படுகிறது என்று கேள்விப்பட்டேன். ஒரே குடும்பத்தை நடத்துகிற பெண்ணுக்கு உணவு உண்டு. ஆணுக்கு உணவும் இல்லை. உரிமையில்லை என்று சொல்லியதால், நம்முடைய கெதியே இப்படியாய்விட்டதால் நமக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு என்ன கெதி நேருமோ என்று, பலர் குடும்ப வாழ்க்கையிலே ஈடுபடாமல் நின்றுவிட்டார்களோ என்னமோ என்று சந்தேகப்படுகிறேன். (சிரிப்பு). மற்ற நாட்டார்கள் இங்கே வந்து கலவரம் உண்டாக்குகின்றார்கள் என்று குற்றம் சுமத்துகிற சர்க்காரே இப்படி ஒரே குடும்பத்தில் குழப்பத்தை உண்டாக்குகிறதே, இதற்கு என்ன பதில் சொல்லுகிறது?

மற்றொன்றைக் கேள்விப்பட்டேன். யாரோ ஒரு தோட்ட முதலாளியாக இருக்கிற வெள்ளைக்காரன், தேயிலைக் கொழுந்தை பறிக்கிற பெண்கள் கைகளிலே வளையல் போட்டுக்கொண்டிருப்பதால் கொழுந்தைக் கிள்ளும்போது வளையல் ஒடிந்து கொழுந்திலே விழுந்து விடுகிறது. அவை இலையோடு சேர்ந்து அரைபட்டுப்

போய்விடுகிறது. அபாயம், ஆகையால் யாரும் வளையல் போட்டுக்கொள்ளக்கூடாது என்று உத்திரவளித்ததின் காரணமாக ஒரு வேலை நிறுத்தம் ஏற்பட்டது. பிறகு வேறு கெதியில்லாமல் வெள்ளையன் வழிக்கு வந்து, அதுவும் எப்படி வழிக்கு வந்தார். தோட்ட வேலை செய்து பழக்கமில்லாதவர்களைக் கொண்டு வந்து வீம்புக்கு வேலை வாங்கிப் பார்த்தார். பக்கத்திலுள்ள வெள்ளை முதலாளிகள் இன ஒற்றுமையின் காரணமாக அவர்கள் தோட்டத்திலிருந்த தொழிலாளிகள் சிலரை அனுப்பி வைத்தார்கள். அவர்களில் சிலர் வேலைக்கு வர ஒப்புக்கொண்டார்கள், சிலர் தொழிலாளர் ஒற்றுமையைகருதி வர மறுத்துவிட்டார்கள். இதன் காரணமாக தொல்லைகள் அதிகரித்தது. வேலை செய்து பழக்கமில்லாதவர்களைக் கொண்டு வந்ததின் காரணமாக தோட்டத்தில் என்ன நடந்தது. பார்த்தவர் சிரித்தனர் வெறும் கேலிக் கூத்தாக இருந்தது. அவர்கள், தோட்டத்தில் விட்ட ராஜா வீட்டு கன்றுக்குட்டியைப்போல விளையாடினார்கள், வேலையா செய்தார்கள், வேடிக்கை செய்தார்கள். முதலாளிகள் வேதனையை அதிகப் படுத்தினார்கள்.

அவர்கள் கொழுந்தைக் கிள்ளச் சொன்னால் செடியை வேரோடு பிடுங்குவதும், கொழுந்தைக் கூடையில் போடுவதற்குப் பதில் கீழே போடுவதும், மலைச் சரிவுகளில் பக்குவமாக ஏறத்தெரியாததால் சருக்கி கீழே விழுவதுமான நிலையேற்பட்ட பிறகு வழிக்கு வந்து மீண்டும் பழைய பெண்களை அழைத்து, வளையல் போட்டுக்கொள்ளலாம் என்று சொல்லியதால், 'வளையல் வெற்றி விழா' என்ற பெரால் பல பொதுக்கூட்டங்

கள் நடந்ததாகக் கேள்விப்பட்டேன். இது ஒருவகை யில் வெற்றிதான், என்றாலும் வெள்ளைக்கார முதலாளி களைப் பார்த்து அவர்களும் ஒரு கேள்வி கேட்டிருக்க லாம், அதாவது, பூனைக் கண்களோடு தோட்டத்தைச் சுற்றிப்பார்க்க வெள்ளை முதலாளி வரும்போது அவரை பார்ப்பதற்கே பயமாயிருக்கிறது. ஆகையால் வெள்ளை யர் தோட்டத்தைச் சுற்றிப் பார்க்க வரும்போது கண் களில் துணியைக் கட்டிக்கொண்டுதான் வரவேண்டும், இல்லையானால் அவர்கள் வரவே கூடாது என்று திருப்பி இவர்கள் கேட்டிருந்தால் மிக நன்றாக இருந்திருக்கும். நேற்றுதான் பத்திரிகையில் பார்த்தேன். வெள்ளை முதலாளிகள் 25-கோடி ரூபாயைக் கொண்டு சென்றிருக் கின்றார்கள். ஆனால் தொழிலாளி தன் தாயகத்திற்கு 25-ரூபாய் அனுப்பமுடியாமல் திண்டாடுகிறான். பூசணிக் காய் போகின்ற இடம் தெரியவில்லை. கடுகு போகும் இடத்தைத்தான் கண்டுபிடிக்க அலைகிறது இந்தச் சர்க்கார் என்று கேட்டிருந்தது அந்தப் பத்திரிக்கை. உண்மைதான், வெள்ளையர் தங்கள் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட நாடுகளில் தாங்கள் செலுத்திக்கொண்டிருந்த ஆதிக்கத்துக்கு இனிமேலும் அவர்கள் நடத்திக்கொண் டிருக்கும் தொழிலுக்கும், வைத்துக்கொண்டிருக்கும் சொத்துக்களுக்கும் எவ்வித ஆபத்தும் வராமல் சட்ட பாதுகாப்பு செய்துகொண்டுதான் அவர்கள் சுதந்திரம் வழங்குவது வழக்கமாகக் கொண்டிருக்கின்றார்கள்

வெள்ளையர்கள் வாழ்ந்த எந்த நாட்டிலும் சரி, அவர்கள் வாழ்வும் வளமும் குன்றாமல்தான் இதுவரை வாழ்ந்துக் கொண்டிருக்கின்றார்கள். சுதந்திரம் அளித்து விட்டுத் தன் தாயகம் திரும்புகின்ற ஒரு தேசீய இனம்

கவலையோடு திரும்பும் என்றுதான் பலர் நினைப்பதுண்டு. அதுதான் இயற்கை என்று பலர் நினைக்கவும்கூடும். ஆனால் வெள்ளையர் நிலை, சுதந்திரம் அடைந்த மக்களை தவிக்க விட்டுவிட்டு, சுதந்திரம் அளித்துவிட்டுச் சென்ற அவர்கள் சுகவாழ்வு வாழ்வது என்றுதான் அவர்கள் அகராதி பேசுகிறது. அந்த வசதியை அவர்கள் எந்த நாட்டிலும் விட்டுக் கொடுத்ததில்லை. ஒரு நாட்டுக்கு அவர்கள் குடியேறி அவர்களை சுதேசிகள் என்று சொல்லிக்கொண்டு அங்கேயே பிறந்து வளர்ந்தவர்களை விதேசிகள் என்பார்கள்.

இந்த நிலைதான் அவர்கள் உலகின் பல்வேறு பகுதிகளிலும் கையாண்டுக் கொண்டிருக்கும் முறை. இதில் நான் ஆச்சரியப்படவில்லை. சீன நாட்டில் ஒரு வெள்ளையனை ஒரு சீனன் கொன்றுவிட்டான் என்ற காரணத்துக்காக 5 துறைமுகங்களை நஷ்ட ஈடாக வாங்கியிருக்கின்றார்கள். அதுதான் அவர்கள் பிறவிக் குணம். அவர்கள் நினைத்தபோது தாயகம் போகவும் திரும்பவும் எவ்வித அட்டியுமில்லை. அவர்கள் உலகத்தின் எந்தப் பகுதியில் இருந்தாலும் செல்லப் பிள்ளைகள்தான். எப்படி இவர்களை இங்கிருந்து வெளியேற்றுவது என்று பார்த்து யார் யார் தமக்கையின் மகளைக் கட்டிக் கொண்டிருக்கின்றார்களோ அவர்களை விரட்டுவது என்று ஒரு சட்டம், யார் 1939க்கு முன் வந்தார்களோ அவர்களெல்லாம் இவ்வளவு காலம் இங்கே வாழ்ந்ததற்கு அத்தாட்சிக் காட்டவேண்டும் என்பது மற்றொன்று. இந்த இரண்டையும் சிந்தித்துப் பார்த்தால் இவைகள் வேண்டுமென்றே செய்யப்பட்ட சட்டங்கள் என்று புலப்படுகிறதே தவிர கொஞ்சமாவது அறிவு

தொனிக்கிறதா என்பதை சர்க்கார் யோசிக்க வேண்டும்.

தமக்கையின் மகளைக் கட்டிக் கொள்வதினாலே யாருக்கு என்ன நஷ்டம் அல்லது தீங்கு. இது அவரவர்கள் சமுதாயத்துறையிலே கையாளும் முறையே தவிர, இப்படிச் செய்ததால் தேயிலைத் தோட்டங்கள் குபீரென்று தீப்பிடித்துக் கொண்டது, அல்லது கொழுந்து வருவதில்லை, அல்லது ரப்பர் மரங்களில் பால் சுரப்பதில்லை என்று யாராவது சொல்லிவிட முடியுமா? இரண்டாவது 1939-க்கு முன்பிருந்து இங்கு வாழ்ந்ததற்கு அத்தாட்சி வேண்டுமாம். ஒரு ஏழைத் தொழிலாளி எப்படி 14 ஆண்டுகளின் ரிக்கார்டுகளை வைத்துக்கொண்டிருக்க முடியும்? அப்படித்தான் 1939-ல் நான் என் தாயகத்திற்கு பணம் அனுப்பியிருக்கின்றேன், அந்த மணியார்டர் இரசீது இதோ இருக்கின்றது என்று காட்டினால், ஓ நீ இந்தியாவுக்குப் பணம் அனுப்பினாயா? அப்படியானால் உனக்கு இன்னும் இந்தியாவின் மேலேதான் ஆசை இருக்கிறது என்று சொல்லிவிடுவது, இன்றேல் நீ காட்டிய ஆதாரங்கள் போதவில்லை இன்னும் மேற்கொண்டு ஏதாவது ஆதாரங்கள் இருந்தால் கொண்டுவா என்பதுமாக தாமதித்து குடி உரிமையை மறுத்துவிடுவது. இப்படியெல்லாம் செய்தால் ஒரு 2 லட்சம் பேர்களைக் குறைத்து விடலாம் என்று சர்க்கார் எண்ணுகிறது.

ஆனால் நியாயமாகவே 1939-லிருந்து இங்கே வாழ்ந்துகொண்டிருந்தவர்கள் சுமார் 2 லட்சம் பேர்களுக்குமேல் இருக்கும். அவர்களில் ஒரு லட்சம் பேர்கள்தான் போதிய ரிக்கார்ட்டுகளைக் காட்டி சர்க்கார்

வைத்திருக்கும் விஷப் பரீட்சையிலே இருந்து தப்புகிறார்கள். மற்றவரின் நிலை என்ன? மற்றொன்று இவ்வளவு பேருக்கும் ஓட்டுரிமை இல்லாமலாக்கிவிட்ட காரணத்தால் அவர்கள் குறையை சட்டசபையில் எடுத்துச் சொல்ல சரியான பிரதிநிதிகள் போகமுடியாமலே போய்விட்டது. ஒரு நாட்டில் சுமார் 8 இலட்சம் பேர்களுக்கு ஓட்டுரிமை யில்லாமலாக்கிவிட்டு அந்த ஆட்சிதான் ஜனநாயக ஆட்சி என்றால் எந்த பைத்தியக்காரனும் ஒப்புக்கொள்ளமாட்டான்.

அமெரிக்காவில் ஜார்ஜ் வாஷிங்டன் காலத்தில், பிரதிநிதித்துவம் இல்லையானால் வரி செலுத்த மாட்டோம் (No taxation without representation) என்பதுதான் அந்தக் கிளர்ச்சி. அதே போன்றதுதான் இங்கே இப்போது எழும்பியிருக்கும் பிரச்சினை. எப்போது குடி உரிமையில்லையோ அப்போது பிரதிநிதித்துவம் இல்லை. எப்போது பிரதிநிதித்துவம் இல்லையோ நிச்சயமாக வரி செலுத்துவதில்லை என்ற முடிவுக்கு இங்கே அல்லல்படும் மக்கள் வந்துவிட்டால் அதற்குப் பரிகாரம் தேடுவதுதான் விவேகமே யன்றி, அந்தக் கிளர்ச்சியை அடக்கிவிடலாம் என்று நினைப்பது விவேகமுமல்ல, வீரத்தின் பாற்படாது. அரசியல் மந்தம் என்பதுதான் இதற்குப் பொருள். இந்த நிலையை ஏன் இங்குள்ள பல பிரபல தலைவர்களில் சிலர் கவனிக்காமலும், சிலர் கவனித்தும் முடியாமல் கைவிட்டும், சிலர் கவனிக்க ஆற்றலிருந்தும் போதிய வசதிகளில்லாமலும் இருக்கின்றார்கள் என்று விளங்கிவிட்டது. சரி இது சம்மந்தமாக இந்திய தூதுவர் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டார் என்பதை யறிய 5—5—53 காலை

10–30 மணிக்கு இந்தியத் துணைத் தூதுவர் திரு. சாரி அவர்களை சந்தித்து சுமார் ஒரு மணி நேரம் விவாதித்தோம். அவருடைய சந்திப்பு ஒரே நேரத்தில் இருவருக்கு ஏற்படுகிற துக்கச் செய்திகளைச் சொல்லி ஆறுதல் பெற இடம்பிரவேசமாய் விழியில் சந்தித்த நிலையாயிற்று பல விளக்கங்களைத் தந்தார் எனினும் அவற்றை இரு அரசாங்கங்களின் நல்லுறவை எண்ணி, குறிப்பாக இங்கே வதியும் திராவிடத் தோழர்களின் நன்மையைக் கருதியும் வெளியிட முடியாமைக்காக வருந்துகிறோம். அண்மையில் உரிமைப் போராட்டத்திற்காக சத்தியாக்கிரகம் தொடங்கி நடத்திய இலங்கை இந்தியர் காங்கிரஸ் தலைவர் திருவாளர் தொண்டைமான் அவர்களையும் அதன் பொதுக்காரியதரிசி அவர்களையும் 4ந்தேதி மாலை கால்பேஸ் ஓட்டலில் சந்தித்துக் கேட்டோம். அவர் சத்தியாக்கிரகத்தின் தோல்விக்குக் காரணத்தை விளக்கியதோடு, கட்சி தனக்கே இரண்டு லட்சம் கடன் கொடுக்கவேண்டிய நிலையும், மேற்கொண்டும் சத்தியாக்கிரகத்தைத் தொடர்ந்து நடத்தப் போதிய பண வசதி இல்லாததொன்று.

மேலும் லண்டனில் நடைபெறவிருக்கும் எலிசபெத் மகாராணியார் முடிசூட்டு விழாவுக்குச் செல்லவிருக்கும் இரு நாட்டுப் பிரதமர்களும் சந்தித்து, இலங்கை சம்பந்தமாகப் பேசப்போவதால், அதுவரை பொறுத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது என்றார்.

சரி. அப்படியானால் குதூகலமான முடிசூட்டு விழாவுக்குச் செல்லுகிற இவர்கள், அங்கே இதைப் பற்றிப் பேசி விரைவில் முடிவுக்கு வரக்கூடிய அவ்

வளவு இலேசான பிரச்சினே என்று தாங்கள் கருது கின்றீர்களா, என்று கேட்டேன்.

அப்படித்தான் சொல்லுகிறுர்கள். நாம் அதை நம்பாமல் என்ன செய்யமுடியும்? ஆனுல், அவர்கள் செய்யும் முடிவு எங்களுடைய கருத்தின் முகவுரையாக இருக்கும் என்முர்.

அப்படியென்ருல் அவர்கள் சந்திப்பில் உங்கள் பிரதிநிதிகள் இடம் பெற்றிருக்கவேண்டுமே என்றேன். பதில் இல்லே. மேலும் ஒரு கேள்வியைப் போட்டோம். இங்கே தோட்டக்காடுகளிலே வதிகின்றவர்கள் வட நாட்டாராக இல்லாததால் நேருவுக்கு இதில் கவலே பிறக்கவில்லே என்று நாங்கள் குற்றம் சுமத்துகிருேம், இதில் உங்கள் கருத்தென்ன என்று கேட்டேன்.

நீங்கள் மாத்திரமல்ல, பல கட்சிகளும், பல தனிப் பட்ட முக்கியஸ்தர்களும் அப்படித்தான் கருதுகிறுர்கள் என்முர்.

இலங்கையிலே இருக்கிற காங்கிரசுக்கும் இந்தியா விலே இருக்கிற காங்கிரசுக்கும் என்ன தொடர்பு என்ருேம்.

ஒன்றுமில்லே என்முர்.

அப்படியாஞல், நேருவைத் தாங்கள் அணுகியது உத்தியோகபூர்வமாகவா அல்லது காங்கிரசின் தலேவரா யிருக்கிறுர் என்ற காரணத்தாலா என்றேன்.

காங்கிரஸ் தலேவர் என்ற காரணத்தாலும், 1939ல் அவர்தான் இலங்கை இந்தியர் காங்கிரசை தொடங்கிவைத்தவர் என்ற காரணத்தாலும் என்று

சொல்லி, பிறகு நேருவை சந்தித்ததில் ஏற்பட்ட முடிவு நீங்களனைவரும் அறிந்ததே என்றார்.

திராவிட நாட்டுப் பிரிவினை சம்பந்தமாக உங்கள் கருத்தென்ன ? என்று கேட்டேன்.

திராவிடத்தில் மாத்திரந்தானா மக்கள் கஷ்டப்படுகிறார்கள், வடநாட்டில் உள்ளவர்களுந்தான் கஷ்டப்படுகிறார்கள். அவர்களையும் சேர்த்துக்கொண்டு நீங்கள் போராடலாமே என்றார்.

அப்படியானால் இலங்கையிலுள்ள இந்தியர்கள் மாத்திரமா குடி உரிமையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள் ? தென் ஆப்பிரிக்காவில் உள்ள இந்தியர்களுந்தான் குடி உரிமையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களையும் சேர்த்துக்கொண்டு நீங்கள் போராடியிருக்கலாமே என்று கேட்டேன்.

கொஞ்ச நேரம் மௌனமாக இருந்துவிட்டு, பிறகு இது ஒரு சிக்கலான கேள்விதான் என்றார்.

இந்தியாவில் வேறு யாரையாவது சந்தித்தீர்களா ? என்றேன்.

சென்னையில் பெரியாரைச் சந்தித்தேன். தி. மு. க. பொதுச்செயலாளர் அண்ணா அவர்களைச் சந்திக்க இரண்டு நாட்கள் முயன்றேன். அவர் காஞ்சீபுரம் போய்விட்டதால், சந்திக்கமுடியாமல் வந்துவிட்டேன் என்றார்.

பெரியார் என்ன சொன்னார், என்றேன்.

எங்களைப் பார்த்தவுடனே வீட்டுக்கு வெள்ளையடித்தாய்விட்டது, கூலியை வாங்கிக்கொண்டு வெளியே

வரவேண்டியதுதானே, என்று திடீரென்று கேட்டார். சரி, இவருக்கு இலங்கையின் நிலமை சரிவரத் தெரியவில்லை என்று அதிக நேரம் விளக்கம் தந்தபிறகு, நமது கோரிக்கை சரிதான் என மனப்பூர்வமாக ஒப்புக் கொண்டார் என்று கூறினார்.

இந்த நிலையிலே முடிந்திருக்கிறது இதுவரை நிலமை. ஆனால் பிரச்சினைகள் நாளுக்குநாள் வளர்ந்து கொண்டே போகின்றது. வேட்டி கட்டியவர்களை எல்லாம் கள்ளத்தோணி என்று கேலி செய்யும் அளவுக்கு, பிரச்சினை கேலிக்கிடமானதாக ஆக்கப்பட்டிருக்கிறது, வேட்டி கட்டியவர்களெல்லாம் கள்ளத்தோணி என்று சொல்லுகிற நிஜார் போட்டுக்கொண்டிருக்கின்றவர்களைப் பார்த்து, நாங்கள் கள்ளத்தோணி என்றால் நீங்களெல்லாம் ஐரோப்பாவிலிருந்து வந்த கள்ளக் கப்பலா என்று கேட்டுவிடலாமா என்று பலருக்குத் தோன்றும், ஆனால் வேட்டியையும் நிஜாரையும் அடிப்படையாகக்கொண்டு எழும்பிய பிரச்சினையல்ல. அது நாகரீகத்தைப் பொறுத்த விஷயம். இங்கே ஐரோப்பா நாகரீகம் முழுக்க முழுக்கப் பரவி இருப்பதால் பலர் நிஜார் அணிந்திருக்கின்றார்கள். அதை எப்படி குற்றம் என்று சொல்லமுடியும்? அப்படியானால் நானும், தோழர் தங்கப்பழமும் வேட்டிதான் கட்டிக்கொண்டிருக்கிறோம். நாங்கள் கள்ளத்தோணியில் வந்தோம் என்று சொல்லிவிடமுடியுமா? அப்படியே வந்திருந்தாலும் சுமார் 25 நாட்கள் தங்கி, இலங்கையின் பெரும்பகுதியைச் சுற்றி, இருபது கூட்டங்களில் பேசி, எல்லா அரசியல் கட்சித் தலைவர்களையும், ஏன் பிரதமர் டட்லி சேனநாயகா அவர்களை

யும் சந்திக்க ஏற்பாடு செய்திருக்கமுடியுமா? நாங்கள் கள்ளத்தோணியில் வரவில்லை. ஆகாயத் தோணியில் கட்டணம் செலுத்தி, இரண்டு அரசாங்கங்களின் அனுமதி பெற்று, நான் இங்கே தங்குகிறவரை பணம் 200 ரூபாயை டிபாசிட்டாகக் கட்டி வந்திருக்கிறேன்.

ஆகவே வேட்டிக் கட்டிய அனைவரையுமே கள்ளத் தோணி என்று கேலி செய்யும் முறை ஒழியவேண்டும், அல்லது ஒழிக்கப்படவேண்டும். கள்ளத்தோணியில் வந்தவர் யார்? இங்கே நிரந்தரமாக இருந்தவர்கள் யார்? என்பதை அறிய இதுவரை இலங்கை சம்மந்தமாக பல வரலாற்றாசிரியர்கள் எழுதிய பத்து சரித்திரங்களைப் படித்தேன். அதில் எல்லோரும் இங்கே வந்தவர்கள் என்றுதான் எழுதப்பட்டிருக்கிறதே தவிர வேறொன்று மில்லை.

ஆனால் முன்னே வந்தவர்கள் பின்னால் வந்தவர்கள் என்று வேண்டுமானால் சொல்லலாம். இப்போது முன்னே வந்தவர்கள்தான் பின்னால் வந்தவர்களை 'வெளியே போ' என்கின்றார்கள். நியாயமாகப் பார்த்தால் முன்னே வந்தவர்கள்தான் முன்னே வெளியேற வேண்டும், பின்னால் வந்தவர்கள் பின்னால் போக வேண்டும். அதுதான் நியாயத்துக்கும் வாதத்துக்கும் சரியானதாகும். ஆனால் முன்னால் வந்தவர்களிடம் ஆட்சி இருக்கிறது, பின்னால் வந்தவர்களிடம் மிரட்சி இருக்கிறது. இந்த ஒன்றைக்கொண்டு அநீதி வழங்குவது மிக மிகக் கொடுமையாகும். அதுவும் இது புத்தர் பேரொளி பரவிய நாடு, புத்தர் துறவரம் பூண்டதைப் போல துறவரம் பூணவேண்டியவர்கள் யார்? என்பதை

சிந்தித்து முடிவுகட்ட வேண்டிய பொறுப்பை உங்களுக்கே விட்டு விடுகின்றேன்.

புத்தன் அன்பை வளர்த்தான். இங்கே அருவறுப்பு வளர்த்தப்படுகிறது. புத்தன் எல்லாவற்றையும் துறந்தான். இங்கே ஒன்றும் துறந்ததாகத் தெரியவில்லை. புத்தர் அனைவரையுமே ஒன்றென்றார். அவருடைய பல்லும் கண்டியிலே காட்டினார்கள். அது அவருடையதா அல்லவா என்பதல்ல நமது சிந்தனை. ஆனால் அப்பேராளன் பெயரைச் சொல்லிக்கொண்டே நீ யார், நான் யார் என்று இங்கே பேசப்படுகிறது. கொள்கைக்கும் மதிப்பில்லை, குணத்திற்கும் மதிப்பு இல்லை, உழைப்புக்கும் மதிப்பில்லை. என்றாலும் ஒருவன் உரிமையை யாகிலும் மதிக்க வேண்டாமா, குப்பை குன்றென உயர்வதும் கோபுரம் தாழ்வதும் காலம் கண்டு பலமுறை சிரித்த சம்பவங்கள்தானே!

மேலும் இங்கே வாழும் திராவிடர்களின் எந்தெந்த உரிமைகள் பறிக்கப்பட்டிருக்கின்றன. ஆண்கள் அக்கா மகளைக் கட்டிக்கொண்டிருந்தால் அவர்கள் வெளியேற வேண்டும். அக்கா மகளைத் திருமணம் செய்துகொள்வதினாலே சர்க்காருக்கு என்ன நஷ்டம். முஸ்லீம்கள் சிற்றப்பன் மகளைத் திருமணம் செய்துகொள்வதில்லையா? இந்தப் பழக்கங்கள் அவரவர்கள் இனப்பழக்கத்துக் கேற்றவாறு நெடு நாட்களாகச் செய்துகொண்டு வருகிறார்கள். இதை ஒரு குற்றம் என்று சர்க்கார் இப்படி ஒரு சட்டத்தை செய்திருப்பதானது மிகமிக மோசமானதாகும். அவர்கள் அப்படிச் செய்துகொண்டதாலே தோட்டங்கள் தீப் பிடித்துக்

கொண்டதா—ரப்பர் மரங்கள் பால் சுரக்க மறுத்து விட்டனவா—கோக்கோ காய் காய்க்காமல் போய் விட்டதா—தென்னை வளர மறுத்ததா—கடலலைகள் ஓய்ந்து விட்டனவா—சிங்களத் தீவை சுராமீன் விழுங்கி விட்டதா. என்ன கெடுதல் நடந்துவிட்டதென்று சர்க்கார் சுட்டிக் காட்டட்டும். ஆனால் ஏன் இதைச் செய்திருக்கிறது. அதுவும் நாம் அறியாததல்ல. வேறு எந்த வழியிலும் வெளியேற்ற முடியாதவர்களை எப்படி வெளியேற்றுவது அல்லது குடி உரிமை மறுப்பது என்று நீண்ட நாட்கள் சிந்தித்திருக்கிறது சர்க்கார். இந்த நூதனமான கண்டுபிடிப்பின் மூலம்தான் இரண்டரை இலட்சம் திராவிடர்களை வெளியேற்றலாம். அல்லது குடி உரிமை வழங்காமல் நிறுத்தலாம் என்பது தான் சர்க்காரின் முடிவு. இதுதான் இதில் அடங்கியிருக்கும் இரகசியம். வேறொன்றுமில்லை. காதலுக்கும் கண்ணியமான வாழ்க்கைக்கும் தடை விதிக்கிறது சர்க்கார். 'நீ சுதந்திரமாக இருக்க விரும்பினால் பிறர் சுதந்திரத்தைப் பறிக்காதே' என்ற வாசகப்படி, இலங்கை சர்க்கார் தனது சுதந்திரப் பாதையிலே செல்ல விரும்பினால் அது பிறர் சுதந்திரத்தைப் பறிக்கக் கூடாது. தோட்டத் தொழிலாளிகள் சுரண்டிக் கொண்டு போகிறார்கள் என்று குற்றம் சாட்டுகிறது. ஒவ்வொரு தொழிலாளியும் எவ்வளவு சுரண்டிக் கொண்டு போகிறான் என்பது நம்மைவிடச் சர்க்காருக்குத் தெரியும். ஒருவன் வருவாயை என்னென்ன செய்யவேண்டுமென்பதும், எவ்வளவு செலவழிக்கலாம் என்று சர்க்கார் தந்திருக்கின்ற பட்டியலில் போதை தரும் குடியை இவ்வளவு குடிக்கவேண்டும் என்ற பகுதியையும் சேர்த்து வெளியிட்டிருக்கும் அறிக்கை

யைப் பார்த்தேன். அது வெளியிட்டிருக்கும் அறிக்கைப்படிப் பார்த்தாலும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் இருபது முப்பது ரூபாய்கள்கூட மிஞ்சாது. இதைத்தான் தன் நாட்டிலுள்ள பெற்றோர்களுக்கு அனுப்புகிறான். இது எ வ் வ ா று சுரண்டுதலாகும். தன் உழைப்பை இலங்கையில் இருக்குமதி செய்து 20, 30 ரூபாய்களை ஏற்றுமதி செய்கிறான். அவன் இறக்குமதி செய்த உடல் உழைப்புக்கு ஏற்ற பொருள்தானே அவன் ஏற்றுமதி செய்வது என்பதை சர்க்கார் எண்ணிப் பார்க்கவேண்டும். இந்தியர்கள் திறமையும் எங்களுக்கு வேண்டும். அவர்கள் ஒன்றையும் கொண்டு போகக்கூடாதென்றால் அது நியாயமாகுமா என்பதை எண் ணிப் பார்க்கவேண் டும்.

**அன்னிய தொழிலாளிகளே இங்கே முதலாளிகள்.**

இந்தியத் தொழிலாளிகள்தான் இங்கே உடலுழைக்கும் தொழிலாளிகள். ஆனால் ஸ்விட்ஜர்லாந்து தொழிலாளிகள் இங்கே ஒரு தோட்டத்தை வாங்கி அதில் இந்தியத் தொழிலாளர்களைவிட்டு வேலை வாங்கி லாபத்தைச் சுரண்டிக்கொண்டு ஸ்விட்ஜர்லாந்துக்குக் கொண்டுபோகின்றார்கள். தொழிலாளிகள் வளரவும் முதலாளிகள் அவதாரம் எடுக்கவேண்டுமென்பது எந்த மார்க்கசீய சித்தாந்தமோ நமக்குத் தெரியவில்லை. இந்தியத் தொழிலாளிகள் தாங்கள் இந்த நாட்டு பொருளாதார உயர்வுக்காக ஈடுசெய்த உழைப்பின் மதிப்புக்காக இருபது முப்பது தங்கள் தாயகத்திற்கு அனுப்புவது பச்சைச் சுரண்டலாம், ஆனால் அதே நேரத்தில் ஸ்விட்ஜர்லாந்து தொழிலாளர் இயக்கம் இங்கே நகத்தில் மண் படாமல் கொள்ளை கொள்ளையாக சுரண்டு

வது சுரண்டல் அல்லவாம். ஆடம்பரமாக உள்ளே நுழைகிறவனை யார் என்றும் கேட்கமாட்டார்கள் திருமண வீட்டார். சொந்தக்காரனாக இருந்தாலும் பார்வைக்குக் கேவலமாக, ஏழைக் கோலத்தோடு உள்ளே நுழைந்தால் யார் என்று எவனாவது ஒருவன் கேட்டுவிடுவான். அந்த நிலை போன்றிருக்கிறது இன்றைய இலங்கை சர்க்காரின் நிலை. இதுவா நீதி, இதுவா நேர்மை என்பதை எண்ணிப் பார்க்க சர்க்கார் மறுத்தாலும் இங்கே கூடியிருக்கும் நீங்களனைவரும் எண்ணிப்பார்க்க வேண்டும். குறிப்பாக சிங்களத் தோழர்கள் சிந்திக்கவேண்டும். இருக்கும் நிலையை எண்ண மறுப்பவன், உண்மையை நிராகரிப்போன். என்பதைக் காலத்தாலும் மாற்றமுடியாது.

இங்கே வெகு வேகமாகச் சுழன்றுகொண்டிருக்கும் சர்க்கார் பற்சக்கரங்களில் கரகரவெனக் கேட்கும் சப்தம் இந்தியத் தொழிலாளர்கள் இடும் கோரக்குரலின் சப்தம் என்பதை நாம் மறுப்பதற்கில்லை. என்றும் இதே நிலையில் சக்கரம் சுற்றிக்கொண்டிருக்கமுடியாது. என்றாவது ஓர்நாள் அது ஸ்தம்பித்து நிற்கவேண்டிய நிலை ஏற்படலாம் என்பதை இந்த கடற்கரைக் கூட்டத்தின்மூலம் அவர்கள் உணர மறுத்தாலும், சரித்திர சான்றுகளின்மூலம் நல்ல தெளிவு பெறக்கூடும் என்பதிலே நமக்குக் கொஞ்சமும் ஐயமில்லை.

ஏதோ ஒரு அளவுக்கு வாழ வழியிருக்கிறது என்பதற்காக பல பக்கங்களிலிருந்து வரும் தாக்குதலை மௌனமாக ஏற்றுக்கொள்ளமுடியாது. அப்படி ஏற்றுக்கொள்வது மனித குணமுமல்ல என்பதை பிரதமர் எண்ணிப் பார்க்கவேண்டும். ருசியான பண்டம் என்

பதற்காக, சாக்கடையின் பக்கத்தில் வைத்து எவனும் உண்ணமாட்டான்.

அப்படித்தான் என்ன நாகரீகமான வாழ்க்கையை மேற்கொண்டிருக்கின்றார்கள் இங்கே இருக்கும் தேயிலை தோட்டத் தொழிலாளர்கள் ?

அழடேம் பீடாரட்மலி, பதுளை பண்டாரவளைக்கு அருகாமையிலிருக்கும் பல தோட்டங்களையும், அங்கே தொழிலாளிகளையும், அவர்கள் குடி இருக்கும் இடங் களையும் சுற்றிப் பார்த்தோம். அழுக்குப் படிந்த உடை களோடு காட்சியளித்தார்கள். அவர்கள் குழந்தை களுக்கு நல்லுடையில்லாமல் கிழிந்த ஆடைகளோடு பரட்டைத் தலையுடன் கூட்டம் கூட்டமாக வந்து நின்றார்கள். வீடு இருபது அடி நீளமும் பத்து அடி அகலமும் இருந்தது. ஜன்னல்கள் அமைக்கப்படாமல் ஒரே இருட்டாயிருந்தது. அந்த ஒரு அறையில் தகப்ப னும் தாயும், திருமணமான மகனும் மருமகளும், இந்த இரண்டு ஜோடிகளுக்கும் பிறந்த நான்கைந்து குழந்தை களும், அந்த அறையிலேயே ஒரு மூலையில் அடுப்பு, அதன் பக்கத்தில் விறகு விராட்டி, ஒரு பக்கத்தில் ஈளை இருமலோடு துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் கிழவன் கிழவி, மற்றோர் மூலையில் குளிரோடு போராடிக்கொண் டிருக்கும் நாய்க்குட்டி, மற்றோர் பக்கம் கூடையில் மூடி வைக்கப்பட்டிருக்கும் கோழியும் அதன் குஞ்சுகளும் இவ்வளவுக்கும் மேலாக வீடு முழுதிலும் சிங்களப் பூச்சிகள் என்ற ஒருவிதப் பூச்சிகள். இந்த இருட் குகையில் வாழ்கின்ற அவர்கள் 1939ல் இருந்து எந்த ஆதாரத்தைக் காட்ட முடியும். வேண்டுமானால் அவன் பாட்டன் வைத்துவிட்டுப் போன பொத்தல் கோட்டு

களையும் கதிர்காம முருகன் படம் ஒன்றையும் காட்ட முடியும். இந்த இரண்டு ஆதாரங்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய பொருள்களா? கதிர்காம முருகர் எப்போ பிறந்தார் என்பதற்கு எந்த ஜனன மரண கணக்கில் குறிப்பு இருக்கின்றது? இப்படி அழுதுக் கொண்டிருக்கின்றார்கள் மலைநாடுகளில் தொழிலாளிகள்.

எங்கேயோ சில தோட்டங்களில் நல்ல முறைகளில் வீடுகள் கட்டிக்கொடுத்திருப்பதாக கேள்விப்பட்டேன். அது உண்மையானால் நன்றி. அதேபோல் எல்லா தோட்டத் தொழிலாளரின் வீடுகளையும் கட்டிக் கொடுக்க வேண்டும் என்பதுதான் எங்கள் விருப்பமும் வேண்டுகோளும்.

காடும் வனமும் வனாந்திரமுமாக இருந்த அந்தப் பகுதிகளை செப்பனிட்டு பொன் கொழிக்கும் நாடாகச் செய்வதற்கென்றே தென்னாட்டிலிருந்து பலரை கூலி களாகப் பிடித்துக் கங்காணிகள் இங்கே கொண்டுவந்த முதல் ஆண்டு 1853. சரியாக நூறாண்டுகளுக்குப் பிறகே நாங்கள் வந்திருக்கிறோம். எங்கள் வருகையில் மிக மிகத் தாமதமேற்பட்டுவிட்டது என்பது உண்மை தான். எனினும் இலங்கையின் எல்லா பகுதிகளிலும் உரிமை முரசம் கேட்கப்படும் இந்த நேரத்தில் நாங்கள் வந்ததால் அரசியல் நிலையை சரிவரத் தெரிந்துக்கொள் வதற்கு சரியான நேரமாக அமைந்திருக்கிறது என்பதற் காக மகிழ்ச்சியடைகிறோம்.

இந்த ஒரு நூற்றாண்டுக்குப் பிறகுதான் 'வெளி யேறுங்கள்' என்கிறார்கள். "நீங்கள் வந்த வேலை தீர்ந்துவிட்டது. இனி நீங்கள் போகலாம்" என்று மறைமுகமாகச் சொல்வதுதான் இதன் அர்த்தம்.

மனிதன் மனித குணத்தோடு இருக்கும்வரை யாருக்கும் தீங்கிழைக்க எண்ணமாட்டான். ஆனால் அவன் மிருகமாக மாறும்போது பிறருக்கே தீங்கிழைக்க எண்ணுவான். அதுவும் தன்னால் வளர்க்கப்பட்ட தேயிலைத் தோட்டம், தன்னால் வளர்க்கப்பட்ட ரப்பர் மரங்கள் தன்னைக் கேலிசெய்யும் முறையில், 'போ வெளியே' என்று சொல்லுமானால் அதன் அழகை அப்படியே விட்டுவைத்துவிட்டு வெளியேற மாட்டான். அழித்துவிட்டே வெளியேறுவான். இந்த நிலையை ஒரு நாகரிக நாடு உண்டாக்காது. கூடாது.

இதில் சிங்களத் தோழர்கள் மிக நல்லவர்களாக இருப்பதால் எதிலும் பட்டுக்கொள்ளாமல் ஒதுங்கி நிற்கின்றனர். அவர்களுடைய பொறுமையையும் நியாய சிந்தையையும் பாராட்டுகிறோம். அந்த நல்ல சிங்களத் தோழர்களை மனதில் நினைத்துக்கொண்டுதான் வகுப்புக் கலவரம் ஏற்பட ஏதுவாகும் என்று பூச்சாண்டி காட்டுகிறது சர்க்கார். இப்போது எழும்பியிருக்கும் பிரச்சினை சிங்களத் தோழர்களுக்கும் திராவிடத் தோழர்களுக்கும் ஏற்பட்டிருப்பதல்ல, அல்லது சிங்களத் தோழர்கள் அனுபவித்துவரும் அதிகப்படியான உரிமைகள் எங்களுக்கு வாங்கிக் கொடுங்கள் என்ற பொறாமையால் ஏற்பட்ட பூசலுமல்ல, இருசாராரையும் மோதவிடுவதன் மூலம் முடிவு காலக்கடலில் மெதுவாக மிதந்து செல்லலாம் என்று நினைக்கிறது சர்க்கார். அரசியல் உரிமை கேட்பது எப்படி வகுப்புக் கலவரமாகும்? அந்த வகுப்பு கலவரத்தை எந்தநாளும் உண்டாக்க முடியாது. அந்த நோக்கத்துக்காக ஏற்பட்டதல்ல திராவிட முன்னேற்றக் கழகம். தென்னாட்டில் ஆரியர் திராவிடர் பிரச்சினை

இருப்பதைப்போல், இங்கேயும் சிங்களவர்—தமிழர் பிரச்சினைகளைப் பின்னிவிடலாமா என்று யார் நினைத்தாலும், எந்த கட்சி முடிவு கட்டினாலும், எந்த பலம் பொருந்திய சர்க்கார் நினைத்தாலும் நிச்சயமாகத் தோல்வியடையும். அங்கே ஆரியர் திராவிடர் பிரச்சினை போன்றதல்ல இங்கேயுள்ள பிரச்சினை. இங்கே இருக்கும் சிங்களத் தோழர்களுக்கும் திராவிடத் தோழர்களுக்கும் சமூக சம்மந்தமாக எந்த ஏற்றத் தாழ்வுமில்லை. பொதுவாக நாங்கள் இலங்கையைச் சுற்றிப் பார்த்ததில் முக்கியமாகத் தெரிந்துக் கொண்டது, இனம், நிறம், இடம் என்ற பாகுபாடில்லாமல் மக்கள் அனைவருமே ஒரே இனத்தவர்போல் வாழ்கின்றார்கள். இந்த இடத்தில் எப்படி வகுப்பு பூசல்கள் எழ முடியும், தீர்க்க முடியாதென்ற நிலையிலே வளர்ந்து வரும் அரசியல் பிரச்சினையை மறைக்க வகுப்புக் கலவரம் என்ற போர்வையைத் தேடுவது அரசியல் விவேகமல்ல, எல்லா இன மக்களும் ஒன்றாக வாழவேண்டுமென்று நினைக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கையைப்பொறுத்த வரை கண்டிப்பாக வகுப்பு கலவரத்துக்கு இடம் கொடுக்காதென்பதை உறுதியாகச் சொல்லுகின்றோம்.

இந்தியாவில் வகுப்புக் கலவரங்கள் இருப்பதற்குக் காரணம் வகுப்பின் பேரால் சாத்திரத்தாலும், சம்பிரதாயத்தாலும் உயர்வைக் கற்பித்துக் கொண்டு 'தொடாதே' என்று அதட்டும் அறிவிலி அங்கே இருக்கின்றான். காலில் செருப்புப் போட்டுக்கொண்டு 'அக்ராகாரத்தில் நுழையாதே', என்று சொல்லும் கயவாளி இருக்கின்றான். சமூகத்தின் நெஞ்சை நெறித்துக் கொல்லும் சண்டாளன் இருக்கின்றான். மனித

வர்க்கத்தில் பேதா பேதத்தை உண்டாக்கி அதன் நிழலில் உல்லாசமாக வாழும் உலுத்தன் இருக்கின்றான். 'நாங்கள்தான் இறைவனுக்கு அடுத்தபடி என்று சொல்லும், நாதடித்த நாடோடியிருக்கின்றான். நாங்கள் உழைக்க மாட்டோம், மற்றவர்தான் எங்களுக்கு உழைத்துப்போடவேண்டும் என்று சொல்லும் ஊதாரி அங்கே இருக்கின்றான். ஆகவேதான் அந்தக் கொடுமைகளை ஒழிக்க அங்கே வகுப்புப் பூசல்கள் இருக்கின்றது. இருக்கத்தான் செய்யும், ஆனால் அந்தக் கொடுமைகள் ஒன்றுமேயில்லாத இங்கே எப்படி வகுப்புப் பூசல்கள் உண்டாக்க முடியும். உண்டாகவும் முடியாது. அந்த விதமான பூசலை யுண்டாக்க யாராவது எண்ணினால் நிச்சயமாக அவர்கள் தோல்வி கொள்வார்கள் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எச்சரிக்கை செய்கிறேன்.

இலங்கையில் எங்கள் கணக்குக்கு அதிகமாக வளர்ந்திருக்கும் இயக்கத்தின் சக்தியை எப்படி பயன் படுத்துவது என்பதுதான் இப்போது எங்கள் கவலை. "திராவிட நாடு திராவிடர்க்கே", என்ற பேரொலி இங்கே மட்டிலும் எழவில்லை. இதே நேரத்தில் வியட்நாமில், பர்மாவில், மலேயாவில், சிங்கப்பூரில், கோலாலம்பூரில், இரங்கூனில், பீஜித் தீவில், அந்தமானில், பம்பாயில், ஐதராபாத்தில், இன்னும் உலகத்தின் எங்கெந்த பகுதிகளில் திராவிடர்கள் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம், 'திராவிட நாடு திராவிடர்க்கே' என்ற பேரொலி வான்முட்ட எழும்பிக்கொண்டிருக்கின்றன. அகில உலகத்தில் வளர்ந்துவரும் சக்தியை ஒன்றாகத் திரட்டி, கண்டிப்பாக திராவிட நாட்டைத் தனி நாடாக்குவோம்

என்ற நம்பிக்கை நாளுக்குநாள் நெருங்கி வந்துகொண்டிருக்கின்றது. நாங்கள் இங்கே வந்தபிறகு சென்ற திங்கள் 25, 26ல் திருச்சிக்கு அருகாமையிலுள்ள லால்குடியில் மாவட்ட மாநாடு ஒன்று சிறப்பாக நடைபெற்றிருக்கின்றது. அதில் அறிஞர் அண்ணு பேசுகிற போது, தோழர் சம்பத் அவர்களை பர்மாவுக்கு அனுப்பி அங்கு கரேன்கள் வாழும் பகுதியைப் பார்த்துக்கொண்டு வரும்படி அனுப்பி வைக்கப்போகின்றேன் என்று பேசி இருக்கின்ருர். அங்கெல்லாம் போய் என்ன செய்யப் போகின்றீர்கள் என்று கம்யூனிஸ்டு தோழர்கள் கேலியும் கிண்டலுமாகப் பேசியிருக்கின்ருர்கள். அவர்களைப் பார்த்துக் கேட்கிறேன். இந்தியாவில் தோழர் கோபாலன் அவர்களுக்கு ஏற்பட்ட இடுப்பு வலிக்கு மாஸ்கோ ஆஸ்பத்திரியில்தான் மருந்துண்டு என்று அவர் அலைகிறபோது திராவிட நாட்டுப் பிரிவினைக்கு ஏன் பர்மாவில் மருந்திருக்கக்கூடாது. யோசிக்காமல் எதையும் பேசுகிற போட்டியில் யாருக்காவது பரிசு கிடைக்குமென்ருல் அந்த முதல் பரிசு கம்யூனிஸ்டு தோழர்களுக்குத்தான் கிடைக்கும். அவர்கள் தலைவர்கள், பலரை பலி கொடுத்த பிறகு சொல்வார்கள், நாங்கள் மார்க்கசியத்தைத் தவருகப் புரிந்துகொண்டதின் விளைவு இப்படியாய்விட்டது என்று. ஒவ்வொரு நேரமும் மார்க்கசியத்தைத் தவருகப் புரிந்துகொள்ளுகிற அவர்கள் எங்கே மக்களுக்கு சரியான வழியைக் காட்டப் போகின்ருர்கள் என்ற காரணத்தாலேயே நாங்கள் அவர்களை லட்சியப்படுத்துவதில்லை. புத்தர் ஒரு பார்ப்பனனைப் பார்த்து காசிக்குப் போக வழி எது என்று கேட்டார். அவன் வேண்டுமென்றே தவருன வழியைக் காட்டிவிட்டான் புத்தருக்கு புத்தியிருந்த

காரணத்தால் விரைவிலேயே சரியான வழியைக் கண்டு பிடித்து காசிக்கு வந்து சேர்ந்தார். அந்த பார்ப்பான் போல தவருன வழியையே கம்யூனிஸ்டு தோழர்கள் மக்களுக்குக் காட்டிக்கொண்டிருந்தால், மக்கள் புத்தி சாலிகளாக மாறும்போது சரியான வழியைக் கண்டு பிடித்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையிலேயே தி. மு. கழகம் கார்த்துக்கொண்டிருக்கிறது.

அந்தப் பார்ப்பனனுகிலும் காசிக்குப் போகும் உண்மையான வழியைத் தெரிந்து வைத்துக்கொண்டு வேண்டுமென்றே அப்படிச் செய்தான். இவர்களுக்கு உண்மையான வழியே தெரியவில்லை. ஒரு கட்சியின் கோட்பாடுகளை அதன் முக்கியமான தலைவர்களே தெரிந்துகொள்ளாமலிருப்பது எவ்வளவு கேவலம் என் பதை அவர்கள் உணருவதே இல்லை. இப்படி ஒரு விசித்திர கட்சியாக விளங்கிக்கொண்டிருக்கிறது. இலங் கையைப் பொறுத்தவரையிலும் கொழும்பு நகரில் மாத்திரந்தான் கம்யூனிஸ்டு கட்சி இருக்கிறது. தோட் டத் தொழிலாளர்கள் இடையிலே அதனுல் புக முடிய வில்லை. காரணம் அங்கே வேரோர் கட்சி இடம் பிடித்துக்கொண்டிருக்கிறது, ஆனுல் தி. மு. கழகம் இலங்கை ஐக்கிய தேசிய கட்சி இருக்கும் இடத்திலும், இலங்கை இந்தியர் காங்கிரஸ் கட்சி வேலை செய்து கொண்டிக்கும் இடத்திலும், இலங்கை சமசமாஜ கட்சி இயங்கிக் கொண்டிருக்கும் இடத்திலும், சோஷயலிஸ்டு கட்சி இருக்கும் இடத்திலும், தமிழரசுக் கட்சி இருக் கும் இடத்திலும், மேற்சொன்ன கட்சிகள் ஒன்றுமே இல்லாத இடத்திலும் திராவிட முன்னேற்றக் கழகம் இயங்கிக்கொண்டிருக்கின்றது. அதன் காரணமென்ன

என்பதைக் கண்டுபிடிக்க நீங்கள் அதிக தொல்லைப்பட வேண்டியதில்லை.

கம்யூனிஸ்டு கட்சி வைத்துக்கொண்டிருக்கின்ற பொருளாதாரத் திட்டம், சமசமாஜக் கட்சி வைத்துக் கொண்டிருக்கின்ற சமதருமத் திட்டம், தமிழரசுக் கட்சி வைத்துக்கொண்டிருக்கின்ற நாட்டுப் பிரிவினைத் திட்டம், இவ்வளவுக்கும் மேலாக இந்தக் கட்சிகள் அனைத்துமே இதுவரையில் வெளியே சொல்லப் பயப் பட்டுக்கொண்டிருக்கின்ற சமூக சீர்திருத்தத் திட்டம் ஆகிய கொள்கைகள் அனைத்துமே தன்னகத்தில் கொண் டிருக்கின்ற காரணத்தினால்தான் பல்வேறு இடங்களில் பல்வேறு வேலைகளைச் செய்துகொண்டிருக்கின்றது தி. மு. க. இதை வேண்டாமென்று ஒதுக்கித்தள்ள வேறு எந்தக் கட்சியாலும் முடியாத அளவுக்கு மக்களுடைய அளவுகடந்த அபிமானத்தைப் பெற்றிருக் கிறது. இங்கே பல்வேறு கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேசியபின் பிரதமர் டட்லி சேனு நாயகா அவர்களை சந்திப்பதற்காக பேட்டி கேட்டிருந்தோம். முதலில் எது சம்மந்தமாக காண விரும்புகிறீர்கள் என் பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதைக் குறித்தனுப்புங்கள் என்று எழுதியிருந்தார். பல கேள்விகளை எழுதி, இவைகளுக்கு விளக்கம் தெரிந்து கொள்வதற்காகவே தங்களைக்காண விரும்புகிறோம் என்றோம். அந்த மனு அவருக்கு சேர்ந்த பிறகு நான் இலண்டன் போவதற்கு முன்பாக பலரைச் சந்திக்க நேரத்தைக் குறித்துவிட்டேன், ஆகவே இயலாமைக் காக வருந்துகிறேன், என்று சொல்லிவிட்டார். முதலில் காரணத்தைக் கேட்டார். பிறகு எங்கள் காரணங்களை

யேந்திய கடிதம் போய்ச் சேருவதற்குள் நேரத்தையும் மற்றெல்லோருக்கும் பங்கிட்டு அளித்துவிட்டார். அரசியலில்தான் எம்மவருக்குப் பங்கில்லையென்ருல் நேரத்தில் கூடவா எங்களுக்கு பங்கில்லை என்று நினைத்துக்கொண்டோம். நேரம் சிறகில்லாப் பறவை. நேரம் சிக்கனமாக உபயோகிக்கவேண்டிய ஒரு அருமையான பொருள்தான். ஆனுல் அந்த சிக்கனத்தை வெளிநாட்டிலே இருந்து வந்திருக்கிற எங்களிடத்தில் கையாண்டாரே என்பதற்காக வருந்துகிருேம்.

ஆகவே நாங்கள் இலங்கையில் கண்டதை கேட்டதை, எங்கள் பொதுச் செயலாளர் அண்ணு அவர்களிடம் சொல்லி இலங்கைக்கென்றே தனியாக திட்டங்களைத் தயார் செய்து விரைவில் அனுப்பும்படி ஏற்பாடு செய்ய இருக்கிருேம். இதற்காக இங்கே எங்களை அனுப்பிய அறிஞர் அண்ணு அவர்களுக்கும், பல கூட்டங்களை ஏற்பாடு செய்து தந்து எங்களோடிருந்து ஒத்துழைத்த இலங்கை தி. மு. க. நிர்வாகிகளுக்கும், இயக்கத்திற்கு பேராதரவு தந்த உங்களனைவர்க்கும், நாங்கள் இங்கே வந்து போக அனுமதி தந்த வெளியேற்ற குடியேற்ற அதிகாரிகளுக்கும், மற்ற எல்லா கட்சி தோழர்களுக்கும், எங்கள் சுற்றுப்பிரயாண நிகழ்ச்சிகளின் முழு விபரங்களை ஈன்றமட்டில் வெளியிட்ட பத்திரிகை ஆசிரியர்களுக்கும், சலிக்காது எங்களை சந்தித்து பல சந்தேகங்களுக்கு விளக்கம் தெரிந்துக்கொண்ட சந்தேகத் தோழர்களுக்கும் மற்ற அனைவருக்கும் என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு நாளை காலை என் தாயகம் திரும்புகிறேன்

என்ற நற்செய்தியோடு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

## கலை எதற்கு ?

4—5—53ல் இலங்கை வானொலியில் 'கலை எதற்கு' என்ற பொருள் பற்றி பேசி பதிவு செய்த சொற்பொழிவு.

*கலை, கலைக்காகவா, கலை, மனித வர்க்கத்தின் முன்னேற்றத்திற்கா, கலை, பல கருத்துக்களை அணிகலன்களாகக் கொண்டு கண்டுகளிப்போர் உள்ளத்தை அள்ளும் சாதனமா, அல்லது சமுதாய மாறுதலைக் காட்டும் காலக்கண்ணாடியா, என்ற பகுதிகளை ஆராய்வோம்.*

*எப்படி நீரால் நீருக்கே நன்மையில்லையோ, எப்படி காற்றால் காற்றுக்கே நன்மையில்லையோ, எப்படி நிலத்தால் நிலத்துக்கே நன்மையில்லையோ, அதைப்போல் கலையால் கலைக்கே நன்மையில்லை.*

*நீரைக்கொண்டு நிலத்தைப் பயிர் செய்வதும், நீரால் குளித்து உடற் தூய்மையடைவதும், நீரைக் குடித்து தாகவிடாயைத் தீர்த்துக் கொள்வதும் நன்மையைப் பயப்பது என்பது மாத்திரமன்னியில் இன்றியமையாதது என்ற ஆராய்ச்சியில் இறங்கும்போது நீரும் நிலமும் தொடர்பு கொண்டாலன்றி எப்படி விளைபொருள்களைக் காணமுடியாதோ, நீரும் உடலும் தொடர்பு கொண்டாலன்றி எப்படி உடலழுக்கைப் போக்கிக்கொள்ள முடியாதோ, நீரைக் குடித்தாலன்றி*

எப்படித் தாகத்தைத் தீர்த்துக்கொள்ள முடியாதோ, அதேபோல் கலையை மக்கள் ரசித்தாலன்றி உள்ள மகிழ்ச்சியைக் காணமுடியாது.

பொதுவாகவே உலகத்தின் இயற்கை நியதி ஒன்றை ஒன்று தொட்டாலன்றி ஒருவித பயனோ, மாறுதலோ, இன்பமோ, இயற்கை சக்திகளை செயற்கையிலிடைக்கும் தன்மையோ ஏற்படுவதில்லை என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

எங்கேயோ காட்டில் நின்ற மரம் யாழின் உடலாகவும, நிலத்தின் அடிவாரத்தில் கிடைத்த இரும்பால் செய்யப்பட்ட கம்பிகள் யாழின் தந்திகளாகவும் அமைத்து அவைகளை நம்முடைய விரல்களால் தடவினாலன்றி நாதம் எழும்புவதில்லை. அந்த இன்பமான இசையை நாம் கேட்பதற்கு, மரம், இரும்பு, விரல்கள் ஆகிய மூன்றும் சேர்ந்து இசையை எழுப்பி நம்மை இன்புறச் செய்கிறது. அதேபோல் கவிஞனுடைய கற்பனைகளை அவனே எழுதி அவனே படித்து அவனே அழித்துவிட்டுப் போய்விட்டால் அதனால் மக்களுக்கு யாதொரு பயனும் ஏற்படுவதில்லை. அந்தக் கவிஞன் எழுதிய கவிதைகளை மக்கள் மன்றத்தின் முன்வைத்தாலன்றி, அது பெருமை பொருந்திய கவி யென்றோ சிறுமை நிரம்பிய கவியென்றோ தீர்ப்பைப் பெறுவதில்லை. ஆகவே ஒன்றை யொன்று தொட்டாலன்றி பயன்காண முடியாதென்ற முடிவுக்கு வருகின்றோம்.

"மக்கள் மெய்த்தீண்ட லுடற்கின்பம் மற்றவர் சொற்கேட்டால் இன்பம் செவிக்கு"

மக்களுடைய சொற்களைக் கேட்டால் செவிகளுக்கு மட்டுந்தான் இன்பம், ஆனால் அவர்கள் உடலைத் தீண்டினால், உடலுக்கும் உள்ளத்திற்கும் இன்பம் என்கிறார், உலகப் பொதுமறை தந்த பொய்யா பெருந்தகை வள்ளுவர். ஆகவே, கலை, மக்கள் உள்ளத்தைத் தொட்டாலன்றி பயனற்றதாய், காட்டில் காய்ந்த நிலவாக, கற்பாறையில் விதைத்த விதையாக, கடலில் பெய்த மழையாகப் போய்விடும்.

ஒவ்வொரு நாட்டிலும் கலையை வளர்த்து வெளி யுலகுக்குக் காட்டவில்லையானால், கண்ணாடி அறையி லிருந்து பேசுகின்றவனுடைய பேச்சை வெளியே இருப் பவர்கள் கேட்கமுடியாமல்போய், அவன் வாயசைப் பதை மட்டிலும் பார்த்துக்கொண்டிருப்பதைப்போன்ற நிலையேதான் ஏற்படக்கூடும்.

ஆகவே கலை பொதுமக்களுக்கு மாத்திரம் பயன் படவில்லை. அரசர்களுக்கும், அவர்கள் ஆண்ட காலத் துக்கும் அவர்கள் வகுத்திருந்த அரசியல் முறைகளுக் கும் பயன்பட்டிருக்கிறது. உதய கால கவிஞர்கள் முதல் இன்றைய புரட்சிக் கவிஞர்கள் வரை, ஓவிய புலவர்களுக்கு, சிந்தனையாளர்களுக்கு, சீர்திருத்தவாதி களுக்கு, மிகவும் பயன்பட்டிருக்கிறது. ஒரு நாடு வீழ் வதற்கும் அந்த நாட்டின் கலையே பயன்பட்டிருக்கிறது.

'மகாகவி ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகங்கள் பல வற்றுள் ஒரே ஒரு நாடகம் இருந்தாலும் நாங்கள் எங் கள் நாகரீகத்தைக் காப்பாற்றிக்கொள்வோம் என்று ஆங்கிலப் பெருமக்கள் சொல்வதும், தத்துவஞானி சாக்ரடீஸ் தந்த அரிய கொள்கைகள் அகிலத்தில்

உயிரோடிருக்கும்வரையில் கிரேக்கத்தின் கீர்த்தி குன்ருது என்று ஏதன்ஸ் நாட்டார் எக்காளமிடுவதும், ரூஸோவின் ஜனநாயகக் கோட்பாடுகளும், வால்டேரின் எழுதுகோல் அளித்த வன்மைமிக்க கருத்துக்களும் இருக்கும்வரை ஒரு முடியாட்சியே தோன்ற முடியாது என்று பிரான்சு மக்கள் பெருமைபடுவதும், அட்லாண்டிக் மாகடலும், அமெரிக்க நாடும் இருக்கும்வரை கடற்தந்தை கொலம்பஸ் பெயரும் மறையாது என்று ஸ்பெயின் நாட்டு மக்கள் பெருமைபடுவதும், கங்கைக் கரையும் மநுநீதியும் இருக்கும்வரை எங்கள் வளம் குன்ருது என்று ஆரியர்கள் அகங்களிப்பதும், காவிரியின் வற்ருத நீர் வளமும், வள்ளுவன் அளித்த குறளும், வேறு எம்மொழியின் படையெடுப்பாலும் அழியாத தமிழ் மொழியும் இருக்கும்வரை தமிழர்கள் மேன்மை குன்ருது என தமிழ் மக்கள் தன்னம்பிக்கைக்கொள்வதும், கண்டியும் கதிர்காமமும், தொன்னூறு மன்னர்கள் வழி வழியே ஆண்ட அனுராசபுரம் என்ற இடங்கள் இருக்கும்வரை சிங்களத்தின் செல்வாக்கு குறையாது என்று சிங்களத் தோழர்கள் செப்புவதும் எதனுல்? அவரவர்கள் முன்னேர்கள் கண்டதை கேட்டதை செய்ததை கலேயுருவில் நமக்குக் காட்டியதாலன்ருே. அந்த கலே அழியாதிருக்க, கல்லிலும் கட்டையிலும் மலேகளிலும், குகைகளிலும் குடைந்து வைத்தது எதனுல்? மக்களுக்கு பயன்படவேண்டுமென்ற எண்ணத்திறுல் அல்லவா.

ஏன், ஒரு காலத்தில் கலேயின் சின்னமாகவே கோயில்கள் விளங்கின. ஒரு காலத்தில் கோயில்கள் கலேயை வளர்த்தது என்ற நிலேயிலிருந்து இன்று கலே

கோயில்களை வளர்க்கின்றது என்ற நிலைக்கு வந்திருக்கிறது. கலைக்கு இருப்பிடம் கோயில்கள் என்ற நிலைக்கு மாருக கவலைக்கு இருப்பிடமாக மாறிவிடக்கூடாது என்பதே பல அறிஞர்களுடைய கவலை.

கலை பொதுவானது. எந்த கலையும் யாரும், எந்த நாட்டாரும் ரசிக்க வேண்டுமென்ற நோக்கத்தாலேயே இதுவரை நடந்து வந்திருக்கிறது குறள் தமிழர்களுக்கு மாத்திரம் சொந்தமாயில்லாமல் பதினெட்டு மொழிகளிலே மொழி பெயர்த்திருப்பதற்குக் காரணம், குறள் கருத்தின் கலையின்பால் மக்களுக்கிருந்த ஆர்வத்தை காட்டுகிறதன்ரே. அதேபோல் கலை மக்களுக்கு பொதுவாக பயன்படுகிற ஒரே காரணத்திருல்தான் உலகம் ஒரு நாளில் எவ்வளவு வேகமாக சுற்றுமோ அதைவிட வேகமாக உலகத்தை சுற்றிக்கொண்டிருக்கின்றது கலை.

இந்தியாவில் எங்கேயோ ஒரு மூலையில் ஒலி பரப்பப்படுகிற கலையை அதே நேரத்தில் சிங்களத்தில் கேட்டுக் கொண்டிருக்கின்ருர்கள். இங்கிலாந்தில் பேசப்படுகிற அரசியல் கலையை அமெரிக்காவில் அதே நேரத்தில் கேட்டுக் கொண்டிருப்பார்கள். அமெரிக்காவில் பேசப்படுகிற பொருளாதாரக் கலையை அதே நேரத்தில் ஜெர்மனியில் கேட்டுக் கொண்டிருப்பார்கள். ஜப்பானில் பேசப்படுகிற தொழிலாதாரக் கலையை அதே நேரத்தில் அகில உலகத்தாரும் கேட்டுக் கொண்டிருப்பார்கள். சீனத்தில் பேசப்படுகிற சமுதாயக் கலையை ஜெகமெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கும் என்ருல் இது எதைக் காட்டுகிறது? கலை கலைக்காக இருந்தால் கடலில் எறிந்த கல்லைப் போன்றதாகும். கலை மேற்சொன்ன

(கடலில் எறிந்த கல்லின்) நிலையயடைந்திருந்தால் அது உலகம் சுற்றியிருக்காது.

கலை, கருத்திலிருந்து புறப்பட்டு கல்லில் புகுந்து, கட்டையில் குடியேறி, கடலில் மிதந்து, கம்பியில் நுழைந்து, காற்றில் கலந்து, அணுக்களைத் தொட்டு, ஈத்தரைத் தாவி, ஆகாயத்தில் பிரயாணம் செய்துக் கொண்டிருக்கின்றது என்பதைக் கண்கூடாகப் பார்க்கின்றோம்.

கலையை யாரும் திரும்பிப் பார்க்காமல்' கலை கலைக்காகவே இருக்கட்டும், அதற்கும் நமக்கும் என்ன தொடர்பு என்று மக்கள் அதை அநுவசியமாக விட்டு விட்டிருந்தால் இன்று நாம், நாடகத்தை, ஓவியத்தை, காவியத்தை, கலை என்று சொல்லத் தேவையில்லை. நாடகத்தில் சில கருத்துக்களை அமைத்து நடிகர்களை உண்டாக்கி அழகு செய்து ஆடுபவர்களையும், அதைக் காண வருபவர்களையும் ஆனந்தமடையச் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. நாடகத்தைப் பார்க்கின்றவர்கள் முதல் நடிக்கின்றவர்கள் ஈறாக அனைவருமே மேடையில் ஏறி அவரவர்கள் வாய்க்கு வந்ததைச் சொல்லி, கையும் காலும் திரும்பிய பக்கம் எல்லாம் கூத்தாடும்படி விட்டுவிடலாம். அப்போது அதுவும் ஒரு பைத்தியக்காரக் கலை என்ற பெயர் பெற்றுவிடும். ஆகவே கலையை வெகு கவலையோடு வளர்க்க வேண்டிய பொறுப்பு மக்களைச் சார்ந்துவிடுகிறது என்ற முடிவுக்கு வந்துவிடுகிறோம்.

அடுத்தபடி, கலையை நாம ஏன வளர்க்கவேண்டும் என்ற கேள்வி எழும்பலாம். ஐயம் தோன்றலாம்.

குழந்தைகளை நாம் ஏன் வளர்க்க வேண்டும், செடி கொடிகளை நாம் ஏன் வளர்க்கவேண்டும், சில சாதுவான நன்றியுள்ள பிராணிகளை நாம் ஏன் வளர்க்க வேண்டும், பறவைகளை ஏன் நாம் வளர்க்க வேண்டும், பயிரினங்களை ஏன் நாம் வளர்க்க வேண்டும், கல்வியை நாம் ஏன் வளர்க்க வேண்டும், அரசியலை ஏன் நாம் வளர்க்க வேண்டும், அன்பை ஏன் நாம் வளர்க்க வேண்டும், அறிவை ஏன் நாம் வளர்க்க வேண்டும் என்ற கேள்விகளுக்கு ஒப்பானதாகும்.

நமது பிற்கால பாதுகாப்புக்காக நாம் ஈன்ற மக்களை வளர்ப்பதைப் போல, நமது அன்றாட தேவைகளுக்காக செடி கொடிகளையும் பயிரினங்களையும் வளர்ப்பதைப்போல, வீட்டுப் பாதுகாப்புக்காகவும் உணவுப் பொருள்களுக்காகவும் சில பிராணிகளை வளர்ப்பதைப்போல, குழந்தைகள் மகிழ்ச்சியுற சில பறவைகளை வளர்ப்பதைப்போல, வாழ்க்கைக்காகவும் அறிவு வளர்ச்சிக்காகவும் நாம் கல்வியை வளர்ப்பதைப் போல, நாடு நலமடைய நாம் அரசியலை வளர்ப்பதைப் போல, சமுதாயம் ஒற்றுமை காண்பதற்காக நாம் அன்பை வளர்ப்பதைப்போல, உள்ளத் தூய்மையும், வாழ்வில் உயர்ந்த லட்சியங்களையும் கொள்ள நாம் அறிவை வளர்ப்பதைப்போல, கலையை கவலையோடு வளர்க்க வேண்டியவர்களாகிறோம். கலை ஒன்றுதான் குன்றின் மேலிட்ட விளக்கென ஒளிவிடத் தகுந்தது. அந்த ஒளியிலேதான் சமுதாயம் இழந்தவைகளைக் கண்டுபிடிக்கமுடியும்.

புகழேணியில் ஏறி அந்த மாபெரும் மனித சமுதாய மெனும் கீர்த்தி குன்றத்தின் சிகரத்தில் வீற்றிருக்

கும் கலையை கண்ணில்லாத குருடனும், காதால் கேட்க முடியும், கையில்லாத முடவனும் கண்ணாலும் மனதாலும் தொடமுடியும். காலில்லாத நொண்டியும் கருத்தால் அணுகமுடியும். ஆனால் நெட்டிரும்புபோல் நெகிழாத மனமுடையவனால் நிச்சயமாக அதை அணுக முடியாது. அது, மக்கள் அடைந்த நாகரீகப்படி. அறிவு வளர்ச்சியின் முத்திரை. கண்டிப்பாக சமூகம் வளர்ந்தே தீரும் என்று விநாடிக்கு விநாடி விட்டுக் கொண்டிருக்கும் அறைகூவல். கலை மக்களுக்கானால் கவலை தீர மார்க்கமுண்டு. கலை கலைக்காக என்பது யாரோ சில சுயநலமிகள் கட்டிவிட்ட கதை. ஆகவே கலை நமக்காகத்தான். வணக்கம்.

திருச்சி தீப்பொறி அச்சகத்தில்
49-வது பக்கத்திலிருந்து அச்சிடப்பட்டது.